கழக வெளியீடு : ௲௮௫

இளங்கண்ணன் நினைவு மலர்

ஆசிரியர் :

இளங்கண்ணன்

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: March, 1951

Published by:

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.

பதிப்புரை

மக்கள் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகள் பல. அவையெல்லாம் இன்பதுன்ப மென்னும் இரண்டினுள் அடங்குவன; அவை, என்றும் எங்கும் எல்லாமக்கட்கும் நிகழ்வதைக் காண்கின்றோம்.

ஆனால், அறிஞர்பால் நிகழும் இன்பதுன்ப அலைகள், மக்கட்கு நன்மையும் ஒழுக்கமும் இன்பமும் தரும் தன்மையன.

அம்முறையில் தம் வாழ்க்கையில் நடந்த சில உண்மை நிகழ்ச்சிகளையும், அறிவுத்துறையின் மிக்க செயல்களையும், தெள்ளத் தெளிந்த உயர்ந்த செந்தமிழ்த் தனி வடிவ உரை நடையில் நூல்வடிவாக ஆக்கி அறிஞர், திரு. இளங் கண்ணன் அவர்கள் உதவியுள்ளார்கள். அதனைச் செவ் விய முறையில் கண்கவர் வனப்பிற்றாய்ச் செப்பனிட்டு வெளியிடுகின்றோம். இந்நூல் கற்றோர்க்கு இன்பம், தமிழ்ப்பணி, ஒழுக்கம் இவைகளை ஒருங்கேதரும் தகையது.

இதனை உயரிய முறையில் யாத்துதவிய பேரறிஞர், திரு. இளங்கண்ணன் அவர்கட்கு, எம் உளமார் நன்றி.

இந்நூலைத் தமிழ் நன்மக்கள் யாவரும் வாங்கிக்கற்று நற்பயன் எய்துவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

இளங்கண்ணன் நினைவுமலர்

1. பெய்யெனப் பெய்யுமழை

சீகாழி என்ற ஊர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஓர் சிறந்த பாடல்பெற்ற ஊர். அவ்வூரில் தொண்டை மண்டல வேளாளர் வகுப்பைச் சார்ந்த சீகாழி முதலியார் குடும்பத்தினர் பரம்பரையாகப் பெருநிலக்கிழவர்களா யிருந்து வருகின்றனர். தஞ்சை மாவட்டத்தில் இக்குலப் பெருநிலக்கிழவரில் தலையாயவர் திருவாரூரை யடுத்த வடபாதிமங்கலத்தார் ஆவர். அடுத்தபடியிலுள்ளவர்கள் சீகாழி முதலியார் குடும்பத்தினராவர்.

இக்குடும்பத்தில் என் தாயின் பாட்டனர் சுப்பா முதலியார் பெண் கொண்டிருந்தார். அப்பெண், தலைச்சன் பிள்ளைப்பேற்றின்போது இறக்க, சீகாழி முதலியார் குடும்பத்தினரே வேறு ஒரு பெண் பார்த்து அவருக்குக் கட்டி வைத்தனர். சற்றேறக்குறைய 1000 (ஆயிரம்)* வேலி நன்செய், புன்செய் நிலங்கட்குத் தலைவராயிருந்த குடும்பச் செல்வர் இறந்துபோனர். அடுத்தபடியாக அப்பெருஞ் சொத்துக்குடையவர் சிறுவராயிருந்தமையின், என் தாய்ப் பாட்டனரே அந்நிலங்களைச் சீகாழிக்கடுத்துள்ள ஒரு சிற்றூரில் இருந்து கண்காணித்து வந்தார். அவர் சீகாழி முதலியார் குடும்பச் சிறுவர்பால் மிக்க அன்பு காட்டி, நிலங்களை மிக விழிப்புடனும் செல்வாக்குடனும் கண் காணித்து வந்தார்.

அவருக்கு எட்டு ஆண் குழந்தைகள் உண்டு. இவ் வளவு பெரிய நிலப்பகுதியை ஆட்சிபுரிந்தவரினும், அவர்

* வேலி, 6⅔ ஏக்கர் நிலம்.

மிகவும் எளிய வாழ்க்கையையே மேற்கொண்டார். சிறந்த சிவப்பற்றுடையவர். அவருடைய பணியாட்களும், காரியக் காரர்களும், குத்தகைதாரர்களும் அவருக்குப் பெரு மதிப்புக்கொடுத்து வந்தனர். அவர்தம் அருமை மனைவி தம் கணவரது மனங்கோணுது, அவர் சிவவழிபாட்டிற்கு வேண்டிய பூக்களையும், இலைகளையும், பால் பழம் முதலிய வற்றையும் தயாரித்து அவருக்கு உழுவல் அன்புடன் பணிசெய்வதே தன் வாழ்க்கையின் குறிக்கோள் எனக் கொண்டு ஒழுகிவந்தனள்.

சப்பா முதலியார் தம் அலுவல்களை முடித்துக் கொண்டு வீட்டிற்கு இரவு எந்நேரம் வரினும் விழித் திருந்து அவரை அன்புடன் வரவேற்றுச் சோறு படைத் தல் அவ்வம்மையாரின் வழக்கம். தப்பித்தவறித் தன்னை யறியாமல் யாதாமோர் இரவு அவர் வரும் நேரம் தான் தூங்கிவிட்டால், தன் தலைவர் வந்ததும் திடுக்கிட்டெழுந்து உடனே சென்று குளித்துவிட்டு வந்து அவருக்குச் சோறு போடுதல் அவ்வம்மையின் அருங்குணங்களிலொன்று. தன் கணவர் ஒவ்வொரு நாளும் எப்பக்கம் அலுவல்மேல் செல்லுகிறுர் எனக் கேட்டறிந்து, தான் வீட்டில் படுக்கும் பொழுது அவர் சென்ற பக்கமே தலை வைத்துப் படுப்பது வழக்கம். இஃது அவ்வம்மையார் தன் கொழுநரிடம் வைத் திருந்த அன்பையும் மதிப்பையும் வலியுறுத்துகிறது.

அவ்வம்மை தம் எட்டுக் குழந்தைகளே தம் அருமந்த செல்வமாகக்கொண்டு அவர்களைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்து வந்தாள். தன் அகமுடையார், இவ்வளவு செல்வாக்குப் பெற்றிருந்தும், குடும்பத்தை எளிய முறையி லேயே நடத்திவந்தாள். காலையில் எட்டுக் குழந்தைகளையும் வரிசையாக உட்காரவைத்துப் பழைய சோறு போட்டு மகிழ்விப்பாள். யாதாமோர் நாள், போதிய அளவு சோறு இல்லாதுபோயின் ஒவ்வோர் குழந்தை அழத் தொடங் கும். அப்பொழுது எண்மரில் ஒருவர் தனக்கிட்ட பழைய சோற்றையும் அழும் தம்பிக்கிட்டுச் செல்வது உண்டு. அவ்வாறு அழும் இளவலுக்குத் தன் கவளத்தை யளித்

தெழும் பெருந்தகை, என் தாயைப்பெற்ற தந்தை பொன்னம்பல முதலியார் ஆவார் என்று கண்களில் நீர்ததும்பப் பெருமிதத்துடன் என் தாய் சொல்லக் கேட்டுள்ளேன்.

"என் அண்ணி 'மழை பெய்'யென்றால் பெய்யுமே! என்று உளப்பூரிப்புடன் கூறுவது என் தாய்ப்பாட்டனரின் வழக்கம்,'' என என் தாய் மூலம் கேள்விப்பட்டுள்ளேன். இதை மெய்ப்பிக்கப் பொன்னம்பல முதலியார் ஒரு நிகழ்ச்சியைப் பிறர்க்கெடுத்துக் கூறுவதுண்டு. அது வருமாறு:—

சுப்பாமுதலியார், சொழிமுதலியார் நிலங்களைப் பார்த்து வந்த காலத்தில் ஒருதடவை மழையில்லாததால் பயிர்களெல்லாம் வாடி, குளங் குட்டைகள் நீர்வற்றிக் கால் நடைகளும் வேளாண்மை செய்வோரும் மிக வருந்தினர். குத்தகைதாரர் சிலரும் குடியானவர் சிலரும் சுப்பா முதலியாரைப்பார்த்துத் தங்கள் துன்ப நிலையைத் தெரிவித்துப் போகவந்தனர். முதலியார் அவர்கள் திருநீறணிந்து திண்ணையில் அமர்ந்திருந்தனர். இரண்டொரு குழந்தைகள் அவர் பக்கலில் விளையாடிக்கொண்டும், சிலர் அருமைத் தாயிடம் வீட்டின் உட்புறத்தில் கொஞ்சிக்கொண்டும் இருந்தனர். இக்காட்சியைக் கண்டு வந்தவர் தம் இரக்கநிலையையும் சற்று மறந்து, மகிழ்ந்து, பிறகு தம் குறையைக் கூறுவாராயினர். 'ஐயோ! இதுவரை நாங்கள் இப்படிப்பட்ட துன்பத்துக்கு ஆளானதில்லை. ஏரி குளங்கள் எல்லாம் வற்றிப் போயின. பயிர்கள் எரிந்து வருகின்றன. ஆடு மாடுகள் குடிக்கத் தண்ணீரின்றியும், உடலை நனைக்க வழியின்றியும் தவிக்கின்றன. பஞ்சம் தாண்டவமாடும் போலிருக்கிறது. இன்னும் ஒரு வாரத்தில் மழை பெய்யாவிடில் எங்கள்நிலை படுமோசமாகிவிடும். நாங்கள் என்செய்வோம்!' என்று வருந்தி நின்றனர்.

ஐயா அவர்கள் மனம் இரங்கிச் சற்றுச் சிந்தித்து 'நீங்கள் நான் சொல்லுவதுபோல் செய்யுங்கள். எல்லாரும் 'அண்ணி' (தம் அருமை இல்லக்கிழத்தி)யை வணங்கிக்

குறையைச் சொல்லித் திருநீறு பெற்றுவாருங்கள். உங்கள் குறை தீரும்,' எனச் சொல்லியருளினார்.

அவர்கள் அவ்வாறே உட்சென்று அம்மையாரை வணங்கித் தம் குறையை முறையிட்டு நிற்ப, அக்கற்பரசி தம் இருக்கைவிட்டெழுந்து நின்று நிலந்தோய வணக்கம் செய்தபடியே இருக்கும் அவர்களைப் பார்த்து, 'என்ன இது! நீங்கள் என்னை இப்படி வணங்குவது முறையா? எழுங்கள்!' என்று கூற, அவர்கள் எழாராய்த் 'தாங்கள் எங்கள் குறையைத் தீர்த்தருள வேண்டும். 'மழை பெய்க' வெனக் கூறித் திருநீறு கொடுப்பீர்களானால் மழை பெய்யு மென எங்கள் ஐயா அவர்கள் கூறியுள்ளார்கள். அவ்வாறே எங்களைக் காத்தருளல் வேண்டும்,' என இறைஞ்சினர். அவ்வம்மையார் தம் கொழுநர் சொல்லே தம் உயிர் என ஓம்பும் தகைமையுடையவராகலின், சென்று திருநீறு கொண்டுவந்து அவர்களை எழச்சொல்லித் திருநீறு அளித்து, 'மழை பெய்து வளஞ்செய்யும்! கவலை வேண்டாம்,' என்று சொல்லியருளினர். அவர்கள் பெருமகிழ் வெய்தி அம்மையாரிடமும், ஐயாவிடமும் விடைபெற்றுச் சென்றனர்.

அவர்கள் வணங்கிச்சென்ற இரவே, வானம் கருமேகங்களால் சூழப்பட்டு, இடி மின்னலுடன் பெருமழை பொழிந்து, ஏரி குளங்கள் நிறைந்து, பயிர் பச்சைகளும் குடியானவர்களும் மனங்குளிரச் செய்துவிட்டது! அம்மையாரை வணங்கிச்சென்ற குத்தகைக்காரர்களும், குடியானவர்களும் வியப்புற்று மகிழ்ந்து வந்து தம் நன்றியைத் தெரிவித்தனர். ஐயா அவர்கள் தம் இல்லக்கிழத்தியின் மாண்பையும், இறைவனது திருவருளையும் நினைந்து உளம் பூரித்தனர்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

2. கிளம்பு வெளியே!

சுப்பாமுதலியார் அவர்கள் இப்படியாக இல்லறம் நடத்தி வருகையில் முதலாளிமுதலியாரின் மூத்த பிள்ளை குடும்பப் பொறுப்பேற்கும் வயதடைந்தார். இருந்தும் ஐயா அவர்களே நிலபுலங்களைப் பார்த்து வந்தார்கள். முதலாளிமுதலியார் தாம் வயதுவந்த சின்னட்களில் சொல்லுவார் பேச்சைக்கேட்டு ஓர் நாள் ஐயா அவர்களுக்கு ஆள்மூலம் ஒரு கடிதம் எழுதி யனுப்பினர். அப்பொழுது முதலியார் அவர்கள் சீகாழியை யடுத்த ஓர் சிற்றூரில் தம் வீட்டின்முன் நின்று பல்துலக்கிக்கொண்டிருந்தார்கள். பலர் அவர்களைச் சூழநின்று உரையாடிக் கொண்டிருந்தனர். முதலாளியிடமிருந்து முடங்கல் கொண்டு ஆள் வந்ததும், அங்கு நின்ற கணக்குப்பிள்ளையை அருகழைத்து முடங்கலை வாங்கிப் படிக்கச் சொன்னர். அதில் கணக்குகளையெல்லாம் பரிசீலனை செய்ய உடனே ஆள்மூலம் தனக்கு அனுப்பும்படி முதலாளிமுதலியார் பணித்திருந்தார். மானமே உயிரென மதித்தொழுகும் முதலியாருக்கு இம்மாதிரி ஏதோ சொல்லுவார் பேச்சைக் கேட்டுத் தம்மேல் ஐயங்கொண்டு, ஒருநாளும் இல்லாது இப்பொழுது முதலாளி முதலியார், ஆள்மூலம் கணக்குக் கேட்பது வியப்பையும் வருத்தத்தையும் தந்தது. முடங்கலைப் படித்துக் கேட்டவுடனே, தான் கையில் வைத்திருந்த வேலங்குச்சியைக் கீழெறிந்துவிட்டு வீட்டை யணுகினர். அப்பொழுது குளித்துவிட்டுத் தண்ணீர்க் குடம் தாங்கி வீட்டுக்குள் நுழையப்போகும் தன் மனைவியைப் பார்த்து, 'வை குடத்தைக் கீழே!' என்றனர். அவ்வம்மை விடை பகராது குடத்தை வாயிற்படியண்டை வைத்தனள். 'உள்ளே சென்று இடுப்பிலுள்ள ஈரப் புடைவையைக் களைந்துவிட்டு ஒரு மலிவான பழம் புடைவையைக் கட்டிக்கொள். நகைநட்டுகளையெல்லாம் கழற்றி ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டி வீட்டில் வைத்து விடு. கழுத்தில் தாலியும் சரடும் மட்டும் போட்டுக் கொள். குழந்தைகுட்டிகளை யழைத்துக்கொண்டு கிளம்பு

வெளியே!' என்று பணித்தனர். மறுமொழி பகராது அம்மையார் வீட்டைவிட்டுப் புறப்பட ஏற்பாடுகள் செய்தனர்.

முதலியார் ஆளையனுப்பித் தலைமைக் கணக்குப் பிள்ளையை உடனே அழைத்துவரச் செய்து, கணக்கு வழக்குகளையெல்லாம் முடித்து, வீட்டிலுள்ள பொருள் களுக்குப் பட்டியலிட்டு, முத்திரையிட்டுக் கணக்குப்பிள்ளை யிடம் ஒப்படைத்துவிட்டு, முதலாளி முதலியாருக்கு முடங்கல் வரைந்து, கணக்குகளைப் பார்த்துச் சொத்துக் களின் பொறுப்பேற்குமாறு தெரிவித்துவிட்டு, நல்ல வெயிலில் தலையில் துண்டைப் போட்டுக்கொண்டு குழந்தை குட்டிகளையும் தம் இல்லக்கிழத்தியையும் அழைத்துக் கொண்டு, வீட்டைவிட்டு வெளிக்கிளம்பிவிட்டார்!

ஊர்மக்கள் கூட்டம் கூடிவிட்டனர். வந்த ஆள், கணக்குப்பிள்ளை, குத்தகைதாரர்கள், குடியானவர்கள், பணியாட்கள், அக்கம்பக்கத்தார் எல்லாம் கதறிக் கண்ணீர் வடித்து, 'ஐயா அவர்கள் இப்படி எங்களையெல்லாம் விட்டுப் போகலாமா? முதலாளி ஐயா அறியாப் பிள்ளை. ஏதாவது நினைத்துப் பாராது எழுதியிருக்கும். அதற்காகத் தாங்கள் சினங்கொள்ளக் கூடாது. பொறுத்தருளல் வேண்டும்,' என்று மன்றாடி வழிமறித்தனர். ஐயா அவர் கள் கேட்கவில்லை. முன்னேறிச் சென்றபடியே யிருந்தனர். ஊரார் பெருந்திரளாக அவர்களைப் பின்தொடர்ந்தனர்.

இதற்குள் இச்செய்தி முதலாளிமுதலியாருக்கு எட்டி விட்டது. இதையறிந்த அவர் குடும்பத்தினர் கண்ணீர் கலங்கினர். 'ஓடு! ஓடு! விரைந்து சென்று மன்னிப்புக் கோரி அவர்களைத் திரும்ப அழைத்துவா!' என்று அக்குடும்பப் பெரியோர் பணிக்க, முதலாளி முதலியார் தம் இளவலுடன் குதிரையேறி விரைந்து வந்தார்.

ஐயா அவர்கள் ஆற்றில் குளித்துவிட்டு, ஆற்று மணலில் அமர்ந்து, அம்மையார் பக்கலில் நிற்க, சிவபூசை செய்துகொண்டிருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து

வந்திருந்த ஊர்மக்கள் திரள் திரளாகச் சுற்றுப்புறங்களில் நின்று உரையாடிக்கொண்டிருந்தனர். பிள்ளைகள் பசியின் கொடுமையையும் சற்று மறந்து ஆற்றுமணலில் மண் தோண்டியும் குவித்தும் விளையாடினர். குதிரைமீது விரைந்து வந்த இளைஞர்கள் இருவரும் தொலைவிலேயே குதிரையைவிட்டிறங்கி வந்து இக்காட்சியைக் கண்டு கண் கலங்கி நின்று, பூசை முடிந்ததும், ஐயா அவர்களை யணுகி மும்முறை வலம் வந்து வணங்கி நின்று, 'சிறுவன் யான் செய்த பெரும் பிழையைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். அறியாமை காரணமாகச் சொல்லுவார் பேச்சைக் கேட்டு ஏதோ எழுதிவிட்டேன். வீட்டில் எல்லாரும் மிகவும் வருந்துகின்றனர். என்னை மன்னித்துத் தாங்கள் குடும்பத்துடன் என்னோடு சீகாழிக்கு வரவேண்டும். மீண்டும் நீங்களே நிலபுலன்களையெல்லாம் கண்காணித்து வரவேண்டும்,' என்று முதலாளி இறைஞ்சினர். 'எப்பொழுது உனக்கு என்மேல் ஐயம் ஏற்பட்டதோ, அதே விநாடிமுதல் எனக்கு அங்கு வேலையில்லை. நான் வெளிக் கிளம்பியது கிளம்பியதுதான். இனித் திரும்பி வரப்போவதில்லை. நீயோ வயது வந்த பிள்ளையாகிவிட்டாய். இனி உன் சொத்துக்களை நீயே பொறுப்பேற்று நடத்துவது தான் முறை,' என்று உறுதியாகக் கூறிவிட்டனர். எவ்வளவு முயன்றும் பயன்பெறாது போகவே கண்கலங்கி, வந்தவழியே திரும்பிச் சென்றனர் இரு இளைஞரும். ஊர் மக்களை நல்வார்த்தை கூறி யனுப்பிவிட்டு முதலியார் தம் குடும்பத்துடன் மேலும் செல்லுவாராயினர். எங்குச் சென்றாரென்பது யாருக்கும் தெரியாது!

இரவு ஏழு மணியிருக்கும். தில்லையில் நடராசர் திருமுன் திரள் திரளான மக்கள் வந்து தொழுது திருநீறு பெற்றுப் போனவண்ணமிருந்தனர். அத்திரளில் குழந்தைகளை யழைத்துக்கொண்டு ஒரு அம்மை பின்தொடர, ஒரு பெரியார் உள்நுழைந்தார். அக்குடும்பத்தினர் மிகவும் வாடிய முகத்துடன் காணப்பட்டனர். அம் முதியோர் கண்களில் நீர் ததும்ப நடராசர் திருமுன்

வணங்கி நின்று, கடவுள் வழிபாட்டாளரை ஒரு தாம்பாளம் கொண்டுவரச் சொல்லி, அதில் தேங்காய், பழங்கள் வைத்துத் தன் மனைவியைப் பார்த்து, 'உன் மாங்கல்யத்தை இக்கயிற்றில் கோத்துப் போட்டுக் கொண்டு, தங்கச்சரட்டை அம்பாளுக்கு அணிவிக்கக் கொடுத்துவிடு,' என்று கூறினர். அவ்வம்மையார் அப்படியே செய்தனர். சுற்றியுள்ளவர்கள் இக்காட்சியை இமைகொட்டாது வியப்புடன் நோக்கி நின்றனர். பொன் சரடு அம்பாளுக்கு அணிவிக்கப்பட்டது. முதலியார் நடராசரையும், அம்பாளையும் தொழுதுவிட்டு 'நீங்களே எங்களுக்கு வழிவிடவேண்டும்,' என்று முறையிட்டுத் தம் குடும்பத்துடன் வெளிச்சென்றனர்.

இரண்டொரு நாட்களில் முதலியார் அவர்கள், குடும்பத்துடன் சீகாழிமுதலியார் குடும்பத்தைவிட்டு வெளியேறிய செய்தி யெங்கும் பரவலாயிற்று. சீகாழியையடுத்த கடைக்காநல்லூர்ப் பெருநிலக்கிழவர் சற்றேறக் குறைய 400 (நானூறு) வேலிக்குச் சொந்தக்காரர்—கார்காத்த வேளாளர் கணபதியா பிள்ளை அவர்களுக்கும் இச்செய்தி யெட்ட, முதலியார் அவர்களையும் அவர்கள் மாண்பையும் முன்னமே அறிந்துள்ள அவர், உடனே தன் வட்டாரங்களில் உள்ள அறநிலைய அலுவலாளர்க்கும் பிறர்க்கும் ஓலையெழுதி, அடையாளங் கூறி, முதலியார் அவர்கள் தம் குடும்பத்துடன் எங்குக் காணப்படினும் அவர்களை அழைத்து வந்து பக்கத்தேயுள்ள ஓர் அறநிலையத்தில் அமர்த்தி வேண்டியவற்றைக் கொடுத்துத் தமக்கு உடன் தகவல் கொடுக்குமாறு பணித்தார்.

அவ்வாறே முதலியார் அவர்கள் தம் குடும்பத்துடன் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு ஓர் அறச்சாலையில் அமர்த்தப்பட்டு, ஒரு குறைவுமின்றிப் பாதுகாக்கப்பட்டு வந்தார். இச்செய்தி பெருநிலக்கிழவர் கணபதியா பிள்ளைக்கு உடன் அறிவிக்கப்பட்டது. அவர் ஐயாவைக் காண ஓடோடி வந்தார். ஐயா அவர்கள் திருநீறு அணிந்து சத்திரத் திண்ணையில் அமர்ந்து, தம் பிள்ளைகளை வரிசை

யாக அமர்த்திப் பாடம் சொல்லிக்கொடுப்பதைக் கண்டு கண்கலங்கினர். ஐயாவை அணுகி 'ஐயா அவர்கள் குடும்பத்துடன் இம்மாதிரி அறநிலையத்தில் இருப்பது எம் போன்ற அன்பர்களுக்கு மிகவும் வருத்தத்தைத் தருகிறது. என்மேல் கருணைகொண்டு தாங்கள் குடும்பத்துடன் என் இருப்பிடம் வரல்வேண்டும். மறுக்கக்கூடாது,' என்று இறைஞ்சினர். ஐயா அவர்கள் தம் நண்பர் பிள்ளை அவர்களின் உழுவல் அன்புக்கு மகிழ்ந்து, நன்றிசெலுத்தி அவர் வேண்டுகோளுக்கு இணங்கினர். வண்டி கொண்டுவரப் பட்டது. ஐயா அவர்கள் தம் குடும்பத்துடன் கடைக்காநல்லூர் சென்று சின்னாள் தங்கி, பிறகு அவ்வூர்க்கிழார்க்குச் சொந்தமான எருக்கூர் என்னும் ஊரையடைந்து, ஆங்குறைந்து, அப்பெருநிலக்கிழவரின் சொத்துக்களைக் கண்காணித்து வருவாராயினர்.

அவருடைய சலியா உழைப்பும், உழைப்புத்திறனும், உளத்தூய்மையும், உழுவலன்பும், எளிய வாழ்க்கையும், பிள்ளையவர்களின் மனத்தைக் கவர்ந்தன. பிள்ளையவர்கள் இறக்குமுன் ஐயா அவர்களுக்கு இரண்டு வேலி நிலமும் ஒரு வீடும் பிற வாய்ப்புக்களும் ஏற்படுத்திச் சென்றார். அந்தச் சொத்தை வைத்துக்கொண்டு முதலியார் அவர்கள் பிள்ளை அவர்களின் பெருஞ் சொத்துக்களை நன்கு கண்காணித்து வந்தார்கள்.

---

3. ஓர் நூற்றுண்டுக்குப் பிறகு !

சுப்பாமுதலியார் அவர்கள் இறந்து ஓர் நூற்றுண்டுக்குப் பிறகு சீகாழி முதலியார் குடும்பத்தினர் தங்களுக்குள் தம் பெருஞ் சொத்துக்களைப் பிரித்துக் கொள்ளுவதற்கு நேர்மையும் தகுதியும் உள்ள ஒருவரைத் துணைக் கொள்ள எண்ணினர். சுப்பாமுதலியார் அவர்களின் பேரரும், மாவட்ட உயர் நீதிபதி (District Judge)யாயிருந்து ஓய்வு பெற்றவரும் ஆகிய நல்லாடை திவான் பகதூர் பொன்னம்பல சுப்பையாமுதலியார் அவர்களே அப்பணியை மேற்கொள்ளத்தக்கவர் என முடிவு செய்து, அவரை அன்புடன் தம் இல்லத்துக்கு அழைத்து வந்து பல நாட்கள் உடன் இருக்கச் செய்து, அளவிடற்கரிய தம் சொத்துக்களைத் தமக்குள் யார் மனமும் கோணுது அவர் முன்னிலையில் அவர் துணைகொண்டு பிரித்துக் கொண்டு தம் ஆழ்ந்த நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொண்டனர். என்னே! சுப்பாமுதலியார் அவர்கள் பரம்பரை மாண்பு!

---

4. மகன் தந்தைக்காற்றும் உதவி

என் தாய்ப்பாட்டன் பொன்னம்பலமுதலியார் (சுப்பாமுதலியார் அவர்களின் மகனார்) மயூரம் கூற்றத்தைச் சேர்ந்த நல்லாடை என்னும் ஊரில் ஊர்த்தலைவராயிருந்தார். அவர் பெண்கொண்ட வகையில் ஒன்றரை வேலி நிலம் பெற்றார். அவர் இந்த வேலையையும் நிலத்தையும் வைத்துக்கொண்டு ஊரில் செல்வாக்குடன் வாழ்ந்துவந்தார். அவர் தம் இரு ஆண், இரு பெண் குழந்தைகளை மிகவும் அருமையாக வளர்த்துவந்தார்.

இரு பிள்ளைகளில் மூத்தவர்பெயர் சிதம்பரமுதலியார். அவர் இயற்கையில் பணிவும் பொறுமையும் உள்ளவர். இளவலோ விருவிருப்பும் சுட்டித்தனமும் உடையவர். இருவரும் நாட்டுப்புறப் பாடசாலையில் படித்தனர். அப்பொழுது எழுத்தாணிகொண்டு பனைஓலையில் எழுதுவது வழக்கம். மூத்தவர் அடிக்கடி எழுத்தாணியைத் தொலைத்துவிட்டுக் கொல்லனிடம் சென்று புது எழுத்தாணி செய்து கொடுக்கச் சொல்லுவார். அவன் வேடிக்கையாக 'ஆமாம்! தம்பி 'தாசில்' வேலை பார்க்கப் போவுது. நாளைக்கு இரண்டு எழுத்தாணி வேண்டும்,' என்று கூறிப் புது எழுத்தாணி செய்து கொடுப்பது வழக்கம் என என் மாமாவே (மூத்தவர்) என்னிடம் சொல்லுவதுண்டு. மூத்தவர் துவக்கப் படிப்பு முடிந்ததும் தந்தையாரிடம் கும்பகோணம் சென்று உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்து படிக்கவேண்டும் என்று தன் விருப்பத்தைத் தெரிவிக்கவே அவர் 'நம் குடித்தனம் எவ்வளவு! கும்பகோணத்தில் தனிக்குடித்தனம் ஒன்று ஏற்படுத்துவது என்றால் எவ்வளவு கடினமானது?' என்று சொன்னார். மூத்தபிள்ளை மிகவும் பணிவுடையவரேனும் அவருக்குப் படிப்பில் இருந்த அவா சொல்லொணாதது. சில நாட்கள் பொறுத்துத் தாயிடம் ஏதோ கொஞ்சம் பணம் வாங்கிக் கொண்டு கும்பகோணம் சென்று உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்துவிட்டுத் தந்தைக்குத் தெரிவித்தார்.

பிறகு தாயும் தந்தைக்குச் சொல்லி, தாய்ப்பாட்டியைக் கும்பகோணம் அனுப்பி ஒரு குடித்தனம் வைத்தார்கள். இப்புதுக் குடித்தனத்தை அப்பாட்டி மிகவும் சிக்கனமாக நடத்தி வந்தனள். சில சமயங்களில் தாம் பிறந்த வூராகிய நல்லாடையிலிருந்து 30 மைலுக்கப்பாலுள்ள கும்ப கோணத்துக்கு எருமை மாட்டை ஓட்டிக்கொண்டு நடந்து செல்வதுண்டு என்று என் தாய்மாமா (மூத்தவர்) சொல்லக் கேட்டிருக்கிறேன்.

மூத்தவர் கும்பகோணத்தில் படித்து வரும்பொழுது ஒருநாள் அவர் தந்தை அவரைப் பார்த்து, 'சின்னவனையும் அழைத்துப்போய்க் கும்பகோணம் உயர்நிலைப்பள்ளியில் சேர்த்துப் படிக்கவை,' என்று கூறினர். 'அடேயப்பா! அவனையா கும்பகோணம் அழைத்துச் செல்லச் சொல்லு கிறீர்கள்! அவனை அங்கு எப்படி வைத்துச் சமாளிப்பது. அவன் எனக்கு அடங்கி நடக்கமாட்டானே. பாட்டியை ஒரு தாசியாக மதிப்பான். அவன் சுட்டித்தனத்துக்கு அவனை வெளியூர் அழைத்துச்செல்வது தீம்பாகவல்லவோ முடியும்,' என்று மறுமொழி பகர்ந்தார். 'அழைத்துக் கொண்டுபோ. கொஞ்சநாள் வைத்துப் பார். மிகவும் அடங்காப் பிடாரித்தனம் செய்தால் உடனே ஊருக்குத் திருப்பியனுப்பிடு!' என்று தந்தை பணித்தார்.

சரியெனச்சொல்லி மூத்தவர் இளவலை அழைத்துச் சென்று கும்பகோணம் உயர்நிலைப்பள்ளியில் சேர்த்தார். பாடசாலையில் சேர்ந்தபிறகு இளையவர் மிகவும் நல்ல பெயர் எடுக்கலானர். அவரைப் புகழாத ஆசிரியர் இல்லை. ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பாடத்திலும் முதன்மை பெற்றுப் பரிசுகள் பெற்று வந்தார்.

ஒருதடவை பாடசாலையைக் கண்காணிக்க வந்த தணிக்கையாளர் இளையவர் படித்த வகுப்புக்குச் சென்று வடமொழியிற் சில கேள்விகளைக் கேட்டனர். ஒருவரும் நல்ல விடையளிக்காது போகவே, இவ்விளையவரைக் கேட்டார். அவர் தணிக்கையாளர் வியப்புற விடை

யிருத்தார். மேலும் சில கேள்விகள் அவரைக் கேட்டு அவரிடமிருந்து தக்க விடைபெற்று மகிழ்ந்து அவரைத் தட்டிக்கொடுத்து, ஆசிரியரிடம் அவரை விழிப்புடன் கவனித்து வருமாறும் அவரை ஊக்கிவரவேண்டுமெனவும் பணித்துச் சில பரிசுகள் வழங்கியதுடன், அவர் வட மொழியில் நல்ல தேர்ச்சி பெறுவார் என்றும், உயர் படிப்புப் படித்து நன்னிலைக்கு வரக்கூடியவர் என்றும் கூறிச் சென்றார்.

உரிய காலத்தில் இருவரும் கும்பகோணம் கல்லூரி யில் போய்ச் சேர்ந்தனர். உயர்நிலைப்பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரி செல்வதை 'ஆறு தாண்டல்' என்று சொல்லுவது வழக்கம். ஏனெனில், கும்பகோணம் உயர் நிலைப்பள்ளிகளெல்லாம் நகருக்குள் காவேரியாற்றுக்குத் தென்புறத்திலிருக்கக் கல்லூரி மட்டும் ஆற்றின் வடகரை யில் அமைந்துள்ளது. ஆற்றுக்கு ஒருபாலம் இடையே அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காரணத்தால் பத்தாவது முடித்துக் கல்லூரி செல்லும் மாணவரை 'என்ன ஆறு தாண்டிவிட்டாயா?' என்று கேட்பது கும்பகோணத்தில் இன்றும் வழக்கமாயிருந்து வருகிறது.

கல்லூரிக்கும் இவர்கள் குடியிருப்புக்கும் தொலை வானதால் நடுப்பகல் உணவுக்கு வீட்டிற்கு வருவதில்லை வரின் காலந் தாழ்த்துவிடும். ஆகையால் வெயில் காலத் திலும் முதியோளாகிய அவர்கள் பாட்டி, உணவு எடுத்துக் கொண்டு வெயிலின் கொடுமை பொறுக்கமாட்டாது ஒரு செம்பில் தண்ணீர் ஏந்திக் காலில் தண்ணீர் ஊற்றி ஊற்றிச் சூட்டைத் தணித்துக்கொண்டு, கல்லூரி சென்று அவர்களுக்கு நடுவேளையுணவளித்துவிட்டுத் திரும்புவது வழக்கம்.

இப்படியாக இருவரும் கல்லூரியில் படித்து B. A. பட்டம் பெற்றனர். இளையவர் வடமொழிப் பாடமும் அறிவுக்கலைப் பாடமும் (Science) B. A வகுப்பில் எடுத் துப் பின்னைய பாடத்தில் சென்னை மண்டலத்திலுள்ள

எல்லாக் கல்லூரி மாணவர்களைக் காட்டிலும் மிக்க குறியீடு (Mark) வாங்கித் தேறினார். அவரைச் சென்னைக்கு வர வழைத்துச் சென்னை மண்டல ஆட்சியாளரே (Governor) அவருக்கு ஒரு பொற்பதக்கம் பரிசாக வழங்கினார்.

இளையவர் சிலநாள் ஆசிரியராக இருந்து பிறகு வான் ஆய்வகம் (Astronamy Office) ஒன்றில் மாதம் ரூபா 60 சம்பளத்தில் வேலை பார்த்துக்கொண்டே B. L, தேர்வுக்குச் சென்று தேறி வழக்கறிஞர் ஆயினார். இவர் திரு. மணி ஐயர் முதலிய பெரிய பெயர் பெற்ற வழக்கறிஞர்களிடம் உதவியாக இருந்து வேலை பார்த்து வரும்பொழுது, மணி ஐயர் முதலியவர்கள் இவருடைய அழகு, அடக்கம், அறிவு முதலியவற்றால் ஈர்க்கப்பட்டனர். பெரிய பெரிய வழக்கு களுக்கெல்லாம் இவரைத் துணைகொண்டு வெற்றிபெற்று வந்தனர். இவர் மிகவும் சிக்கலான வழக்குகளிலுள்ள முக்கியமான பகுதிகளை நன்கு ஆராய்ந்து அறிந்து இனிய எளிய சுருக்கமான சில சொற்களில் நீதிபதி முன் வழக் காடி வெற்றிபெறுவது வழக்கமாயிருந்தது. பெரிய பெரிய கட்சிக்காரர்களும் இவருடைய கூரிய அறிவைப் பயன்படுத்திக்கொள்ள முந்துறுவாராயினர்.

இப்படியிருக்குங்கால் சில பெரிய பெயர்பெற்ற வழக்கறிஞர்கள் கூடி, 'இனி இவரை நம்மிடையே வைத் திருப்பின் நமக்குள்ள மதிப்புப் போய்விடும். இவரை யெப்படியாவது அரசாங்க அலுவலில் அமர்த்திவிட வேண்டும். கட்சிக்காரரெல்லாம் அவர்மேல் நாட்டங் கொண்டு விட்டனர். நீதிபதியும் அவரிடம் அளவற்ற மதிப்புக்கொண்டு விட்டார்,' என்று முடிவுகட்டி இவரிடம் ஒருநாள் வந்து, 'நீங்கள் மாவட்ட நீதிபதியாகச் செல்லு வீர்களானல் கட்சிக்காரர் தொல்லையின்றி இருந்த இடத்தி லிருந்து மாதந்தோறும் ஓர் குறிப்பிட்ட சம்பளம் பெற லாம். அரசாங்கத்தார் உங்கள் அறிவுக்கு மெய்ச்சி உயர் பதவிகள் வழங்குவர். அப்படிச் செல்ல மனமிருப்பின் சொல்லுங்கள். அண்மையில் காலி ஏற்படுகிறது. மேல் அலுவலாளரிடம் சொல்லி வேலை வாங்கிவிடலாம்,'

என்று பரிந்து கூறுவதுபோற் கூறினர். 'நான் சிந்தித்து முடிவு கூறுகிறேன்,' என்று சொல்லி அவர் தம் தந்தைக்கு இதைப்பற்றித் தெரிவித்து ஆலோசனை கேட்டனர். 'வழக்கறிஞர் தொழிலில் இருந்து நேர்மையற்றவரிடமும் நேர்மையில்லா வழக்குகளையும் எடுத்து வாதாடிப் பணம் ஈட்டலைக் காட்டிலும், நீதிசெலுத்தி மாதச் சம்பளம் பெறுவதே நலம்,' என நினைப்பதாக அவர் தந்தையார் தெரிவித்தார். இவருடைய நண்பர்களும் அதுவே சரியென வற்புறுத்தினர். அரசாங்கத்தில் அலுவல் பார்க்கவேண்டும் என்ற அவா இவருக்கும் இருந்து வந்தது. ஆகையால், இவர் தன் நண்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கினர். அவர்களின் முயற்சியால் இவருக்கு மாவட்ட நீதிபதி (District Munsiff) வேலை கிடைத்தது.

இவர் தன் வேலையைத் திறமையாகப் பார்த்து வந்தார். இவர் வேலைக்குப் போன புதிதில் ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. இவருக்குப் பெண் கொடுத்தவரும், என் தாயாரும் இவர் நீதிபதியாக இருந்த இடத்துக்குச் சென்று அங்குச் சில நாட்கள் தங்கிவிட்டுத் தங்கள் ஊருக்குப் புகைவண்டியேறி வருகையில் சில கட்சிக்காரர்கள் தங்களுக்குள் உரையாடிக்கொண்டிருந்தனர். அதில் ஒருவர், 'என்ன ஐயா! முகத்தில் மீசை அரும்பவில்லை; பால் வடிகிறது முகத்தில்; அவ்வளவு இளையவராயிருந்தும் எப்படி முடிவு கூறுகிறாரையா! பட்பட்டென்றுத் தீர்ப்புக் கூறுகிறார். வேலைக்குப் புதிதுதான். ஆனல், என்ன அருமையாக முடிவு சொல்லுகிறார். அவர் உண்மை கண்டு பிடிப்பதிலே மிகக் கூரிய அறிவுடையவர் ஐயா! வழக்கறிஞர்கள் எவ்வளவுதான் தங்களுக்குத் தோன்றியபடியெல்லாம் பேசினுலும் உண்மையை அவர் மிகத் தெளிவாகவும், அழகாகவும் கண்டுபிடித்து முடிவு கூறிவிடுகிறார்!' என்று பல படியாகப் புகழ்ந்துகொண்டே வந்தார். 'ஆமாம்! இம்மாதிரி முடிவு கூறியதை நாங்கள் பார்த்ததில்லை. வீணுக்கு ஒத்திப் போடுவது என்பது இவரிடம் கிடையாது. அறிவும், அழகும்

இளமையும் பொறுமையும் சொட்டுகின்றன ஐயா! அவர் முகத்திலே, என்று மற்றொருவர் உரைத்தார்.

இவ்வுரையாடலை நீதிபதியின் உடன்பிறந்தோளாகிய என் தாயும், நீதிபதியின் மாமனாரும் கேட்டு உளம்பூரித்துத் தாங்கள் இன்னாரென்று தெரிவிக்காமலே ஊர் வந்து சேர்ந்தனர். செய்தியை என்தாய் பெருமிதத்துடனும் உளப்பூரிப்புடனும் எங்களிடம் கூறுவதுண்டு. இச் செய்தியைக் கேட்ட நீதிபதியின் தந்தை தாய்க்குண்டான மகிழ்ச்சிக்களவேயில்லை.

இப்படியாக இவர் நல்ல பெயர் எடுத்து படிப்படியாக மாவட்ட உயர் நீதிபதி (District Judge) வேலையில் அமர்ந்து ஓய்வுபெற்றுத் திவான்பகதூர் பட்டமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்து தாம் பிறந்த குடும்பத்திற்கு மட்டுமேயன்றி, தாம் பிறந்த ஊருக்கும் சுற்றத்துக்கும் நல்ல மதிப்பை உண்டுபண்ணினார்.

முன்னவர் சிதம்பரமுதலியாரைப்பற்றி நோக்குவோம். பின்னவர் (சுப்பையாமுதலியார்) கட்டுடலும், பொன் மேனியும், எழிலும், உயர்நடையும் எடுப்பான பார்வையும் உடையவர். ஆனால், முன்னவர் உயர்ந்து மெலிந்து கறுத்த தோற்றம் உடையவர். பணிவும் எளிமையும் இரக்க சிந்தையும் அவர் முகத்தில் தாண்டவமாடும்.

மூத்தவர் அக்காலத்திலேயே B A. பட்டம் பெற்றிருந்தபோதிலும் அவர் மாவட்ட நிலவரித் தண்டலர் அலுவலகத்தில் எழுத்தாளராகத் (Clerk) தான் அமர்ந்தார். மாதம் 15 ரூபாச் சம்பளம். அவ்வளவு குறைந்த சம்பளம் வாங்கும்பொழுதும் அவர் தம் உறவினரைத் தாம் இருக்குமிடத்திற்கு வருவித்து அகமகிழ்ந்து விருந்தோம்பும் திறத்தைப்பற்றி என் தாய் கீழ்வருமாறு எனக்கு அறிவித்ததுண்டு; "குறைந்த அளவு சம்பளம் பெற்றபோதிலும் ஒருவரிடமும் ஒரு துரும்பும் இனமாகப் பெறார். அதிகச் சம்பளம் பெறும் தம் தம்பியோ, தந்தையோ தமக்கு உதவி அனுப்பவும் கூடாது. உற

வினரும் தன்னுடன் இருந்துகொண்டே இருக்கவேண்டும். தாம் மிக எளிய உடையும் உணவும் கொண்டு எவ்வளவு வருந்தினாலும் பிறர் வருந்தக்கூடாது. மேல் அலுவலாளரிடம் மிகப் பணிவுடன் நடந்து, கொடுத்த வேலையைத் திறமையுடன் செய்வது அவர் வழக்கம். அவர் காலை உணவு உண்டு, இடைவேளைக்குக் கையில் சிற்றுண்டி தாங்கி, குடையைப் பிடித்துக்கொண்டு வெயிலில் மெதுவாகப் போகும்பொழுது நான் நாங்களிருந்த குசேலரகம் போன்றிருந்த வீட்டு வாசலில் நின்று பார்த்தவண்ணமிருப்பேன். அவர் தொலைவில் போகப்போக ஏறும் பூர்வதுபோல் தோன்றும். அவர் செல்லும் காட்சி இன்னும் என் அகக் கண்ணில் நிலவுகிறது. அப்படி அவர் செல்வதைப் பார்த்துக்கொண்டே நிற்கும் என் கண்களில் நீர் பெருகும். இக்குறைந்த ஊதியத்தில் தொலைவில் வந்து வேலை ஏற்று இத்தனை உறவினரையும் இங்கு வைத்துக்கொண்டு இடர்ப்படுகிறாரே! இவருடைய இளகிய மனமும் மன உறுதியும் என்னே! என்று நான் மனமுருகி நிற்பேன்,' என்று என் தாய் கூறியதுண்டு.

இப்படியாக இவர் பல்லாண்டுகள்--சற்றேறக்குறைய 13 ஆண்டுகள் தன் வேலையைத் திறமையுடன் செய்துவந்த போதிலும் இவர் எழுத்தாளர் பதவியிலேயே இருந்து மாதம் 45 ரூபாச் சம்பளத்தைத்தான் எட்ட முடிந்தது. இதற்கு இவரே சில காரணங்கள் கூறுவதுண்டு. "நான் 'போய் உயர்வு வேண்டும் உயர்வு வேண்டும்,' என்று முந்திக்கொண்டு மேலாளரைத் தொந்தரவு செய்வதில்லை. எனக்கிட்ட வேலையை முடிந்தவரை திறமையாகச் செய்து முடித்து வாளாவிருப்பேன். என் உடல் நிலையும் எப்பொழுதும் சரியாயிருந்ததில்லை. உடல் மெலிந்து எழிலின்றியிருந்தமையும் என் உயர்வின்மைக்கு ஓர் காரணமாகும். ஒரு சமயம் நிலவரித் தண்டலாளர் (Revenue Inspector) வேலைக்குச் சிலரைப் பொறுக்க ஒரு மேலாளர் முயன்றார். அப்பொழுது சில எழுத்தாளர்களைப்பற்றி யேற்பட்டுள்ள மறைமதிப்புக்

குறிப்புக்களைப் (Confidential Reports) பார்வையிட்டு, பல எழுத்தாளர்களில் மிகவும் நல்ல மதிப்புக் குறிப்பைப் பெற்றவரும், பார்ப்பனரல்லாதாரும், பி. ஏ. பட்டம் பெற்றவரும் ஆக நான் இருக்கக்கண்டு, வியப்புற்று 'என்ன, இவ்வளவு நல்ல மதிப்புப் பெற்றும், பி. ஏ. பட்டம் பெற்றிருந்தும், இன்னும் உயர்வேலை பெறுமல் ஏன் எழுத்தாளராகவே இவர் இருந்து வருகிறார்! இவரைத் தண்டல் மேற்பார்வையாளராக ஏன் அமைக்கக் கூடாது? எதற்கும் இவரை நான் நேரில் சென்று பார்க்க வேண்டும்,' என்று சொல்லித் தமக்கு அடுத்தபடியிலுள்ள ஒருவரை அழைத்துக்கொண்டு, நான் பல எழுத்தாளருடன் எழுதிக் கொண்டிருக்குமிடம் வந்தார். நான் அவர் வந்ததைப் பார்க்கவில்லை. என் வேலையில் ஈடுபட்டிருந்தேன். உடன் வந்தவர் என்னைச் சுட்டிக்காட்டி 'இவர் தான் சிதம்பர முதலியார்,' என்றார். நான் திடுக்குற்று அடங்கி ஒடுங்கி எழுந்து நின்றேன். என்னை இரண்டொரு கேள்விகள் கேட்டார். விடையிறுத்தேன். வந்தவர் முகவாட்டத்துடன் சென்றார். சென்று 'வேலையில் திறமையுடையவராகத்தான் காண்கிறார். ஆனால் தண்டல் மேற்பார்வையாளர் வேலைபார்க்கத் தகுதியுடையவராகத் தோன்றவில்லை. அவர் உடல்நிலையைப் பார்த்தால் அவரால் அவ்வேலையைத் திறம்படச் செய்ய முடியுமா என்ற ஐயம் எழுகின்றது.

ஆகையால் இவரை இவ்வேலைக்குப் பொறுக்க எனக்கு மனமில்லை' என்று மனவருத்தத்துடன் தெரிவித்து விட்டார்,'' என்று என் பெரிய மாமாவே என்னிடம் சொல்லியுள்ளார்.

இவருடைய பார்ப்பன நண்பர் ஒருவர் ஆவணக்களரி ஆட்சியாளராக (Sub-Registrar) இருந்து வந்தார். அவர் நிலவரித் தண்டலகத்தில் வேலை பார்க்க விரும்புவதாக இவரிடம் தெரிவித்தார். இவரும் தாம் அவர் வேலைக்குவர இசைவதாகச் சொன்னார். ஆக இருவருமாக ஒத்துப் பேசி மேலுக்கு விண்ணப்பித்துக் கொண்டனர்.

5. வெள்ளையரின் நீதி

இந்த இரு விண்ணப்பங்களும் கோட்டத் தண்டலர் (Dt. Collector) வேலை பார்த்துவந்த E. A. எல்லிஸ் துரை அவர்களுடைய பார்வைக்கு வந்தன. அவர் இரண்டு விண்ணப்பங்களையும் திருப்பித் திருப்பிப் பார்த்தார். இவர் வேறு அலுவலகத்துக்குப் போக எண்ணக் காரணம் என்ன? என்று சிந்தித்துச் சிதம்பர முதலியாரைப்பற்றி ஏற்பட்டுள்ள மறைமதிப்புக் குறிப்புக்களையெல்லாம் எடுத்துப் பார்த்துவிட்டு 'இது என்ன விந்தை! இதுவரை இவரைப்பற்றி நான் கூர்ந்து நோக்காதிருந்து விட்டேனே! இவ்வளவு நல்ல மதிப்புப் பெற்றிருந்தும் ஏன் இவர் இன்னும் இவ்வளவு குறைந்த சம்பளத்திலிருந்து வருகிறார்! எல்லாவற்றிற்கும் இவரை நேரில் வரவழைத்துப் பார்த்துக் கேட்போம்,' என முடிவு செய்துகொண்டு முதலியாரை நேரில் வரச்சொல்லி அனுப்பினார். 'ஏதோ வந்துவிட்டது மோசம்! துரை என்ன நினைத்துக் கொண்டாரோ! என்னை வேலையினின்று தள்ளி விடுவாரோ? எதற்காக வரச் சொன்னார்? நாம் கேட்ட விண்ணப்பத்தின் பலனோ இது? ஏன் விண்ணப்பம் போட்டோம்?' என்றெல்லாம் எண்ணித் தன் உடைகளைச் செம்மைப்படுத்தித் தலைப்பாகையும் வைத்துக்கொண்டு, அடக்க ஒடுக்கத்துடன், மனம் திக்! திக்! கென அடித்துக்கொள்ள, துரைவதியும் மாளிகையின் வாயிற்படியருகிற் சென்று, தாம் வந்ததை ஆள் மூலம் தெரிவித்துக் காத்திருந்தார். 'உள்ளே வரச் சொல்லுகிறார், துரை' என்று பணியாள் கூற, உள்ளே சென்று வணக்கம் தெரிவித்தார்.

துரை இவரைப் பார்த்து ஒருபக்கம் புன்முறுவலும், ஒருபக்கம் இரக்கமும் கொண்டாரேனும், முகத்தைக் கடுமையாக வைத்துக்கொண்டு 'என்ன சிதம்பர முதலியார்! ஏன் நீர் இந்த அலுவலைவிட்டு வேறு அலுவலுக்குப்போக எண்ணுகிறீர்! இந்த வேலை உமக்குப் பிடிக்கவில்லையா யென்ன?' என வினவினார்.

இவர் தழுதழுத்த குரலில் நான் 13 ஆண்டுகளுக்கு முன்னே பி. ஏ. பட்டம் பெற்றிருந்தும் இத்தனை நாட்களாக எழுத்தாளன் வேலைக்குமேல் உயர்வேலை எனக்குக் கிடைக்கவில்லை. எனக்குச் சம்பளத்தைப்பற்றிக்கூட அவ்வளவாகக் கவலையில்லை. நான் பிள்ளைகுட்டி யில்லாதவன். ஆனால் 13 ஆண்டுகளாகப் பட்டம் பெற்றவனுயிருந்தும், ஒரு பணியாளனை வைத்து வேலை வாங்கும் அலுவல் ஒன்றும் இதுவரை கிட்டவில்லையே யென்ற ஏக்கம் எனக்குண்டு. நான் ஆவணக்களரி ஆட்சியாளனுகச் சென்றால் இதே சம்பளம ஆனாலும், சற்றுக் குறைவாயிருந்தாலும் அங்கு எனக்கு மதிப்புண்டு. பணியாட்களும், எழுத்தாளர்களும் என்கீழ் வேலை செய்வார்கள். நான் கட்டுத்தூக்கி மேலாளரிடம் சென்று நின்று பணி செய்ய வேண்டுவதில்லை. இந்தக் காரணங்களால்தான் நான் அவ்வேலைக்கு மனுக்கொடுத்தேன்' என்று பணிவுடன் கூறினர்.

எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டிருந்த துரை சற்று சிந்தித்துப் பிறகு, 'சரி. உம் நண்பர் ஏன் உம் வேலைக்கு வர எண்ணுகிறார்? நீர் கூறிய வாய்ப்புகளும் பெருமைகளும் உள்ள அலுவலில் இருப்பவர் அவற்றைத் துறந்து உமது வேலைக்கு ஏன் வரவேண்டும்?' என்று உசாவினர்.

'அதைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது,' என விடை பகர்ந்தார்.

'என்ன இந்த அலுவலகத்துக்கு வந்து கொள்ளையடிக்கலாம் என்று எண்ணுகிறாரோ அவர்? அப்பேர்ப்பட்டவர் இங்குவர நான் இடங்கொடுக்க மாட்டேன். நீரும் இவ்வளவு காலம் இங்கு நல்ல பயிற்சி பெற்றிருப்பதால் உம்மையும் அங்குப்போக விடமாட்டேன். நீர் இங்கேதான் வேலை செய்து வரவேண்டும். உமது மனு தள்ளப்பட்டது. போய் வேலையைப் பாரும்,' என்று கடுமையாகக் கூறினர்.

நம் எண்ணத்தில் மண் விழுந்தது என்று எண்ணி உடைந்த மனத்தினராய், 'சரி! துரையவர்கள் சொற்படி இங்கேயே வேலை பார்த்துவருகிறேன்,' என்று பணிவுடன் கூறி விடை பெற்றுத் தம் இருப்பிடம் சென்று விட்டார்.

இரண்டு மூன்று மாதங்கள் கழிந்ததும் இவர் வேலை பார்த்துவந்த அலுவலகப் பகுதியில் தலைமை எழுத்தாளர் வேலை காலி யேற்பட்டது. அவ்வேலை 'எனக்கு, உனக்கு' என்று பலர் போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால், இவர் அவ்வேலை தமக்குக் கிடைக்கும் என்று நினைக்கவில்லை. 'துரை நம்மேற் சீற்றங் கொண்டுள்ளார். நமக்கு என்ன நன்மை புரியப் போகிறார்,' என்று இவர் எண்ணியிருந்தார்.

ஆனால் ஒருநாள் துரையிடமிருந்து ஒரு உத்தரவு இவருக்குக் கிடைத்தது. படபடப்புடன் உறையைக் கிழித்துப் பார்த்தார். தன்னைத் தலைமை எழுத்தாளராக மாதம் 60 ரூபா சம்பளத்தில் போட்டிருப்பதாக இருந்தது. வியப்புற்று, உளம்பூரித்து அவ்வேலையை ஒப்புக்கொண்டு இன்னும் மிகுந்த ஊக்கத்துடனும் பணிவுடனும் வேலை செய்து வந்தார்.

மேலும் சில மாதங்கள் கழிந்தன. இவர் தம் நெருங்கின உறவினர் ஒருவரின் திருமணத்திற்காக ஒய்வு எடுத்து, கூடலூரை விட்டுத் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த ஓர் ஊருக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கூடலூர் வந்தார். தாம் இன்ன வண்டியில் வருவேன் என்று முன்னதாகத் தெரிவித்திருந்ததால் ஒரு பணியாள் இவரைப் புகைவண்டி நிலயத்தில் வந்து சந்தித்தான். அப்பொழுது அவன் உளப்பூரிப்புடன், "ஐயா! தங்களுக்கு 'மாஜிஸ்ட்ரேட்டு' வேலை ஆகிவிட்டது. துரை உத்தரவு போட்டுவிட்டார். உத்தரவு வந்து உங்கள் வீட்டில் நாலு நாட்களாகக் கிடக்கிறது," என்று ஆவலாகக் கூறினான்.

படபடவென அடித்துக்கொள்ளும் உளத்துடன், 'என்ன! மாஜிஸ்ட்ரேட்டு.......வேலையா! எனக்கா! நான்

நம்ப முடியவில்லை. உனக்கு யாரேனும் வேடிக்கைக்குச் சொல்லி யிருப்பார்கள்,'' என்று சொல்லினர்.

"இல்லை ஐயா! நான் சொல்லுவது உண்மையே. எல்லாரும் வியப்புடன் இதே பேச்சாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உத்தரவைப் பாருங்கள்,'' என்று கூறினன்.

இவர் விரைந்து வீடு சென்று உறையைக் கிழித்துப் பார்த்தார். என்ன வியப்பு! தம்மை வானூர் மாஜிஸ்ட்ரேட்டாகப் போட்டு உடனேபோய் வேலையை ஒப்புக்கொள்ளுமாறு பணிக்கப்பட்டிருந்தது. இக்கட்டளையைக் கண்ணுற்று மட்டிலா மகிழ் வெய்தினார். துரையவர்களின் பேருதவியை நினைத்து நினைத்து நன்றி யுளப்பெருக்கில் திளைத்தார். நேரிற் சென்று நன்றி செலுத்தத் துரையை நாடிச் சென்றார்.

இவர் சென்று வணங்கியதும் துரை புன்முறுவலுடன் இவரை வரவேற்று அமரச் சொல்லி, 'என்ன சிதம்பர முதலியார்! இப்பொழுது வானூர் நீதிபதியாகப் போய் வேலை ஒப்புக்கொள்ள விரும்புகிறீரா, அல்லது ஆவணக்களரி ஆட்சியாளராகப்போக எண்ணங் கொள்ளுகிறீரா,' என்று வேடிக்கையாகக் கேட்டார். 'வானூரே செல்லுகிறேன்,' என்று விடையிறுத்து, நன்றி செலுத்தி, விடைபெற்று வானூர் சென்று நீதிபதி வேலையை மேற்கொண்டார். அங்குச் சில காலம் இருந்துவிட்டுப் பிறகு பறங்கிப்பேட்டை சென்று வேலை பார்த்து வந்தார்.

இந்தக் காலத்தில் இவர் தம் அருமைத் தந்தையார், "என்ன பையன் இவ்வளவு நாள்தான் எழுத்தாளனாகக் குறை ஊதியம் பெற்றுத் துன்புற்று வந்தான். இப்பொழுது என்ன நீதிபதியாக இருக்கிறான். தாய் தந்தையர்க்குப் பணம் ஒன்றும் அனுப்புவதில்லை. சின்னவன் அனுப்பவில்லையா? இப்படி வருகிற பணத்தை யெல்லாம் செலவு செய்து விடுகிறானே," என்று வருத்தப்பட்டு சிலரிடம் கூறியும் வந்தார்.

"மூத்தபிள்ளையை அருகாமையில் மாற்றியுள்ளார்கள். போய்ப் பார்த்துவிட்டு வாருங்களேன்," என்று உறவினர் தூண்ட, அவர் புறப்பட்டுப் பறங்கிப்பேட்டை வந்து சேர்ந்தார். முதுநிலையில் தம் இருப்பிடம் வந்த தந்தை யாரை அவர் அன்புடன் வரவேற்றுத் தாம் அலுவல் பார்க்கும் இடங்களையெல்லாம் கொண்டுகாட்டி வீட்டில் வேண்டிய நலங்களையெல்லாம் அவருக்குப் புரிந்து வருவாராயினர்.

நாடோறும் நீதிபதி வீட்டிற்கு வருபவர்கள் "நரைத் துப்பழுத்த மேனியராய்த் திருநீறு அணிந்து, அன்பே உருவாய் அமர்ந்திருக்கும் இப் பெரியவர் யார்?" என வினவுவர். பணியாட்கள்மூலம் இவர் 'ஐயா அவர் களின் தந்தை' எனக் கேட்டு, ஊரார் அவர்களிடம் ஆவ லுடனும் அன்புடனும் சென்று, 'ஐயா அவர்கள் எங்கள் குணவானைப் பெற்ற தந்தையா! இந்தப் புண்ணியவானைப் பெற்ற பெரியாரா? உங்கள் தவப்பிள்ளை ஐயா அவர். அடடா! இப்பேர்ப்பட்ட குணவானைப் பெற்ற உங்களைப் பார்க்க நாங்கள் கொடுத்துவைத்தோமே! ஒருவரை 'சீ' என்று சொல்லி நாங்கள் கேட்டதில்லை, ஐயா! ஒரு துரும்புகூட ஒருவரிடமும் பெறுவதில்லை. கொடையாளி. இந்தவூர் செய்த நற்பயன் இவர் எங்கட்குக் கிடைத்துள் ளார். ஏன் இந்தப் பிள்ளையைப் பார்க்க இத்துணைநாட் கள் வரவில்லை? இங்கேயே இருங்களேன்! இரண்டு புண்ணிய நன்மக்களையும் நாங்கள் நாள்தோறும் கண்டு மகிழ்கிறோம்,' என்றெல்லாம் சொல்லிப் பூரிப்பாராயினர்.

இவ் இன்மொழிகளைக் கேட்டுத் தந்தையார் மட்டிலா மகிழ்வெய்தினர். அவர் மேலும் பலநாட்கள் அங்கேயே தங்கியிருந்து, பிறகு விடைபெற்று ஊர்வந்து சேர்ந்தார்.

ஊரில், 'என்ன, பெரிய பிள்ளையைப் பார்த்து வந்தீர்களா?' என்று தம்மைக் கேட்பவர்களுக்கெல்லாம், 'ஆகா, பார்த்து வந்தேன். அவன் நல்ல மானி. ஒருவரிடமும் ஒருகாசும் வாங்குவதில்லை. திறமையாக வேலைபார்க் கிறான். செலவு மிகைபடத்தான் ஆகிறது. எனக்கு மேன்

றும் அவன் அனுப்புவதில்லை என்று நான் இதற்குமுன் சொல்லிவந்தேன். அது தவறு என்று நான் சென்று பார்த்துணர்ந்தேன். அந்தக் குணவானுக்கு மீதம் ஏற்படுவது கடினம். எனக்கென்ன இனி வேண்டியிருக்கிறது. எனக்குள்ளது எனக்குப் போதும். அவன் எனக்கொன்றும் அனுப்பத் தேவையில்லை. அங்குள்ளவர்கள் என்னைக் கண்டதும், 'இந்தப் புண்ணியவானைப் பெற்ற தந்தையா நீங்கள். தவம் இருந்து பெற்ற பிள்ளை ஐயா உங்கள் பிள்ளை. உங்களைப் பார்க்கக் கிடைத்தது எங்கள் நல்வினை,' யென்றெல்லாம் வாயாரப் புகழ்ந்தனர். இந்தப் பெருமையைத் தேடிக்கொடுத்தானே, இதுவே எனக்குப் போதும்,' என்று சலியாது கூறுவாராயினர்.

"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் லெனுஞ் சொல்."

என்ற பொய்யாமொழிக்கு இலக்காய் நின்றனர் இவ்வருமைப் புதல்வர்.

இப்படியாக இவர் தம் வேலையைப் பழுதறப் புகழுறப் பார்த்து வரும்பொழுது, ஒருநாள் துரை அவர்கள் இவரை யழைத்து, 'நான் நீண்டநாளைக்கு ஓய்வுபெற்று என் தாய்நாடாகிய இங்கிலாந்து செல்லப்போகிறேன். திரும்பி வருவது கடினம். நீர் துரிதத்தில் குதிரையேற்றம் கற்றுக்கொள்ளும். உம்மை அடுத்து வரும் காலியிடத்தில் தாசில்தார் ஆகப் போடவேண்டும் என்று உறுதியாக எழுதி வைத்துவிட்டுப் போகிறேன்,' என்று சொன்னார்.

இவருக்குக் குதிரையிருக்கும் பக்கம் போவது என்றாலே அச்சம். இருந்தாலும் துரையவர்கள் பணித்ததாலும், உயர் வேலை கிடைக்க அதுவே வழியானதாலும், 'அப்படியே ஆகட்டும்,' என்று சொல்லி, நன்றி செலுத்திப் பணிவுடன் விடைபெற்றுத் திரும்பினர்.

பார்க்கவேண்டுமே அவர் குதிரை யேற்றத்தை! விரைவு, இடக்கு இன்னவையென்று தெரியாததாயும்,

ஒரு கண் பொட்டையாயுமுள்ள ஒரு குதிரையை வாங்கி வந்து, குதிரை யேற்றத்தில் தேர்ந்த இரண்டு மூன்று பேர்களைக் கொணர்ந்து, வீட்டுத்தாழ்வாரத் திண்ணைமீதேறிக் குதிரையைத் திண்ணையோரம் கொண்டுவரச் சொல்லி, மெதுவாக ஏறி, குதிரையின் இரு மருங்கிலும் இருவர் ஓடிவர, ஒருவர் வழிகாட்டி முன்செல்ல, இவர் தலையில் முண்டாசு கட்டிக் கையில் சவுக்கெடுத்து (அதைப் பயன்படுத்தாமலே) மெல்லக் குதிரையைச் செலுத்திச் செல்லும் காட்சி பார்ப்பவர் நகைக்கவே இடந்தரும்! தப்பித் தவறிப் பக்கத்தே வருபவர்கள் குதிரையை அதட்டிவிட்டார்களானல் 'அடடே! ஓட்டாதே! அது போகிறபடி போகட்டும்,' என்று அவர்களை விரைந்து தடுப்பார். இப்படியாகக் குதிரையேற்றத்தை ஒருவாறு கற்றுத்தேறச் சற்றேறக் குறைய இரண்டு மூன்று மாதங்கள் ஆயின.

இதற்குள் பழைய துரை மாறிப்போய், ஒரு முகம்மதியர் கோட்டத் தண்டலாளராக வந்துசேர்ந்தார். வந்ததும் இவரைப்பற்றித் துரை யெழுதி வைத்துப்போனதைப் பார்த்துவிட்டு, ஒருநாள் இவரைக் கூப்பிட்டனுப்பி, 'என்ன முதலியார்! குதிரையேற்றம் கற்றுக்கொண்டு விட்டீரா?' என்று வினவ, 'ஒருவாறு கற்றுத் தேர்ந்தேன். இன்னும் ஒரு வாரத்தில் தங்கள் பார்வைக்கு வருகிறேன்,' என்று சொல்ல, அப்படியே செய்யுமாறு அவர் உத்தரவிட்டார். தொடர்ந்து இவர் ஒருவாரம் மிக எச்சரிக்கையாகப் பயின்று புதிய தலைவர்முன் தாம் அரிதிற் கற்ற குதிரையேற்றத் திறனைக்காட்ட அவரும், 'சரி நீர் குதிரை யேற்றத்தில் தேறினீர்,' என்று சொல்லி, அடுத்துவந்த தாசில்தார் காலிஇடத்தில் இவரை அமைத்தார்.

புதிய பொறுப்பு வாய்ந்த வேலையைத் திறம்படச் செய்து நற்பெயர் பெற்றார். வேலையும் காயம் ஆயிற்று.

இப்படியாக இவரும் இவரது இளவலும் உயர்பதவி பெற்றுப் புகழுடன் வாழ்ந்துபெற்றோரையும் மற்றோரையும் மகிழ்வித்தனர். பல குடும்பங்களை முன்னுக்குக்கொண்டு வந்தனர். அப்படி முன்னுக்குக் கொண்டுவரப்பட்ட குடும்பங்களில் என் தாய் தந்தையர் குடும்பமும் ஒன்று.

6. ஆச்சி! நன்றுறு, நன்றுறு!

நான் சிறுவனுயிருந்தகாலே எனக்கொரு சிறு தங்கையுண்டு. அவளுக்கு ஒன்றரையகவை யிருக்கும். மாநிறம். கட்டுடல். பரந்த முகம். விரிந்த நெற்றி. எடுப்பான பார்வை. கறுத்தடர்ந்த கூந்தல். சுருசுருப்பான இயல்பு. சிரிப்பும் பாட்டும் விளையாட்டும் சிறு குறும்பும் அக்குழந்தையுலகை இன்புறுத்தின.

அத்தங்கையுடன் கூடி விளையாடுவதிலும் அதன் மழலைச் சொற்களைக் கேட்பதிலும் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. என் பெற்றோரும் அதனிடம் மிக்க அன்புகாட்டி வந்தனர். எங்கள் வீட்டு வேலையாளரும் எங்கள் தெருவிலுள்ள அக்கம் பக்கத்து வீட்டாரும் அக்குழந்தையென்றால்,

“ அள்ளி அணைத்திடவே என்முன்னே
ஆடிவரும் தேனே.”

என்ற பாரதியாரின் அமுத மொழிக் கிணங்க அக்குழந்தையின் மழலைப் பாட்டையும் விளையாட்டையும் கண்டு மகிழ்ந்து அக்குழவியை அள்ளியெடுத்துக் கொஞ்சுவர்.

இவர்கள் எல்லாரையும்விட எங்கள் வீட்டுக்கெதிர் வீட்டில் வாழ்ந்துவந்த பண்டாரத் தாச்சிக்கு இக்குழந்தையென்றால் உயிர். அடிக்கடி இக்குழந்தை அந்த ஆச்சி வீட்டுக்குச் சென்றுவிடும். அங்கு ஆச்சியிடம் சிறு சிறு பாட்டுக்களைக் கேட்டு மகிழும். வாழ்த்துக் கொட்டு (சோபனக் கொட்டு) அவர்கள் கொட்டிக் காட்டத் தானும் கொட்டி இன்புறும். அவ்வம்மையாருக்கு மக்கட்பேறு இல்லையாதலாலும், இக்குழந்தையின் மனம் ஈர்க்கும் பண்புகளாலும் இம்மகவின்மேல் அளவிலா அன்புண்டு. இம்மகவைத் தம் வீட்டுக் கொல்லைப்புறம் அழைத்துச்சென்று, ஆங்குள்ள மாபெரும் மாமரத்து நிழலில் பாய்ந்தோடும் முக்கோட்டு அணிலையும், கீகீயெனக் கத்தி மாங்கனியைக் கொத்தித் தின்னும் பச்சைக் கிளியையும், பிற புள்ளினங்

களையும் விளையாட்டுக் காட்டி, புள்ளினங்களைப்போல் ஒலித்து மகிழ்விப்பார்கள். அவர்கள் கொல்லை மாங்கனி மிகச் சிறியதாயினும், ஒருபுறம் சிவந்தும், ஒருபுறம் பச்சையாயும் பார்க்க மிக அழகாயும் தின்ன மிக இனிப்பாயும் இருக்கும். அக்கனிகளை அணில்கள் கடித்துப் போடும். கிளிகள் தம் பவழ மூக்கினால் கொத்தித் தள்ளும். சில பழங்கள் காற்றிலும் விழும். அக்கனிகளை அவ்வம்மையார் எடுத்து இக்குழந்தைக்குக் கனிவுடன் தந்து மகிழ்விப்பதுண்டு.

இப்படியாக நாட்கள் பல சென்றன. இக்குழந்தையை எல்லாரும், 'பாப்பா, பாப்பா,' என்று செல்வமாக அழைப்பர். இக்குழந்தை ஆச்சியாரிடம் தான் கற்ற கும்மிப் பாட்டையும் பிற பாட்டுக்களையும் தன் மழலைச் சொல்லாலும் மென்மைச் சீருடலாலும் இனிதுறப் பாடியும் ஆடியும் கைகொட்டியும் எல்லோரையும் மகிழ்விக்கும். ஆனால், தான் கற்றுக்கொண்டவற்றைத் தன் அருமை ஆசிரியையாய ஆச்சிக்குக் காட்டுவதில் அதற்கு அளவிலா மகிழ்ச்சி. வீட்டு வெளித் தாழ்வாரத்தில் இக்குழந்தை சிறுவீடு கட்டியும் மண்குவித்தும் பிற குழந்தைகளுடன் விளையாடும்பொழுது தெருவழியே தண்ணீர் மொள்ளக் குடந்தாங்கி ஆச்சி போகக் கண்டு விட்டால், தன் பிற சிறு குழந்தை விளையாட்டுக்களை நிறுத்திவிட்டு, எழுந்து,

> "ஆச்சி ! நன்னை, நன்னை !
> ......நன்னை ! நன்னை !"

என்று பாடிச் சிரித்துக் கால்போட்டுக் கைகொட்டிச் சுற்றி வரும். இக்காட்சியைக் காணும்போதெல்லாம் அச்சிறு குழந்தையின் அன்பாசிரியை ஆச்சி அன்பால் ஈர்க்கப் பட்டு நின்று, அக்குழந்தை யுலகின் இன்பத்தில் திளைத்து, குடத்தைத் தெருத்தாழ்வார முகட்டில் வைத்துவிட்டு, குழந்தையை வாரியணைத்து முத்திக் கொஞ்சிச் செல்வதுண்டு.

இப்படியிருக்கையில் ஓர் நாள் என் அன்னை தன் தமக்கையின் கணவர் ஊராகிய சிறுமா விலங்கைக்குச் சென்றுவிட்டுக் காலை ஒன்பதுமணிக்குக் குழந்தை 'பாப்பா'வுடனும் என் பெரிய தமக்கையுடனும் நாங்கள் வதியும் நல்லாடைக்கு வந்து சேர்ந்தனள்.

குழந்தை இடுப்பில் கறுப்புக் கயிற்றில் கோத்த பொன் சலங்கையும், அரை மூடியும், கால்களில் காப்பு, சதங்கையும், கழுத்தில் தங்கச் சங்கிலியும், தலைமுடித்துப் பூவும் சூட்டித் தாயுடனும் தமக்கையுடனும் மாட்டு வண்டியில் வந்து எங்கள் வீட்டு வாயிலடியில் உள்ள நிழல் நிறைந்த வாதா மரத்தடியில் இறங்கிற்று. அப்பொழுது அங்கிருந்தோர் குழந்தையை ஒவ்வொருவராகத் தூக்கிக் கொஞ்சினர்.

என் தாய் வீட்டினுள் சென்று வீட்டு வேலையைப் பார்க்கத் தொடங்கினள். அன்று ஆண்கள் எண்ணெய் தேய்த்துக்கொள்ளும் நாள் ஆனதால், என் இரு அண்ணன் மார்களுக்கும் எனக்கும் வீட்டினுள் எண்ணெய் தேய்த்து விட்டனள். இதுபோது குழந்தை பாப்பா வீட்டு முன் கூடத்தில் கிடந்த ஒரு விசிறியையும், மெல்லிய நூற்கயிறு கட்டிய ஒரு சிறு விளையாட்டுக் குடத்தையும் எடுத்துக் கொண்டு சென்று வெளித்தெருவில் இறங்கியது. தெருவில் வேலாயுதம் என்ற மீசை நரைத்தகிழவன் குனிந்தவண்ணம் தென்னங் கீற்று முடைந்துகொண்டிருந்தான். அவனும் இக்குழந்தை அவனைத் தாண்டிச் சென்றதைக் கண்டா னில்லை........

சற்றுநேரம் கழித்து என் தாயைப் பெற்ற பாட்டி (அம்மானி), 'குழந்தை யெங்கே! அதன் சத்தத்தையே காணவில்லையே!' என்று என் தாயைக் கேட்டனள். என் தாய், 'மேலவீட்டு அத்தான்* குழந்தையோடு கொஞ்சிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வீட்டுக்குத் தூக்கிச்

---

* என் எடுப்பு (ஸ்வீகார)த் தந்தை திரு. N. S. அருணசல முதலியார்.

சென்றிருப்பார்கள்,' என விடையிறுத்துவிட்டு அவர்களைப் போய்க் கேட்டனள். 'ஐயோ ! நான் தூக்கிவரவில்லையே! கொஞ்சிவிட்டு வந்துவிட்டேனே!' யென்று சொல்லி அவரும் குழந்தையைத் தேடியலைந்தனர். தாயும் வீடு வீடாகச் சென்று பார்த்தனள். குழந்தை யெங்கும் காணவில்லை! தெருவெல்லாம் ஒரே குழப்பம். அன்புரு ஆச்சியும் 'ஐயோ! என் அருமைக் குழந்தையைக் காணவில்லையே! என் செல்வத்தைக் காணேமே! நான் என்ன செய்யப்போகிறேன். எங்கு இனிக் காண்பேன் என் குழந்தையின் அருமை ஆட்டத்தை! எப்படிக் கேட்பேன் அதன் நன்னயப்பாட்டை,' என்றெல்லாம் ஓலமிட்டலைந்தார்கள்.

'ஏ வேலாயுதம்! நீ இங்குக் கீற்று முடைந்துகொண்டிருந்தாயே! குழந்தையைப் பார்த்தாயா?' என்று என் அன்னை அவனை உசாவினள். 'ஐயோ! என் கண்களில் தென்படவில்லையே அக்குழந்தை! நான் குனிந்துகொண்டே கீற்று முடைந்துகொண்டிருந்துவிட்டேன்,' என்று தன் கண்களில் நீர் தளும்பக் கூறினன்

எங்கள் வீட்டுப் பக்கலில் ஒரு வாய்க்கால் உண்டு. அதில் புதுத்தண்ணீர் நுரையிட்டுக்கொண்டு ஓடிற்று. தண்ணீர் தொடைமட்டும் ஆழம் இருக்கும். அவ்வாய்க்காற் கரையில் ஓங்கி வளர்ந்த ஒரு விளாமரம் உண்டு. அவ் விளாமரத்துப் பக்கத்தேயுள்ள வாய்க்காலின் குறுக்கே கிணற்றங் கரைக்குப்போக ஒரு மரப்பாலம் போடப் பட்டிருந்தது. அப்பாலத்தின் நடுவே ஒரு சிறு நூற்கயிறு இரு பக்கங்களிலும் தொங்குவதையும், வாய்க்காற் கரையில் ஒரு விசிறி கிடப்பதையும்கண்டு திடுக்குற்ற என் அம்மானி (தாயைப் பெற்றவள்) பரபரப்புடன் வாய்க்காலில் இறங்கித் தடவிக்கொண்டே சென்றனள்.

கரையிலுள்ள விளாமரத்தைக் குத்தகை யெடுத்திருந்தவன் அவ்வாய்க்காலில் பழுத்து விழுந்து தண்ணீரில் உருண்டோடும் விளாம்பழத்தைத் தடுத்து எடுக்க வாய்க்

கால்' குறுக்கே வேலி போட்டுத் தழையிட்டுத் தண்ணீரைச் சற்றுத் தடை செய்திருந்தான்.

காலாலும் கையாலும் தண்ணீரில் தடவிச்சென்ற அம்மானிக்கு அணையண்டைக் காலில் ஏதோ வழுவழுப்பாகத் தட்டுப்படவே, 'ஐயோ குழந்தை! குழந்தை! என்று அலறி அதை வாரியெடுத்துத் தோளோடு அணைத்துக்கொண்டு ஒன்றும் புரியாது வாய்க்காலிலேயே தத்தளித்து நின்றனள்! அப்பொழுது அங்கு வந்துகூடின அக்கம் பக்கத்து வீட்டாரில் ஒருவர், வாய்க்காலில் விரைந்திறங்கிக் குழந்தையை வாங்கிக்கொண்டு கரையேறினர்.

இத் திடுக்குறு செய்திகேட்ட என் தாய் தலைவிரிகோலமாய் ஓடிவந்து, தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு அரற்றிக் குழந்தையைப் பற்றினள். கண்மூடித் தலை சாய்ந்த அக் குழவியை அவ்வூரில் கணக்குப்பிள்ளை வேலை பார்க்கும் என் மாமா வாங்கிக்கொண்டு எங்கள் வீட்டுக்கு விரைந்துசென்றார்.

'ஐயோ! போய்விட்டதே! குழந்தை போய்விட்டதே!' என்று ஓலமிட்டுக்கொண்டு என் தாய் பின்னே ஓடினள்.

இத்தருணத்தில் தான் செய்தியெட்டி என் தந்தை தன் பருத்த உடலைத் தூக்கிக்கொண்டு வயல்வெளியிலிருந்து ஓட்டமும் நடையுமாக வந்து, கண்ணீரும் கம்பலையுமாகவுள்ள என் அன்னையைக் கடிந்துகொண்டு மருத்துவனுக்கு ஆள் அனுப்பினர். மருத்துவனும் ஓடோடி வந்து குழந்தை நாடியைப்பார்த்து, மூக்கருகில் விரலை வைத்துப் பார்த்துவிட்டுத் திகைத்து நின்றனன். அவன் முகக் குறிப்பிலிருந்து குழந்தையிழப்புச் செய்தியைப் பலரும் அறிந்துகொண்டனர்!

கணக்குப்பிள்ளை மாமா மட்டும், 'இருங்கள், ஒரு ஆசை பார்ப்போம். தண்ணீரில் மூழ்கித் தண்ணீர் குடித்திருக்கிறது குழந்தை. அதைத் தலையில் குப்புறவைத்துச் சுற்றிப் பார்க்கிறேன்,' என்று சொல்லிக் கர கரவென்று சுற்றினர். தண்ணீர் வெகுவாக வெளிப்படவில்லை. மூச்சு அசையவில்லை. கண் திறக்கவில்லை. பிறகு ஒரு வண்டிச்

சக்கரத்தை ஓர் உயர்கட்டைமேல் வைத்து, அதன்மேல் குழந்தையைக் குப்புறக் கிடத்தி விரைவாகச் சுற்றினர். அதனுலும் யாதொரு பயனில்லை. மேலும் பலவகை மருத்துவங்கள் செய்துபார்த்தும் பயனற்றுப் போய் விட்டது!

வீடுமுழுதும் அழுகுரல் நிறைந்தது. திரள் திரளாகப் பெண்டிரும் ஆடவரும்வந்து நெருக்கியவண்ண மிருந்தனர். வீடு அல்லோல கல்லோலப்பட்டது. இக் கூக்குரலுக்கு நடுவில் நானும், என் இரு அண்ணன்மாரும் என்னைத் தலையோடு, என்னைக் கண்ணில் வழிய வழிய கவனிப்பாரற்று அழுதுகொண்டு நின்றோம். இந்நிலையில் எங்கள் அன்னை எங்களைக் கண்ணுற்று, 'அடப்பாவிகளா! இந்தப் பிள்ளைகளைக் கவனிப்பார் யாருமில்லையா? எண்ணெய்த் தலையோடு வெகுநேரமாய் நிற்கின்றார்களே! அழைத்துப் போய் அரைப்புத் தேய்த்து முழுக்காட்டி வாருங்கள்,' என்று பரிவுடன்கூற, எங்கள் உறவினருள் ஒரு முதுமாது எங்களை அழைத்துச் சென்று, வீட்டு எதிரேயுள்ள அல்லிக்குளத்தில் தலைமுழுக்காட்டி அழைத்துவந்தனள்.

வீட்டிலுள்ள அழுகைக் கொந்தளிப்பில் எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. வெளியில் ஓடி வாய்க்கால் கரையிலிருந்து கண்ணீர் ததும்ப ஓடும்தண்ணீரை நோக்கி நின்றேன். வாய்க்காலில் தண்ணீர் கள களவென ஒலித்துக் குமிழியிட்டோடிய வண்ணமிருந்தது. விளாமரம் காற்றில் சலசலத்தது..........

அப்பொழுதுபோலவே இப்பொழுதும் அங்குச் சென்று நின்று நோக்குவேனுகில், தண்ணீரின் கள களப்பும், விளாமரத்தின் சலசலப்பும் மறைந்த பச்சிளங்குழந்தையின் கால் சதங்கையொலியோடு,

"ஆச்சி! நன்னை, நன்னை!
நன்னை! நன்னை!

என்ற மழலை இசை கலந்தே ஒலிப்பதாக உணர்வு பெறுகிறேன்!

7. யாரடா மரத்தில்?

நல்லாடை என்பது நான் பிறந்த வூர். அது நீர் வளம் நிலவளம் பொருந்தியது. மாஞ்சோலைகள், தென்னந்தோப்புகள், வாய்க்கால்கள், அல்லிக் குளங்கள், நெல் வயல்கள் முதலிய பல வுள்ளது.

நான் சிறுவனா யிருக்கும்பொழுது தின் பண்டங்களில், அதிலும் முக்கனிகளில் ஒன்றாகிய 'மா'வில் மிக விருப்பம். என் மாமா வீட்டுக் கொல்லையில் மூன்று ஒட்டு மாமரங்கள் உண்டு. நான் சிறுவனா யிருக்கையில் என் தாய் தந்தையர் என் மாமா குடும்பத்தோடு சேர்ந்து இருந்தனர்.

எனக்குச் சற்றேறக்குறைய ஒன்பது அகவை யிருக்கும். நானும் எனக்கு இரண்டாண்டுகள் மூத்த என் தமையனும் ஒருநாள் அகன்றுயர்ந்த ஓர் ஒட்டு மாமரத்தில் ஏறி, உயர்ந்த கிளை யொன்றில் அமர்ந்து, பகலவனால் முத்திியிடப்பட்டு ஒருபுறம் சிவந்த நீண்ட ஒட்டு மாங்காய்கள் தென்றலில் அழகாக இங்கும் அங்கும் அசைவதையும், கிளிகள் கீ! கீ! யென்று கத்திக்கொண்டு அவற்றைக் கொத்தித் தின்பதையும், தின்று அலுத்த கிளிகள் அரை குறையாகத் தின்ற செங்காயை வேகமாக ஆட்டிவிட்டு 'விர்'ரென்று பறந்து செல்வதையும், கிளைக்குக் கிளை தாவிக் கிளிகளுடன் ஒலித்துப் போட்டியிட்டு மாங்காயைத் தின்னும் அணில்களையும் கண்டு மகிழ்ந்து, தலைக்கொரு செங்காயைப் பறித்துத் தின்றுகொண்டு மனம் போன போக்கில் உரையாடிக் கொண்டிருந்தோம்.

அப்பொழுது சற்றுத் தொலைவில் எங்கள் வீட்டுச் சந்து வழியே வந்த எங்கள தந்தை எங்கள் பேச்சுக் குரலை உற்றுக் கேட்டு, "யாரடா மரத்தில்? *பாப்பையாவா?" என்று கூறினர். எங்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது! ஒன்றும் விடை பகராமல் விரைவில் கீழே யிறங்கத் தலைப்

---

* என் செல்வப் பெயர்.

பட்டோம். அவர் தெருவைச் சுற்றி வாய்க்காலைத் தாண்டி மாங்கொல்லை நோக்கி வருவதைப் பார்த்த நாங்கள், அவர் அடிமரத்தை அணுகுமுன் கீழிறங்கி ஓடிவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் மளமளவென் றிறங்கினோம். அப்பொழுது நான் பிடித்த கிளையும் கால்வைத்த கிளையும் முறியவே, 'மளமள தொப்'பென்று மரத்தின் மேலேயிருந்து கீழே விழுந்தேன். என்பின் இறங்கிய என் தமையன் அச்சங்கொண்டு, 'ஐயோ! வீழ்ந்து விட்டான்! வீழ்ந்து விட்டான்!' என்று கூவிக்கொண்டே தந்தையை நோக்கி ஓடினான். அவர் தன் பருத்த உடலைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தார். அச்சமயம் தண்ணீர் மொள்ள வந்த என் தாயாரும் குடத்தைப் போட்டுவிட்டு 'என்னடா! என்னடா! யாரடா விழுந்தது! யாரடா விழுந்தது! *கண்ணையாவா! பாப்பையாவா! என்று கூறிக்கொண்டு தலைவிரி கோலமாய் ஓடி வந்தாள். 'பாப்பையாதான் அண்ணி மரத்திலிருந்து விழுந்து விட்டான்! காயம் பட்டுப்போச்சு. வந்து பாரேன்!' என்று கூவிக்கொண்டு அன்னைக்கு முன்னே ஓடிவந்தான், என் தமையன்.

நான் விழுந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தேன். கிளை கீறி என் கீழ் உதடு கிழிந்து தொங்க, உடலெல்லாம் குருதி வழிந்தோடிற்று. கீழ் வரிசைப் பற்கள் நான்கு உள்ளே சாய்ந்துபோயின. மழைபெய்து கீழே சேறாக இருந்ததால் விழுந்த இடத்தில் ஒரு சாண் பதிவு ஏற்பட்டிருந்தது.

என் செந்நீர்க் கோலத்தையும் உதடு கிழிந்து தொங்குவதையும் கண்ட தாய் 'அட பாவி! ஏண்டா உனக்குக் கேடு. ஐயோ! பிள்ளை போச்சே! வைத்தியனைக் கூப்பிடுங்களேன் '...........' என்றெல்லாம் சொல்லி 'மார் மார்' என்று அடித்துக் கொண்டாள். அதுவரை கலக்கமுற்றுவாளாவிருந்த நான் 'சு—ஆ—இரு அ—ண்—ணி ஒன்றும் இ—ல்—லை எனக்கு——' என்று தட்டுத் தடுமாறி என்

* என் தமையனின் செல்வப் பெயர்.

தொங்கும் கீழ் உதட்டை மேல் உதட்டுடன் பொருத்த முயன்று ஆறுதல் மொழி பகர்ந்தேன். அப்பொழுது தான் பேச இயலா என் இரக்கநிலை எனக்கு விளங்கிற்று. கண்ணீரும் பெருகி குருதியுடன் கலந்தொழுகத் தலைப் பட்டது.

பிறகு அங்கு ஓடிவந்த ஆட்களும் என் தந்தையுமாக என்னை வீட்டுக்குத் தூக்கிச் சென்றனர். என்ன விரைவில்தான் வந்தானோ எங்கள் குடும்ப மருத்துவன் பக்கிரி! அவன் சிறந்த உயர்மேனியும், கறுத்த அழகுமீசையும், ஈர்க்கும் பார்வையும் கொண்டவன். தன் பித்தளை மருத்துவப் பெட்டியைக் கையில் தாங்கி இமைப்பொழுதில் என் அருகில் வந்து நின்றான்! ஆனால் அப்பொழுது அவனைப் பார்த்தது என் புண்பட்ட மனத்துக்குக் கூற்றுவனைப் பார்த்தது போலவே யிருந்தது! என்ன செய்வானோ என்ற அச்சம்தான் காரணம்.

நான் அஞ்சியதற்கேற்ப அவன் குருதிவடியும், கிழிந்து தொங்கும் என் உதட்டையும், பற்களையும் உடலையும் துருவிப் பார்த்துவிட்டு உடனே 'நல்ல வெள்ளைத் துணி, சாராயம், மன உறுதியான ஒரு வேலையாள், தண்ணீர் இவற்றை எனக்குக் கொடுத்துவிட்டு நீங்கள் எல்லாரும் வீட்டைவிட்டு வெளியே போய் விடுங்கள்,' என்று என் பெற்றோருக்கு உத்தரவிட்டான். அப்படியே அவனுக்கு வேண்டுவன கொடுத்து என்னையும் ஒரு 'ஆளையும்' வீட்டு உள்வாசலில் விட்டுவிட்டு எல்லாரும் வெளியே சென்று விட்டனர்.

எனக்குக் கொஞ்சம் மயக்கத்துக்காகச் சாராயம் கொடுக்கப்பட்டது. நாற்பது ஆண்டுகளாக எங்கள் குடும்பத்தில் உண்மையுடன் உழைத்துவரும் வேலையாள் இராமசாமி தன் நரைத்த மீசையை முறுக்கி, அதட்டல் உருட்டலுடன் வந்து என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். ஊசி நூல் கொண்டு என் கிழிந்த உதட்டை மருத்துவப்பக்கிரி தன் பண்பட்ட கைகளினால் விரைவில்

தைக்கத் தலைப்பட்டான். சாராய மயக்கம் இருந்தும் என்னால் வலி பொறுக்க முடியவில்லை. உரக்கக் கத்தினேன். இராமசாமி என்னை மிக இறுகப் பிடித்துக் கொண்டு அதட்டிய வண்ணமிருந்தான். தையலும் ஒருவாறு முடிந்தது. கத்தல் நின்று முணங்கலில் இறங்கினேன். உள்ளே சாய்ந்திருந்த நான்கு பற்களையும் கொஞ்சம் முன்னே இழுத்துவைத்து, மருந்து போட்டு, தாளுக்கும் தலைக்குமாக ஒரு பெரிய கட்டுக்கட்டிச் சென்றான் பக்கிரி.

மூன்று வாரங்கள் கழிந்தன. கிழிந்த உதடு சேர்ந்தது. சாய்ந்த பற்கள் நிமிர்ந்தன. ஆனால் மாறாத வடு ஒன்று என் முகத்தில் கீழ் உதட்டின்கீழ் ஏற்பட்டது. என் குழந்தை உள்ளத்திலும் மாறாத வடுவொன்று தோன்றியது. சிரிப்பு, விளையாட்டு, குறும்பு, முதலியவற்றில் வெகுவாக ஈடுபட்ட எனக்கு இவ்வீழ்ச்சிக்குப் பிறகு இடையிடையே தனிமையை நாடிச் செல்வதும், சாய்ந்து நிமிர்ந்த பற்கள் சில ஆண்டுகளில் வீழ்ந்து, பிறகு முளையாவெனச் சொல்லிப்போன மருத்துவப் பக்கிரியின் சொற்களைத் தனிமையில் எண்ணியெண்ணி ஏங்கிக் கண்ணீர் வடிப்பதும் வழக்கமாயிற்று. கணிதத்தில் கூர்மதி பெற்றிருந்ததின் காரணமாக, என் தாய்மாமா என்னைக் கணிதத்திலும், சோதிடத்திலும் பெயர் பெற்ற 'வலங்கிமான் கோவிந்த செட்டி' என்று அருமையாகக் கூப்பிட்டு வந்த பெருமைநிலை போய், மனக்கலக்கத்தின் காரணமாகவோ, மூளை அதிர்ச்சியின் காரணமாகவோ, கணிதத்தில் சுருசுருப்பும் ஊக்கமும் என் மரவீழ்ச்சிக்குப் பிறகு குன்றி மந்தத்தன்மையும் ஏற்பட்டு விட்டதாக நான் ஒருவாறு அறிந்தேன். என் தந்தை முகவாட்டமுற்று 'ஐயோ' நான் உன்னை 'யாரடா மரத்தில்' என்று கூவி மிரட்டாதிருந்தால் இந்தப் படுவீழ்ச்சி ஏற்பட்டிராதல்லவா? இந்த மாறா வடு உன் அழகிய முகத்தைக் கெடுத்திராதல்லவா? பாவி நான் உன் துன்பத்துக்கு ஆளானேன்?' என்று சொல்லி ஏங்குவதுண்டு. அவ்வீழ்ச்சிக்

குப் பிறகு முன்பைவிட மிகுதியாக என்னிடம் அவர் அன்பு கரைபுரண் டோடியது!

மனக்கலக்கமும் ஏக்கமும் உற்றுத் தனிமையை நாடிச் செல்லும் பழக்கம் வீழ்ச்சிக்குப் பிறகு ஏற்பட்டதன் விளைவாக இயற்கை யன்னையின் வியத்தகு காட்சிகளில் ஈடுபடுவதும், வாழ்க்கையின் போக்கைப்பற்றிச் சிந்திப்பதும் என் இயல்பாயிற்று.

'இம்மன மாற்றத்திற்கு உளநூல் வல்லார் (Psychologists) தகுந்த காரணம் காண முயல்வார்களாக! ஒன்று மட்டும் எனக்குத் தோன்றுகிறது. இவ் 'அமர்' வீழ்ச்சி ஏற்பட்டிராவிடின் நான் கணித வல்லுநரான இராமானுசத்தைப் போன்றோ, கலைப் பேராசிரியராய சி. வி. ராமன் போன்றோ பெயரெடுத்திருப்பேன்' என்று எண்ணுகிறேன். இவ்வீழ்ச்சியின் காரணமாக, தமிழ்ப் பேரறிஞர் மறைமலை அடிகளாகவோ, அல்லது உலகக்கவி இரவீந்திரராகவோ விளங்க இடமிருப்பதாகத்தான் நினைத்து இன்னும் உழைத்து வருகிறேன்,—'எல்லாம் நன்மைக்கே' என்ற முதுமொழி பொய்க்காதென உறுதிப் பாட்டால்!

8. வீடு சோறுபோடுமா?

நான் சிறுவனுயிருக்கும்பொழுது, என் தாய் தந்தையர் நல்லாடை என்னுமூரில் என் தாய்மாமன் வீட்டில் இருந்து குடும்பம் நடத்திவந்தனர். பல்லாண்டுகள் மாமா குடும்பமும், எங்கள் குடும்பமும் ஒன்றுயிருந்து வந்தன. எங்கள் தாயைப்பெற்ற பாட்டனுர் இறந்தபிறகு, என் சிறியமாமா நீதிமன்றத் தலைவராக இருந்து வந்ததால், அவர் நிலபுலங்களை என் தந்தையே கண்காணித்து வந்தார். ஊர்த்தலைவராகவும் இருந்துவந்தார். ஊரில் நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தார். மாவட்ட நீதிபதியாயிருந்த என் சிறியமாமா ஆண்டுதோறும் விடுமுறைக்கு நல்லாடைக்கு வருவது வழக்கம். அவர் விடுமுறைக்கு வருவதற்குமுன் எங்கள் வீடும் தெருவும் ஒரு பெரும் திருமணத்துக்கோ, திருவிழாவிற்கோ அலங்கரிக்கப்படுவது போன்று தானிருக்கும். தெருக்களையெல்லாம் தூய்மைப் படுத்துவதும், வீட்டை ஒட்டடை அடிப்பதும் கிணற்றங் கரையிலும் தெருவிலும் கோடைப்பந்தலும் வாசலில் காற்றுப்பந்தலும் போடுவதுமாகத் திமிலகுமிலப்படும். என் உடன்பிறந்தார்களும் நானும் 'மாமா வரப்போகிறுர்! மாமா வரப்போகிறுர்! புதுச்சட்டை வாங்கிவருவார். ஊருக்குப் போகும்போது 'பணம்' கொடுப்பார். நான் என் உண்டியற் கலயத்தில் போட்டு வைத்துக்கொள்வேன்,' என்றெல்லாம் மகிழ்ச்சியூற்றில் திளைத்துநிற்போம். எங்களன்புள்ள அன்னைக்கு ஒய்வே இராது. 'அண்ணன் வரப்போகிறுர்கள்,' என்று பெருமிதத்துடன் பலரிடம்சொல்லி, 'வீண்காலம் போக்கநேரமில்லை. உழுந்துவாங்கி அப்பளம் போட்டாக வேண்டும். தேங்காய் உடைத்துப்போட்டு நல்லதேங்காய் எண்ணெய் ஆட்டவேண்டும்,' என்று சொல்லித், 'தேங்காய் பறிக்க ஆள் விடுங்கள்,' என்று என் அப்பாவிடம் சொல்லுவாள். அப்பா தேங்காய் பறிக்க ஆளைத் தயார் செய்வார். "காரியக்காரனுக்குப் பிற அலுவல்கள் இருக்கின்றன. தேங்காய் பறிக்கும்பொழுது யாரேனும் கூடஇருந்தால் நலம். 'கொள்ளிமேட்டிலும்' 'மேட்டிருப்பிலும்'

காய்கள் பறித்து வரவேண்டும்,'' என்று சொல்லி வாய் மூடுமுன், 'நான் போய்க் காவலிருக்கிறேன் அப்பா,' என்று நான் முந்துவேன். எனக்குத் தேங்காய் பறிக்கும் பொழுது தென்னந்தோப்பில் காவலிருப்பது என்றால் பெருங்களிப்பு. ஆனால், நான் காவலுக்கு வரப்போகிறேன் என்றால், மரம் ஏறிகளுக்குக் கொஞ்சம் அச்சம் தான். ஏனெனில், அவர்கள் நினைத்தபடி தேங்காயைத் திருடவோ, இளநீர் வெட்டிக் குடிக்கவோ விடமாட்டேன். கண்டுபிடித்துத் தந்தையிடம் தெரிவித்து விடுவேன். ஆனால் என்னைக் கேட்டால்மட்டும் கொடுப்பேன்.

தேங்காய் பறித்துக் காணம் ஆடுவது என்றால் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஏனெனில், தேங்காய் வெட்டிப்போட்டால் காவலிருக்க ஆள் வேண்டும். தேங்காய் வெட்டும்போது இளநீர், தேங்காய் ஏராளமாய்க் கிடைக்கும். 'காவல் நான் இருக்கிறேன், நான் இருக்கிறேன்,' என்று என் அன்னையை வேண்டி அவள் உடன்படும்படி செய்வேன். அவள் உடன்படில் நான் பாடசாலைக்குச் சில நாட்களேனும் போகவேண்டுவதில்லையென்ற எண்ணமே எனக்குத் தேங்காய் பறிப்பதிலும், காணம் ஆடுவதிலும் தனி ஊக்கத்தைத் தந்தது.

இப்படியாகப் பல்லாண்டுகள் கோடை விடுமுறைகளில், என் மாமா, குடும்பத்துடன் வந்து உடன் இருந்து மகிழ்வதும், எங்களை மகிழ்வித்துச் செல்வதும் வழக்கம்.

ஆனால், ஓர் கோடைவிடுமுறைக்கு என் மாமா வந்திருந்தபொழுது, எங்கள் தந்தைக்கும் அவருக்கும் குடும்பத்தகவலில் ஏதோ மனத்தாங்கல் ஏற்பட்டுவிட்டது. என் அன்னை தலையிட்டு இருவருக்கும் தணிவும், உடன்பாடும் ஏற்படுத்தத் தன் முழுமதியையுங்கொண்டு முயன்றனள். ஆனால், பிளவு விரிவடைந்து வந்தது. அன்னையுடன் வாதம் செய்த என் மாமா, 'இனிக் கோடை விடுமுறைக்கு வரின் எங்குச் செல்வது என்று ஆகிவிட்டது,' என்று விழித்தார். அன்னை அதுவரை அமைதியுடன் உரையாடியவள் கண்களில் தீப்பொறி பறக்க, தன்மதிப்புணர்ச்சி

மேலிட்டால், 'கவலை வேண்டாம். நீங்கள் அடுத்த கோடை விடுமுறைக்கு வருமுன், உங்கள் வீட்டைக் காலிசெய்து விடுகிறோம். நீங்கள் வந்து தாராளமாய் இருந்துகொள் ளலாம்,' என்று சொல்லி, உரையாடலை நிறுத்தித் திரும் பினுள்.

மாமா விடுமுறை முடிந்து அலுவலுக்குத் திரும்பி விட்டார். ஆனுல், அவர் சொன்னசொல் என் அன்னை உள்ளத்தைத் தைத்தபடி இருந்தது. எவ்வளவு மன வெழுச்சியுடன் அவர் வரவை எதிர்பார்த்து வீட்டை ஆண்டுதோறும் அலங்கரிப்பாளோ, அவ்வளவு முயற்சி யுடன் இப்பொழுது அவர்வரவை எதிர்பார்த்து வீட் டைக் காலிசெய்து வேறிடம் செல்ல வேலைசெய்யத் தொடங்கிவிட்டாள். இப்பொழுது என் தந்தை அவளை அமைதிப்படுத்த இடையிடையே முயன்றுவந்தும் பய னில்லை. தடைப்படுத்தத் தடைப்படுத்த அவள் விரைவு மிகுதிப்பட்டுக்கொண்டு வந்தது.

இரவும் பகலும் என் அருமை அன்னை 'வீட்டைக் காலிசெய்து விடவேண்டும். கோடை வருகிறது. வேறு குடி போகவேண்டும்,' என்று என் தந்தையினிடம் சொல்லியவண்ண மிருப்பாளாயினள்.

திருக்கண்ணங்குடி என்ற ஊரில் என் தந்தைக்கு முன்னேர்களின் சொத்து கொஞ்சம் உண்டு. அதைத் தந்தை பங்காளிக்காரர் பார்வையில் விட்டிருந்தார். ஒரு ஆண்டிலாவது அவர்கள் வருவாய் ஒன்றும் கொடுப் பதில்லை. தந்தை அதைப்பற்றிக் கேட்பதும் கிடையாது. இப்படி இருக்கையில் திடீரென ஒரு செய்தி வந்தது. அதாவது திருக்கண்ணங்குடிப் பங்காளிகள் கடன்பட்டு விட்டதால், அவர்கள் பங்கு நிலத்தை ஏலம்போடப்போகி ருர்கள் என்று தெரிந்தது. தந்தை அதைப்பற்றியும் கவலாமல் வாளாவிருந்தனர். ஆனுல், கருமமே கண்ணு யுள்ள என் அன்னை, புதுவீடு கட்டிக் குடிபோக இவ் வரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற

மனத்தினளாய், என் தந்தையிடம் வந்து, "நீங்கள் உடனே சென்று ஏலம் போடப்போகும் நிலத்தை ஏன் ஏலம் எடுத்துவரக்கூடாது? அப்படி எடுத்தால் நமக்குப் பின் கூடுதலான பணம் கிடைக்குமே! போய் வாருங்கள்," என்று ஊக்கினள்.

"வேலையில்லை, போ! எவனாவது எடுத்துப்போகட்டும். அவ்வளவு தொலைவிலுள்ள நிலத்தை வாங்கி என்ன பயன்? நமக்குள்ள பங்குநிலத்தில் இதுவரை என்ன பயன் கண்டோம்? இன்னும் மேலும் வாங்கின் பங்காளிகளே பயன் பெறுவார்கள்!" என்றுசொல்லி மறுத்தார்.

"நாம் இப்பொழுது ஏலம் எடுத்துவிட்டால், நிலம் வேண்டாதுபோனால் கூடுதல் விலைக்குப் பிறகு விற்றுவிடலாமே, இப்படி இந்த அரிய வாய்ப்பைக் கைநழுவ விடலாமா?" என்றாள் என் தாய்.

"இப்பொழுது குறைந்தது நானூறு ஐந்நூறு ரூபா வேண்டுமே! எங்குப் போவது திடீரென்று அவ்வளவு பணத்துக்கு? என் கையில் தற்போது பணம் இல்லையே!" என்று சொன்னார்.

என் தாய் அவ்வளவு எளிதில் தன் முயற்சியில் தோல்வி பெறுபவள் அல்ல. "பணம் நான் தயாரித்துக் கொடுக்கிறேன், போய் பங்காளிநிலத்தை ஏலம் எடுத்து வாருங்கள்," என்று தூண்டுவாளாயினள்.

"இது ஏதடா சனியன். உட்கார விடமாட்டேன் என்கிறது! பைசாசு! பிடித்தால் குரங்குப் பிடிதான். இரவு பகல் தூங்காமல் இதே தொந்தரவாய்ப் போயிற்று," என்று எல்லாம் என்னென்னவோ சொல்லிச் சலித்துக் கொண்டார். ஆனால், என் தாய் விட்டபாடில்லை. ஏலம் கூறும் நாள் நெருங்கிற்று. தாய் வேண்டாத சில நகைகளை விற்றும், கொஞ்சம் ரூபா கடன் வாங்கியும் தந்தையிடம் ரூ. 450 கொடுத்து, 'போய் வாருங்கள்' என்று வழியனுப்பிவிட்டனள்.

தந்தை அரைமனதுடனேயே திருக்கண்ணங்குடிக்குச் சென்று பங்காளிநிலத்தை '250' ரூபாவுக்கு ஏலம் எடுத்து வந்தனர். கிட்டத்தட்ட ஆறு (6) மாநிலம் இருக்கும். நன்செய்நிலம் ஏலத்தில் போட்டி மிகுதியாயில்லாததால் குறைந்த தொகைக்கே போயிற்று. தந்தை நிலத்தை ஏலம்எடுத்துத் திரும்பியநாளை ஒரு நன்னுளாகக் கருதினள் என் தாய்.

சில நாட்கள் சென்றன. திருக்கண்ணங்குடி நிலத்துக்குப் போட்டிவந்தது. 'நான், நீ' என்று நிலத்தை வாங்க முன்வந்தனர். ஏலம் எடுத்த பங்கையும் தன் பங்கையும் சேர்த்து ஏறக்குறைய '2,500' ரூபாவுக்கு என் தந்தை விற்றனர். இதை என் தாயினுல் நம்பக்கூட முடியவில்லை. '250' ரூபாவுக்கு ஏலம் எடுத்த பங்கு '1,250' ரூபாவுக்கு விலை போகும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை பெருந் தொகையாக ரூ. 2,500 வந்ததும், தான் கோடைக்குள் புதுவீடு கட்டிக் குடிபோக வேண்டும் என்ற எண்ணம் பாதி நிறைவேறியதாகவே என் தாய் எண்ணினுள்.

இதுபொழுது எங்கள் வகையினரில் ஒருவர், 'திருக்களர்சேரி' என்ற நான்கு கல்தொலைவில் உள்ள ஊரில் ஒரு பெரிய புதுவீடு கட்டி, குடிபோகுமுன் இறந்துபோய்விட்டார். அவர் குடும்பத்தினர் அவ்வளவு பெரிய வீடு தனக்கு வேண்டாம் என்றும், தாம் வீட்டை விற்றுவிட்டு மயூரம் செல்லப்போவதாயும், என் தாய்க்குத் தகவல் கிடைக்க அவள், "கொல்லன், தச்சனை அனுப்பி அந்த வீட்டைப் பார்த்துவிட்டு வரச்சொல்லுங்கள். அவ்வீட்டை நாம் வாங்கிவிட்டால் அவ்வீட்டிலுள்ள பொருள்களைக்கொண்டு நல்லாடையில் ஒரு புதுவீடு அமைத்துவிடலாம்," என்று சொல்லினள்.

எதற்குமே காலம் தாழ்த்துவதும், எக் காரியத்துக்கும் முதலில் தடைசொல்லிப் பிறகு ஏற்பதும் என் தந்தையின் வழக்கம். ஆதலால். அவர் காலம் கடத்தினுர். தடைசொல்லியும் வந்தார்.

'அவ்வளவு பெரிய வீட்டை நாம் வாங்கி என்னசெய்வது,' என்றார்.

'நமக்கு வேண்டிய கருவிகளை எடுத்துக்கொண்டு, மிகுதியை விற்றுவிடலாம்,' என்றனள் தாய்.

'அவ்வளவு கருவிகளைக் கொண்டுவருவது எவ்வளவு கடினம்! பிரித்தெடுப்பதே மிகுதியான வேலையும், செலவும் கொள்ளுமே,' என்றனர் என் தந்தை.

"ஆட்களுக்கு என்ன நமக்குக் குறைவா? கூலி, வண்டிக்காரர் இவ்வூரில் நீங்கள் சொன்னால் யார் வரமாட்டேன் என்பார்?" என்றனள் என் தாய். "கோடை விடுமுறைக்கு அண்ணன் அவர்கள் இவ்வூர் வருமுன் அவர்கள் வீட்டைக் காலிசெய்து விடுகிறேன் என்று நான் அவர்களுக்குச் சொன்னசொல் பழுது போகக்கூடாது. ஆகையால் நீங்கள் பெரிய மனதுகொண்டு திருக்களர்சேரி வீட்டைப் போய்ப் பார்த்து அதை வாங்கிவந்து, புதுவீடுகட்ட கடைக்கால் நாட்டுங்கள். இதில் மெத்தனம் வேண்டாம்," என்று மன்றாடினாள்.

"இருந்தாலும் இவ்வளவு பிடிவாதம் உனக்குக் கூடாது. என்ன இந்த ஆண்டில்லாது அடுத்த ஆண்டில் உன் அண்ணன் வீட்டை ஒழித்துக் கொடுத்தால், 'இப்பொழுதே வீட்டைவிட்டுப் போ,' என்று சொல்லிவிடுவாரா?" என்றெல்லாம் நொண்டிச் சாக்குகள் சொல்லிப் பார்த்தார். ஆனால் பலிக்கவில்லை.

பிறகு நல்லாடையில் இருந்து தச்சன் கொல்லன் முதலியவர்கள் திருக்களர்சேரிக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் சென்று வீட்டைப் பார்த்துவிட்டு வந்து ஒன்றுக்குப் பத்துப்பங்கு அதைப் புகழ்ந்துரைக்க ஆரம்பித்துவிட்டனர். என் அண்ணி அதைக்கேட்டு, என் தந்தையை மேலும் தூண்டத் தொடங்கிவிட்டனள்.

பிறகு தப்ப வழியின்றி என் அப்பா தானே திருக்களர்சேரி சென்று அவ்வீட்டைப் பார்த்துவிட்டு வந்து, அதை வாங்குவது என முடிவுகட்டினார்.

அம்முடிவு செய்த நாள்முதலாகப் பார்க்கவேண்டுமே ஊர் அமர்க்களப்பட்டதை! 'கீழ வீட்டையா புதுவீடு கட்டப் போகிறார்கள்,' என்ற செய்தி தெரிந்ததும், அவ்வூரில் உள்ள வேலையாட்கள், கொத்தன், தச்சன், வண்டிக்காரன், பக்கத்தூர்அலுவலாளர் முதலியவர் 'நான், நீ,' என்று வேலைக்கு முந்தினர்.

திருக்களர்சேரி வீடுவாங்கிப் பிரிக்கப்பட்டு, உத்தரம், கதவு, பலகணிகள், தூண்கள் முதலியன வண்டிவண்டியாக நல்லாடை வரத்தொடங்கின. செங்கற்கள் திருக்களர்சேரியிலேயே விற்கப்பட்டு நல்லாடைவீட்டுக்குப் புதிதாகச் செங்கற்காளவாய் ஒன்று மிகப் பெரியதாகப் போடப்பட்டது. புது வீட்டுக்கு அடிகோலப்பட்டது. பிறகு நாளுக்கு நாள் வீட்டுவேலை மிகத் துரிதமாக நடந்து வந்தது.

கோடை விடுமுறைக்குச் சின்னாள் முன்னதாக ஒரு நன்னாள் பார்த்துப், புதுவீட்டுக் குடிபுகு விழாவைக் குறிப்பிட்டனர். இச்செய்தி என் மாமாவுக்கும் அறிவிக்கப்பட்டது.

ஆனால், குடிபுகு விழாவுக்கு ஒரு வாரத்துக்குமுன் எனக்கு அம்மை வார்த்து, கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. பேத்தலும் பிதற்றலும் உண்டாயின. மருத்துவர்களும் பார்த்து மலைத்தனர். என் தந்தைக்குப் பெருங் கவலையாயிற்று. "பிள்ளைக்கு இப்படி இருக்கிறதே, எப்படிப் புதுவீட்டுக்குக் குடிபோவது? புதுவீடு போனவுடன் பிள்ளைக்கு ஏதாவது நேர்ந்தால் வீட்டுக்கும் ஒரு மாறாத குறை கற்பிக்கப்படுமே! பையன் உடல் நலம்பெற்றபிறகு குடிபுகலாம். குடிபுகுநாளை ஒத்திவைத்துக் கொள்ளுவோம். வீட்டில் பூச்சு வேலையும் முடியாமல் கிடக்கிறது," என்று சொல்லத் தொடங்கிவிட்டார் என் தந்தை. என் தாய், "நாம் குடிபோவதை ஒத்திவைப்பின், அண்ணன் கோடைக்கு இன்னும் சில நாட்களில் வருவதால், அவர்கள் வருவதற்குள் நாம் அவர்கள் வீட்டை நான் கொடுத்த

வாக்குறுதிப்படி ஒழித்து விடமுடியாது. *பாப்பையாவுக்கு உடம்பு எப்படியாயினும் ஆகட்டும். எல்லாரையும் அழைத்துக்கொண்டு குறிப்பிட்ட நாளில் நாம் புதுவீட்டுக்குச் செல்வதே மேல். 'பூச்சு வேலைகளை விரைவில் முடித்து விடுகிறேன். இரவு பகலாகவேனும் வேலைசெய்து முடித்துவிடுகிறேன்,' என்று கொத்தன் காளிமுத்து வாக்குறுதி செய்கிறான். ஆகையால் குறித்தபடி குடிபுகு விழாவை நடத்திவிடுவோம்," என்று விடை பகர்ந்தனள் என் தாய்.

என் தந்தையின் ஐயப்பாடு நீங்கினபாடில்லை. என்ன ஆகுமோ என்று கவன்று வந்தார்.

வீட்டுப் பூச்சுவேலை இரவு பகலாக நடக்கத்தொடங்கியது. ஒரு தகரம்நிறைய மண்ணெண்ணெயும் விளக்குகளும், இரவிலும் வேலைசெய்யக்கூடிய வலிவும் உள்ளன்பும், உறுதியும்உடைய கையாட்களும் கொத்தனார் காளிமுத்துக்கு என் தாயின் முயற்சியால் அளிக்கப்பட்டனர். காளிமுத்து இயற்கையிலேயே சுருசுருப்பும், வேலைத்திறனும் வாய்ந்தவன். அவனுக்கு ஊக்கமும் கொடுத்தவுடன் அவன் வேலையைப் பார்க்கவேண்டுமே! அவன் துணையாட்கள் தப்பித் தவறித் தூங்கிவிடினும், தனியாக இருந்து விளக்கொளியில் விடிந்ததுகூடத் தெரியாது பூச்சுப் பூசுவதைக் கண்டு பலர் வியந்ததுண்டு.

குடிபுகு நாளும் வந்தது. பூச்சுவேலையும் முடிந்தது. காய்ச்சலும் அம்மையும் என்னை விட்டபாடில்லை. இருப்பினும், குடிபுகுவிழா சிறப்புற நடந்தேறியது. ஊர்முழுவதும் ஒரே கொண்டாட்டமாக இருந்தது. பெருவாரியான பணியாளரும் விருந்தினரும் வகைவகையாகச் சுவைமிக்க விருந்து அளிக்கப்பட்டனர். உழுவல்அன்புடைய கொத்தனார் காளிமுத்துக்கு ஒரு பொன்ஒத்தினும் அளிக்கப்பட்டது. நான் ஒரு இருண்ட அறையிலிருந்து முக்கலும் முணங்கலுமாக இவ்விழாவின் சிறப்பை நோக்கியும் கேட்டும் படுத்துப் புரண்டுகொண்டிருந்தேன்.

---

* என் வீட்டு செல்வப்பெயர்.

"அண்ணான் கோடை விடுமுறைக்கு ஊர் வருவதற்கு முன் அவர்கள் வீட்டை ஒழித்து விட்டுவிட்டோம். புது வீடும் கட்டிக் குடிபுகுந்து விட்டோம்," என்ற எண்ணம் என் அன்னைக்குப் பெருமகிழ்வை யூட்டியது. அம் மகிழ்வில் என் தந்தையும் கலந்துகொண்டார். சில நாட்களில் என் உடல் நலமடைந்தது. என் தாய்மாமாவும் எங்கள் புதுவீட்டுக்கு வந்து அதன் விரிவையும், எழிலையும் பார்த்துப் பார்த்துப் பெருவியப்பெய்தினர். என் தாய்மாமா கோடை விடுமுறைக்கு நல்லாடை வருமுன் அவர் வீடு காலி செய்யப்பட்டு அவரை வரவேற்கத் தயாராய் இருந்தது. அவர் தன் தங்கையைக் கண்டு பேசும்பொழுது, 'இவ்வளவு பெரிய வீட்டைக்கட்டி யிருக்கிறீர்களே,' வீடு சோறு போடுமா?' எனக் கேட்டார். உடனே என் தாய் 'வீடு சோறு போடாது, மானங் காக்கும்! கந்தலோ கிழிசலோ கிடைத்ததைக் கட்டிக்கொண்டு, கூழோ கஞ்சியோ உள்ளதைக் குடித்துக் கதவை அடைத்து முடங்கிக் கிடக்கலாம், நமக்கென ஒரு வீடிருப்பின். இல்லாவிடில் நம் பஞ்சக் கோலத்துடன் எங்கு முடங்கிக்கிடப்பது," என்று விடை பகர்ந்தனள்.

"சுந்தரம் தன் சொல்லை நிறைவேற்றிவிட்டாள். மிகவும் மானமும் பிடிவாதமும் உடையவள்," என்று என் தாய்மாமன் எண்ணி ஒருபுறம் மகிழ்ச்சியும், ஒருபுறம் பல்லாண்டுகளாக ஒன்றாயிருந்த குடும்பம் பிரிந்துவிட்டதற்கு வருத்தமும் கொண்டார் என்பதில் ஐயமில்லை.

---

9. அதோ பார்! அதோ பார்!

நல்லாடை என்ற சிற்றூர் நான் பிறந்தவூர். அவ்வூர் இரு ஆறுகளுக்கிடையே வளம்பெற்று விளங்குகிறது. தென்னந் தோப்புகளும், இலுப்பைத் தோப்புகளும், மாஞ்சோலைகளும், அழகிய கோயிலும் பெரு வீதிகளும் அல்லிக் குளங்களும் சிறு வாய்க்கால்களும் அவ்வூரை அணி செய்கின்றன. நாட்டாண்மைக் கழகத் துவக்கப் பள்ளியொன்றும் அங்குண்டு. அப்பள்ளியில் நான் இரண்டாவது முடியப் படித்தேன்.

அவ்வூரில் எனக்குத் தெரியாத பகுதி கிடையாது. இலுப்பைத் தோப்புக்கிடையில் உள்ள அல்லிக் குளத்தில் குளிப்பதில் எனக்கு மிக வேட்கை. எங்கள் வீட்டருகில் ஓடும் வாய்க்காலின் கரையில் அருமையான விளாமரம் ஒன்று உண்டு. அம்மரத்தின் பழங்கள் மிக இனிப்பாய் இருக்கும். இருட்டில்கூட நான் வாய்க்காலில் இறங்கி விழுந்த இனிய பழங்களைத் தடவி எடுத்து வருவதுண்டு. மாமரத் தோப்பில் மரங்களின் கிளைகளில் ஏறிக் காய் கனிகளைப் பறித்து அணில்கள் கிளிகளுடன் குலவித் தின்பது என் வழக்கம். இப்படியாக என் இன்ப உலகாக விளங்கிற்று என் சிற்றூர்.

அவ்வூரிலிருந்து என்னைப் பெயர்த்து எடுத்து மயூரம் என்ற 13 (பதின்மூன்று) மைலுக்கு அப்பாலுள்ள ஊருக்குக் கொண்டுபோய் அங்கே புதிய பாடசாலையில் எனக்குப் பொருந்தாத வகுப்பில்சேர்த்தது என் சிறு உள்ளத்துக்கு ஊறு செய்தது. என் ஊரின் வயல்களும், தோப்புகளும், ஆறுகளும், வாய்க்கால்களும் என் அகக் கண்ணில் காட்சியளித்து 'வா, வா,' என்று என்னை அழைத்த வண்ணம் இருந்தன.

இப்படியாக நான் என் உடன் பிறந்தாருடன் மயூரத்தில் படிக்கும்பொழுது எங்கள் தாய் தந்தையர் எங்களைப் பார்த்துப்போக இடையிடையே வந்து போவது உண்டு. அவர்கள் வரும்பொழுதெல்லாம் நானும் ஊருக்கு வரு

வேன் என்று பிடிவாதம் செய்வேன். ஆனால் எப்பொழுதும் பலிப்பதில்லை.

நாங்கள் குடியிருந்த வீட்டில் 'முத்து' என்ற ஒரு பையன் இருந்தான். அவன் என் நண்பன். அவனுக்குப் பள்ளிக்கூடம் என்றால் நஞ்சு. அவன் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிப் பள்ளிக்குச் சரிவரப் போவதில்லை. ஒருநாள் அவனைப் 'பைசாசு' பிடித்துக் கொண்டது. அதனால் அவன் பெற்றோர் அவனுக்குப் பல மருத்துவங்கள் செய்து ஒரு வாரம்வரை அவனைப் பாடசாலைக்கு அனுப்பவில்லை. அம்மாதிரி எனக்கும் 'பைசாசு' பிடிக்காதா; பாடசாலை போகாதிருக்கலாகாதா என்று நான் ஏங்கியிருந்தேன்.

சில நாட்கள் கழித்து எங்கள் பெற்றோர் எங்களைப் பார்க்க மயூரம் வந்தனர். வண்டிக்கார நாகலிங்கம் சிவப்பும் வெள்ளை நிறமுமுள்ள மாடுகள் பூட்டிய கூண்டுவண்டியில் அவர்களை ஏற்றிக்கொண்டு வந்திருந்தான். ஊருக்கு வண்டியில் ஏறிச்செல்ல வேண்டும் என்ற எண்ணம் மிகுதியாக எனக்கு ஏற்பட்டுவிட்டது. என்னையும் நல்லாடைக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று என் பெற்றோரைக் கெஞ்சினேன். 'விடுமுறைநாட்கள் அண்மையில் இருப்பதால் அப்பொழுது வரலாம். இப்பொழுது வந்தால் படிப்புக் கெட்டுவிடும்,' என்று சொல்லி மறுத்தனர் நான் எவ்வளவு மன்றாடியும் அவர்கள் கேட்கவில்லை. என் சிறு உள்ளத்தில் அலை அலையாக எழுந்து கொண்டிருந்த தோற்றங்களையும் எண்ணங்களையும் அவர்கள் கண்டார்களில்லை. நான் அன்றிரவு உண்ணாவிரதம் மேற்கொண்டேன். காரியம் கைகூடுவதாயில்லை. மறுநாட் காலை ஊருக்குப்போக என் பெற்றோர் ஏற்பாடு செய்தனர். விடியற்காலை 5 மணி இருக்கும். நான் முக்கலும் முனங்கலுமாகப் புரண்டு, புரண்டு படுத்தேன். பிதற்றலும் உண்டாயிற்று. 'அதோ பார்! அதோ பார்!' என்று அரற்றி மிரள மிரள விழித்தேன்.

என்னடா உனக்கு! எதையடா பார், பார் என்கிறாய்? என்று என் பெற்றோர் ஓடிவந்தனர். அதோ பார்! அதோபார்! என்று மேலும் மேலும் அரற்றினேன்.

'ஐயோ! என்னவோ தெரியவில்லையே! பெரியாச்சி, இங்கு வாங்களேன்' என்று என் தாய் என் நண்பன் முத்துவின் பாட்டியைக் கூவி யழைத்தனள். அப்பாட்டி திருநீறு எடுத்தோடி வந்து என் நெற்றியில் மூன்று தடவை பூசி, "என் பேரனைப் பிடித்த பேய் உங்கள் பையனையும் பற்றியிருக்கிறது. நீங்கள் பிள்ளையை ஊருக்கு அழைத்துச் சென்று திருநீறு மந்திரித்துப் போடுங்கள். இங்கு விட்டுப் போகாதீர்கள்," என்று வேண்டினள்.

பிறகு என் பெற்றோர் என்னைத் தூக்கிச்சென்று வண்டியில் போட்டு, அவர்களும் வண்டியில் ஏறி வண்டியை விரைவில் ஓட்டச் சொல்லினர். வண்டி வேகமாக நல்லாடை நோக்கிச் சென்றது. வழியில் நான் முக்காடிட்டுக்கொண்டு முணங்கிக்கொண்டே சென்றேன். வழியில் தண்ணீர் சிற்றுண்டி முதலியன ஒன்றும் வேண்டாம் என மறுத்துவிட்டேன்.

வண்டி நல்லாடை வந்து எங்கள் வீட்டுக்கு முன் நின்றது. என் பெற்றோர் முன்னதாக இறங்கி என்னைத் தூக்க முயன்றனர். நான் போர்த்திருந்த போர்வையை வீசி யெறிந்து, தொப்பென்று கீழே குதித்தேன். 'என்னடா இது! உடம்பு எப்படி யிருக்கிறது?' என்றனர்.

"உடம்புக்கு என்ன எனக்கு? ஒன்றுமில்லையே! எல்லாம் நல்லாடைப் பேய்தான் என்னைப்பற்றி இருந்தது. ஊரும் வந்தது. பேயும் பறந்தது!" என்று சொல்லிக்கொண்டு இன்ப உலகாகிய தென்னந்தோப்பு வீட்டுக்குள் ஓடி நுழைந்தேன். என் பெற்றோர் சிரிப்பு ஒரு பக்கம் சினம் ஒரு பக்கமாய் என்னைப் பின்தொடர்ந்து வந்தனர்!

———

10. ஐயர் அவர்களின் நினைவு

கல்வித்துணை ஆய்வாளனாக 1928—29-ம் ஆண்டு களில் நான் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சாத்தூர் என்னும் ஊரில் வேலை பார்த்து வந்தேன். அக் காலத்தில் எனக்குத் தமிழில் போதிய அறிவும் பற்றும் இல்லை. ஆங்கில நூல்களை ஆராய்வதும் ஆங்கிலத்தில் கவி புனைவதும், கதை யெழுதுவதும், ஆகக் காலங்கழித்து வந்தேன். அஞ்ஞான்று எனக்கு அடுத்தபடி மேல் அலுவலாளராயிருந்த திரு. T. சிவசைலம் பிள்ளையவர்கள் சிறு வகுப்புகளுக்குக் 'கழக'வாயிலாகப் பலபாட புத்தகங் களை வெளியிட்டு வந்தார்கள். என்னையும் சில சிறு பாட புத்தகங்கள் எழுதுமாறு தூண்டினார்கள். ஆனால் நான் அதில் மனதைச் செலுத்தினேனில்லை.

அவர்கள் பல அரிய தமிழ்நூல்களை வாங்கிப் படித்து வந்தார்கள். அவ்வூரில் வழக்கறிஞராயுள்ள திரு. T. S. கந்தசாமிமுதலியார் அவர்கள் கலைசிறந்த தற்காலத் தமிழ் அறிஞர்களில் ஒருவர் ஆவார்கள். அவர்கள் தமிழில் சொற்பொழிவாற்றுவதையும், திருக்குறளில் விரிவுரை நிகழ்த்துவதையும் சில நேரங்களில் நான் கேட்டதுண்டு. எனக்குத் தமிழ்ப்பற்று போதிய அளவு ஏற்படாது போயினும் அவர் தமிழ்அறிவு, சொற்பொழிவாற்றும் திறன், இனிமையாகப் பாடும் இயல்பு முதலியவற்றிற்காக அத்தமிழ்ப் பெரியாரிடம் எனக்கு மிக்க மதிப்புண்டு. அவர்கள் சில வேளைகளில், 'கம்பராமாயணத்திலும் இன் னும் சில நூல்களிலும் நான் சில பகுதிகளைக் குறித்துத் தருகிறேன். அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தீர் களானல், தமிழுக்கு அது ஒரு சிறந்த தொண்டாகும்,' என்று சொல்லுவார்கள். ஆனல் எனக்கு அப்பணியில் மனம் செல்லவில்லை.

அத்தமிழன்பர் ஆண்டுதோறும் அவ்வூரிலுள்ள தமிழ்க்கழக மூலம் ஒரு சிறந்த தமிழ்அறிஞர் கூட்டம்

கூட்டிப் பல அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தி மகிழ்ந்தும், பிறரை மகிழ்வித்தும் வருவது வழக்கம்.

நான் சாத்தூரில் இருந்த காலை அவர்கள் ஓர் ஆண்டு விழா நடத்தினார்கள். அவ்விழாவிற்குப் பல புலவர்கள் வந்திருந்தனர். நானும் அக்கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். பல அறிஞர்கள் ஊக்கத்துடனும் வீரத்துடனும் பேசினார்கள். அன்று தலைமைதாங்கியவர் ஒரு முதுமைப் பருவம் அடைந்தவர். மூலக் கச்சம் கட்டி, நீண்ட மேல் அங்கி ஒன்று போட்டு, தலைப்பாகை வைத்து, திருநீறு அணிந்து, சட்டைக்கு மேல் ஒரு பட்டுச்சால்வை போட்டிருந்தார். அவர் எழுந்து நின்றதும் கூட்டத்தில் திடீரென ஒரு அமைதி நிலவிற்று. 'ஐயர் பேசப் போகிறார்! ஐயர் பேசப் போகிறார்!' என்று அடங்கிய குரலில் சிலர் பேசிக்கொண்டனர்.

அவர்கள் தமிழின்பெருமையைப்பற்றியும்தொன்மையைப்பற்றியும், அதைப் போற்றிவளர்த்த தமிழ்வேந்தர், தமிழ்ச்செல்வர்களைப் பற்றியும், பல எடுத்துக்காட்டுகளுடன் மிக இனிய எளிய உணர்ச்சி நிறைந்த நடையில் எடுத்துக் கூறி மகிழ்வித்தார்கள். இடையிடையே தாம் தம்மேல் போட்டுள்ள விலையுயர்ந்த சல்லாத்தைச் சுட்டிக் காட்டி, இச்சல்லாத்து தமிழ்ப்புலவரைப் புரத்தலில் பெயர்பெற்ற திருவாவடுதுறை யாதீனத்தில் தாம் பரிசாகப் பெற்றதாக உளம் பூரித்துரைத்தார்கள். தமிழை எப்படிப் போற்றி வளர்க்கவேண்டுமென்றும் எடுத்துரைத்தனர். கூட்டத்தினர் இமை கொட்டாது அவரைப் பார்த்தவண்ணமிருந்து அவர்களின் சொல் விருந்தை வாரி வாரி உண்டனர். நானும் அசையாதிருந்து நேரம்போவது தெரியாமல் அளவிலா மகிழ்வுடன் அவர் சொற்களைப் பருகியவண்ணமிருந்தேன். 'ஆகா! இதுவரை தமிழின் பெருமையையும், இனிமையையும் உணராதிருந்தோமே! இவ்வளவு நுணுக்கமாகவும், இனிமையாகவும் மணிக்கணக்கில் வேறு யாரும் பேசிக் கேட்டதில்லையே,' என்று நினைத்து உருகினேன்.

கூட்டம் முடிந்தது. நானும் வீடு திரும்பினேன். ஆனால், தமிழின் அருமையை உண்மையில் உணர வேண்டும், தமிழ் அறிவைப் பெருக்கவேண்டும், தமிழ்ப் பெரியார்களைப் போற்றவேண்டும் என்ற நல்லறிவு உண்டாகப் பல்லாண்டுகள் செல்லவேண்டியிருந்தது. சாத்தூரை விட்டு மறு ஆண்டுக்குள் வேறு இடம் மாற்றப் பட்டேன்.

ஐயர் அவர்களைப் பிறகு பார்க்கும்பேறு நான் பெற வில்லை.

எப்படி மகாத்மா என்றால் காந்தியடிகளையும், பாரதி யார் என்றால் சுப்ரமணிய பாரதியாரையும் மட்டும் குறிக்குமோ அதேபோல் 'ஐயர்' அவர்கள் என்றால் மஹா மஹோபாத்யாய தக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர், உ. வே. சாமிநாதையர் அவர்களையே குறிக்கும் என்று தெரிந்து கொள்ளவும் எனக்குப் பல்லாண்டு செல்லவேண்டி யிருந்தது.

என் தாய் மாமா அவர்கள் கும்பகோணம் கல்லூரி யில் படித்த காலத்தில், தமக்குத் தமிழ் ஆசிரியராக திரு. ஐயர் அவர்கள் இருந்தார்களென்றும், உழுவல் அன்புடை யவர்கள் என்றும், அவர்கள் பாடம் சொல்லிக்கொடுக்கும் திறமை மிகவும் பாராட்டத்தக்கது என்றும், தாமும் தம் தம்பி திரு. சுப்பையா முதலியார் (Retd. Dt. Judge) அவர்களும் திரு. ஐயர் அவர்களின் மாணவரானதால், ஐயர் அவர்களிடமிருந்து இருவருக்கும் முடங்கல் வருவ துண்டு என்றும், அவருடைய தமிழ்நூல்கள் மிக இனிமை யாயும் எளிமையாயும் அறிவு நிறைந்தனவாயும் இருப்பன வென்றும், தனக்குப் பல நாட்களாக ஒரு எண்ணம் இருந்து வருவதாயும் அவ்வெண்ணம் 'நான் என்றாவது ஓர் நாள் திரு. ஐயர் அவர்கள் இருக்கும் இடத்துக்குச் சென்று அத்தமிழ்ப் பெரியோரை நிலந்தோய் வணக்கம் செய்து விட்டு வந்துவிட வேண்டும் என்பதே,' என்றும் சொல்லி வந்தார்கள்.

ஐயர் அவர்களும் மறைந்தார்கள். அவர்கள் பால் அளவிலா அன்புகொண்ட ஒரு முது மாணவரும் (ஐயர் அவர்களின் பல்லாயிரக் கணக்கான அருமை மாணவர் களில் அவர் ஒருவர்) இவ்வெண்ணம் நிறைவேறுமலே மறைந்துவிட்டனர். ஆனால், ஐயரவர்கள் மறைந்தும் அவர்களின் புதுமாணவர்கள் மேலும் மேலும் சிறப்புற் றோங்கியும் வருகின்றனர். என்னே அவர்களின் ஒப்பற்ற தொண்டு.

அவர்களின் பருத்து உயர்ந்த உருவம், விசாலமான நீறணிந்த நெற்றி, தலைப்பாகை, நீண்ட அங்கி, மூலக் கச்ச ஆடை, நன்றியைத் தெரிவித்து அன்பே உருவாய் நின்ற அத்தமிழ் உடலை அளந்து காட்டும் திருவாவடுதுறை ஆதீனத்துப் பட்டுச் சால்வை, உணர்ச்சி மிகுந்த இனிய எளிய மட்டற்ற அறத்தமிழ்ப் பெருக்கு—இவை இன்றும் என் அகக்கண்முன் நின்று இன்பம் ஊட்டுகின்றன!

11. பெரியாரைக் காணல்

1931—33-ம் ஆண்டுகளில் திருச்செங்கோடு என்னும் ஊரில் நான் கல்விநெறித் துணைத்தலைவனாக வேலை பார்த்து வந்தேன். அப்பொழுது என் அருமை நண்பர்—தன்மான இயக்கத் தோழர் திரு. A. மாரிமுத்து என்பாரின் வேண்டுகோளுக்கிணங்கி ஒரு தன்மான இயக்கக் கலப்புத் திருமணத்திற்கு ஈரோடு சென்றிருந்தேன். பல இயக்கத் தோழர்களும் தோழியர்களும் பெரியார் மாளிகையில் வந்து குழுமியிருந்தனர். நான் பெரியாரை அதற்கு முன் பார்த்ததில்லை. என் நண்பரும் நானும் பெரியாரைக் காண மாளிகைக்குள் சென்றோம். அவர் மாடியில் இருப்பதாக அறிந்து மாடிப்படி ஏறிச் சென்றோம். அவர் மாடியில் ஓர் அறையில் நாற்காலியில் பலருடன் பேசிக் கொண்டு அமர்ந்திருப்பார் என்ற எண்ணத்துடன் நான் படியேறிப் போய்க்கொண்டிருந்தேன். ஆனால், மாடியின் கடைசிப்படி ஏறியதும் திடீரென்று என் நண்பர் என் பக்கம் திரும்பிப் புன் முறுவலுடன் 'இவர்கள் தான் பெரியார்,' என்றனர். நான் திடுக்கிட்டு என்னையறியாமல் வியப்பும் மதிப்பும் கொண்டவனாய்க் கைகூப்பி நின்றேன். அவருடைய கட்டுடல், பொன்னிற மேனி, நரைத்து நீண்ட தாடி, வழுக்கை கண்ட பருத்த தலை, உயர்ந்து அகன்ற நெற்றி, கண்ணாடியைத் துளைத்து உள்ளத்தே பாயும் கூர்ந்த நோக்கு, பெரிய சட்டை, போர்த்த சால்வை, இவை என் உள்ளத்தில் பதிந்தன. அவரை நான் முதன் முதலாகக் கண்டபொழுது இவர் உண்மையில் 'பெரியாரே!' என்ற எண்ணமும் இவர் உருவில் உலகக்கவி இரவீந்திரரே போன்று விளங்குகிறார் என்ற எண்ணமும் தோன்றின.

என் வணக்கத்துக்கு வணக்கம் கூறி, வரவேற்றார். அப்பொழுது என் நண்பர் என்னைச் சுட்டிக் காட்டி, 'இவர் என் அருமை நண்பர். திருச்செங்கோட்டில் கல்வித்துணை ஆய்வாளராக இருக்கிறார். திரு. S. முத்தையா முதலியார், திரு. P. T. இராசன் இவர்களுக்கு எல்லாம் உறவினர்,' என்று அறிமுகப்படுத்தினார்.

உடனே பெரியார் 'எப்படி இருவருக்கும் உறவினராக இருக்க முடியும்? திரு. S. முத்தையாமுதலியாருக்கு உறவினராயின், திரு. இராசனுக்கு உறவினராக இருக்க முடியாது. அதேபோல பின்னவருக்கு உறவினராகில் முன்னவருக்கு உறவினராகமாட்டார். ஏன் எனில் அவ்விருவரும், முறையே 'மேனாட்டு, கீழ்நாட்டு முதலியார்கள் அல்லவோ!' என்று கூறி என்னை நோக்கினார். உடனே நான் 'திரு. S. முத்தையாமுதலியார் அவர்களுக்கு உறவினன்,' என்று கூறினேன். 'ஆம் அப்படித்தான் இருக்க முடியும்,' என்று கூறிவிட்டு, எங்களை அழைத்துச் சென்று இருக்கச் சொல்லி அளவளாவினார். அவருக்கு வலக்கையாய் இருந்த மயூரம் திரு. சி. நடராசமுதலியார் அவர்களுக்கும் நான் உறவினன் என்பதையும் தெரிந்து மகிழ்ந்தார். அன்று திருமணத்திற்குப் பிறகு பொதுக் கூட்டம் ஒன்றில் திரு குருசாமி குஞ்சிதம்அம்மையார் தலைமையில் தன்மானக் கலப்புத் திருமணத்தைப்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. பெரியார் அவர்களும் பேசினார்கள். பேசும்பொழுது சில குழந்தைகள் அழுது கொண்டு இருந்தது பெரும் இடையூறாயிருக்க, பெரியார் அவர்கள் 'தாய்மார்கள் இம்மாதிரிப் பொதுக்கூட்டங்களுக்கு வரும்பொழுது குழந்தைகளை வீட்டில் யாரிடமாவது விட்டுவரின் நலமாயிருக்கும். இல்லாவிடில் பொதுத் தொண்டு சிறப்புறாது,' என்று வலியுறுத்தினார். இரண்டொரு தாய்மார்கள் குழவிகளைத் தூக்கிக்கொண்டு வெளிச் சென்றனர்.

மணமகனும் மணமகளும் அன்று தன்மான இயக்கத்தின் சீரிய நோக்கம் பற்றியும் அதன் உற்பத்தியாளரின் அருமை பெருமைகளைப் பற்றியும் எடுத்துரைத்தனர்.

அன்றிரவு பெரியார் அவர்கள் தம் இல்லத்தில் எல்லாருடனும் உரையாடிக்கொண்டிருக்கும்பொழுது திரு. குஞ்சிதம்அம்மையாருக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

12. மயூரம் நடராசனுர்

விடியற்காலம் 4 மணி இருக்கலாம். நான் ஏதோ கனவு காண்பதுபோல் உணர்ந்தேன். பிறகு மெல்ல மெல்ல நனவாக மாறுவதாகத் தோன்றிற்று. ஆனல், இருட்டாகத்தானிருந்தது. படுத்தபடியே கண் விழித்துச் சுற்று முற்றும் பார்த்தேன். ஏதோ 'கசகச' என்று ஒருவர்க்கொருவர் பேசுவதுபோலிருந்தது. சில உருவங் கள் இருளில் மெல்ல எழுந்து போவதும் வருவதுமாகக் காணப்பட்டன. சிறு சிறு கூட்டங்கள் புதிது புதிதாய் ஒவ்வொருவர் படுக்கைப் பக்கத்திலும் ஏற்படுவதும் கலைந்து மறுபடியும் கூடுவதுமாகக் கண்டேன். அவர்கள் பேசுவதில் இருந்து சில சொற்கள் மட்டும் என் செவிக் கெட்டின. அண்ணன், அண்ணன் என்ற சொற்களும், நடராசண்ணன்! நடராசண்ணன்! என்ற சொற்களும், அன்பும் ஆவலும் நிறைந்த குரலில் வெளிப் போந்தன! 'நடராசண்ணன் வந்துவிட்டது நடராசண்ணன் வந்து விட்டது!', என்று கேட்டுப் பலர் படுக்கையை விட் டெழுந்தோடினர். வந்தவர் பெரியாரின் உயிர்த் தோழர் ஆகிய மயூரம் திரு.நடராசனுர் என்று அப் பொழுதுதான் தெரிந்துகொண்டேன். நானும் படுக் கையில் எழுந்து உட்கார்ந்து சற்று இருளில் கூர்ந்து நோக்கினேன். யாரோ நான்கைந்து பேர்கள் என்னை நோக்கி வருவது போலிருந்தது. முன்னே வந்தவரே நடராசனுர். அப்பொழுது படிப்படியாகக் கொஞ்சம் கொஞ்சம் கிழக்கு வெளுக்கத் துவங்கியதால் உருவம் நன்ருகத் தெரிந்தது. சுருண்டு அடர்ந்த வெட்டப்பட்ட கூந்தலும், பெரு விழிகளும், முகமலர்ச்சியைத் தெரிவித்த எடுப்பான பற்களும், தோள்பட்டைகளில் பித்தான் இட்ட அரைக்கைச் சட்டையும், காவி மேல்ஆடையும், கவலை குலைத்த தலைநிமிர் நடையும் என்னைக் கவர்ந்தன. அந்தோழர் 'அட! நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்,' என்று சொல்லி வாய் மூடுமுன், 'நான் நேற்று வந்தேன்,' என்று சொல்லிக்கொண்டு எழப் போனேன். 'உட்கா ருங்கள்,' என்று சொல்லி என்னைப் பிடித்து இருக்கச்

செய்து, என் படுக்கையில் அமர்ந்து சற்றுநேரம் அளவளாவி விட்டுப் பிறகு, பிற நண்பர்களைக் காணச் சென்றார்.

நான் மீண்டும் படுக்கையில் படுத்தேன். ஆனால், உறக்கம் வரவில்லை. அவரைப் பற்றியே என் எண்ணங்கள் சுழன்றன. நல்ல இருள் வேளையில் எல்லோரும் அயர்ந்து கண்ணுறங்கும் அமயம் அவர் புகைவண்டிநிலையத்திலிருந்து வந்திருக்கிறார். உறங்கும் நண்பர்கள் எப்படித் துயிலை நீக்கி, எவ்வளவு பேர், ஏன் அங்கு வந்திருந்த பெருவாரியான தோழர்கள் அவ்விருளிலேயே அன்போடும் ஆவலோடும் 'நடராசண்ணன்! நடராசண்ணன்!' என்று வரவேற்புத் தந்தனர்? அவரிடம் உள்ள நட்புத்திறனும், நண்பர்க்கு இக்கட்டு வந்துழி விரைந்து சென்று உதவும் சீரிய பண்பும், எப்படிப்பட்ட இடர்வரினும் அஞ்சாது எதிர்த்துநின்று இடர் ஒழிக்கும் வீரமும், பொதுநலத் தொண்டாற்றும உள்ளமும், பரந்த நோக்கமும் எல்லாரிடத்தும் உழுவலன்புடன் பழகும் நேர்மையும் எல்லாரையும் அவர்பால் ஈர்த்துக்கொண்டது பெரிதல்ல என்று எண்ணினேன். இப்படியாக நான் எண்ணமிட்டுக்கொண்டிருக்கும்பொழுது வேறொரு காட்சி என் முன் வந்து நின்றது. இற்றைக்கு முப்பது (30) ஆண்டுகட்குமுன் நான் 11 அகவைச் சிறுவனாயிருந்தேன்.* ஐப்பசி மாதம் மயூரம் காவேரியாற்றில் முழுகுவதற்கு ஏராளமான மக்கள் போவதும் முழுகிவிட்டுத் திரும்புவதுமாய் இருந்தார்கள். எங்கு பார்த்தாலும் கடைகளும வண்டிகளும் காணப்பட்டன. சூதாடும் கறுப்புத் திரையொன்றில் வட்டமிட்டு குதிரை, யானை, புலி முதலிய சித்திரங்கள் வரைந்து அந்த வட்டத்தின் நடுவில் நீண்ட சுற்று முள் வைத்து, அப்படங்களில் சூதாடுவோரைக் காசு வைக்கச் சொல்லி, முள் எந்தப் படத்தில் வந்து நிற்கிறதோ, அப்படத்தில் காசு வைத்தவர்களுக்கு மேலும் காசு கொடுத்து, பிற படங்களில் காசு வைத்தவர்களின் காசைப் பறித்துக் கொண்டு ஆட்டக்காரன் தன் தொழிலை நடத்தி வந்தான். இம்மாதிரியே சூதாட்டங்கள் உண்டு.

---

* இக்கட்டுரை 30—6—1944-ல் எழுதப்பட்டது.

நான் சிறுவனாக இருக்கும்பொழுது இவ்வாட்டத்தில் காசு வைத்தாடுவதில் எனக்கு வேட்கையதிகம். ஓர் சூதாட்டப் பலகை அருகே சென்று ஒரு படத்தின்மேல் இரண்டணுக் காசு வைத்தேன். இன்னும் பலரும் கூட்டமாக நெருக்கிக்கொண்டு அங்குச் சூழ்ந்திருந்து பல படங்களில் காசு வைத்தனர். முள் ஆட்டக்காரனல் சுற்றப்பட்டது. எல்லோரும் ஆவலுடன் முள் எங்கு வந்து நிற்கப்போகிறது என்று மனம் 'படக்' 'படக்' என அடிக்கப் பார்த்துக்கொண்டிருந்தோம் முள் வேகமாகச் சுற்றப்பட்டிருந்ததால் அது படங்களைத்தாண்டித்தாண்டிப் பல தடவைகள் எங்களை ஏய்த்துச் சென்றது. .எல்லோருடைய கண்களும் அச் சுற்றும் முள்மேல் இருக்க, திடீரென்று, ஏதோ ஒரு பெரிய உருவம் வந்து எங்கள்மேல் பின் இருந்து உரைத்தவண்ணம் 'எங்கே, உன் லைசன்ஸ், எடு பார்ப்போம்,' என்று ஆட்சிக்குரலில் கேட்டது. நாங்கள் எல்லோரும் அது யார் எனத் திரும்பிப் பார்த்து, ஒரு சிவப்புத் தலைப்பாகை அணிந்த நகரக்காவற்காரன் என்று தெரிந்துகொண்டோம். சூதாட்டம் நடத்தியவன் தன் சூதாட்ட விரிப்புக்குக்கீழ் உள்ள கள்ளிப்பெட்டியைத் தடவிப் பார்த்துவிட்டு, 'ஐயா! இன்று கொண்டுவர மறந்துவிட்டேன். பிறகு கொண்டுவந்து காட்டுகிறேன்,' என்று இறைஞ்சினுன். 'முடியாது! லைசன்ஸ் இன்றி நீ ஆட்டம் நடத்தக்கூடாது, நிறுத்து உன் ஆட்டத்தை; எடு உன் கடையை,' என்று அதட்டினுன் காவலாளன்.

'ஐயா! சற்றிருங்கள் நிறுத்திவிடுகிறேன். யார் யாரோ காசு வைத்திருக்கிறுர்கள். இந்த ஓடும் முள் நின்றவுடன் நிறுத்திவிடுகிறேன். 'யார் யாருக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று பார்த்துக் கொடுத்துவிட்டு கடையைக் கட்டிவிடுகிறேன். சற்றுப் பொறுங்கள்,' என்று கெஞ்சினுன்.

ஆனல், வந்த காவலன் பொறுமை இழந்து சினங்கொண்டு, 'என்னடா நான் சொல்லுகிறேன், ஆட்டம் போடுகிறுய்!', என்று சொல்லியவண்ணம் அந்தப் பட

விரிப்பை, முள் நிற்குமுன் பலர் காசுகள் ஒரு சேர அப்படியே சுருட்டித் தூக்கிவிட்டான்! அப்பொழுது தான் பார்த்தேன். திரு. நடராசனார் பக்கத்தில் வந்து நின்றதை! காவலன் செய்வது அநீதி யென்று ஒரு நொடிப்போதில் உணர்ந்த அவர் தன் கண்கள் குப்பெனச் சிவக்க, இரு பெரு விழிகளால் அவனை உருட்டி நோக்கி, 'ஏய்' உன் அப்பன் வீட்டுக் காசா இது. அவரவர்களிடம் காசைக் கொடுக்கவேண்டாமா, நீ இப்படிச் சுருட்டி எடுக்கிறாயே,' என்று சீறி அவனருகில் இடித்துப் புடைத்துச் சென்று, அவன் கழுத்தை ஒரு கையில் இறுகப்பற்றினார். அவன் கையில் எடுத்த காசு விரிப்பைக் கீழே போட்டான். ஆனால், நடராசருடைய கழுத்துப்பிடி தளரவில்லை. அவன் கழுத்தை இறுகப்பற்றி மற்றொரு கையை ஓங்கிய வண்ணம் அவனைக் கிறுகிறுவென்று சாலையின் ஒருபுற மிருந்து மற்றொரு புறம் உள்ள பக்க வாய்க்காலுக்குத் தள்ளிச் சென்று 'போடா! மடப்பயலே! இங்கே வந்தா யானால் தெரியும் செய்தி!' என்று சீறித் தள்ளிவிட்டு அவர் போய்விட்டார். ஆட்டக்காரன் எங்களைக் கூப்பிட்டு எங்கள் காசுகளைக் கேட்டு எங்களிடம் கொடுத்து தன் கடையைக் கட்டிச் சென்றான். காவற்காரன் கூட்டத்தில் அவமானத்துடன் தலை மறைந்தான்.

இந்தக் காட்சி என் முன் வந்து நின்றது. இது நான் நேரிற் கண்ட காட்சி. இம்மாதிரி பல தடவைகளில் நீதி செலுத்தி யிருக்கிறார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்டவரைத் தன் வலக்கரம்போலப் பெரியார் அமைத்துக்கொண்டது வியப்பன்று என்றும் இவ்வளவு தோழர்கள் அவருக்கு அன்பினால் கட்டுப்பட்டிருப்பது இயற்கையே என்றும் எனக்குள் நான் முடிவு கட்டிக் கொண்டேன்.

பெரியாரின் விருந்தோம்பல் திறன்

பொழுதும் விடிந்தது. அவரவர் காலைக்கடனை முடித்துவிட்டுக் காலைச் சிற்றுண்டி உண்ண வந்து அமர்ந்த

னர். நானும் ஒரு தாழ்வாரத்தில் ஒரு தூண் பக்கத்தில் அமர்ந்தேன். ஏராளமான பேர்கள் உட்கார்ந்திருந்தனர். பெரியார் அவர்கள் சுற்றிப் பார்த்தவண்ணம் அவரவருக்குத் தேவையானதைப் பரிமாறும்படி சிலரை ஏவிக்கொண்டிருந்தார். அவர் அந்தக் கூட்டத்தில் யாரையோ காணவில்லையே என்ற எண்ணத்தோடு அவர் பார்வை அங்குமிங்கும் அலைந்ததாக எனக்குத் தோன்றிற்று. அவர் நோக்கு என்மேல் விழுந்தவுடன் பரபரப்போடு என் பக்கம் வந்தார். குனிந்து பார்த்தார். "என்ன இலை மிகச் சிறியதாய் இருக்கிறதே! 'அப்பா' இங்கு வா! வேறு இலை போடு. உப்புமா, இட்டிலி கொண்டுவா. எண்ணெய் ஊற்று இங்கே," என்று எல்லாம் சொல்லி எனக்கு வேண்டுவனவற்றைப் பரிமாறச்செய்து அப்பால் சென்றார். இதேபோல் இடைவேளையிலும் விருந்து நடந்தது. அவர் ஓயாது அங்குமிங்கும் சென்று விருந்தோம்பும் முறை பாராட்டற்குரியதாயிருந்தது. அவர் அன்புருக்கொண்ட மனைவியாரும் இடைவிடாது மனமுவந்து விருந்தினருக்கு வேண்டுவன உதவி வந்தார்கள்.

பெரியாரின் சிக்கனம்

அன்று மாலை சில நண்பர்கள் கூடினார்கள். அக்கூட்டத்தில் நானும் இருந்தேன். அதில் ஒருவர் 'ஒரு வேடிக்கை செய்கிறேன் பார்க்கிறீர்களா! பெரியாரின் சிக்கனத்தை உங்களுக்கெல்லாம் காட்டவேண்டாமா, வாருங்கள் காட்டுகிறேன்,' என்று பெரியார் நின்று பேசிக்கொண்டிருந்த இடத்துக்கு எங்களை அழைத்துச் சென்றார். அவருடன் அப்பொழுது பேசிக்கொண்டிருந்தவர்களில் திருமதி T. S. குஞ்சிதம் அம்மையாரும் ஒருவராவர்.

எங்களை அழைத்துவந்த நண்பர் பெரியாரைப் பார்த்து, 'எல்லாரும் இன்று மாலை நந்தவனத்துக்குப் போக விரும்புகிறார்கள். வண்டி கொண்டுவர ஏற்பாடு செய்தீர்களானல் போகலாம்,' என்றார்.

'வண்டி' என்று சொன்னவுடன் அவர் விழிகளிலும் உடலிலும் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. "வண்டியா என்ன? எத்தனை பேர்கள் போகவேண்டும்," என்று சொல்லி அங்கிருப்பவர்கள் எத்தனை பேர்கள் என்று எண்ணிப் பார்ப்பவர்போல் எங்களை நோக்கினர். நாங்கள் அங்குப் பத்துப் பன்னிரண்டு பேர்கள் நின்றோம்.

எங்களை அழைத்து வந்த நண்பர், 'மூன்று அல்லது நான்குவண்டிகள் கொண்டுவரச் சொல்லுங்களேன்,' என்றார்.

"நாலுவண்டிகளா! நாலு வேண்டுமா! மூன்று போதாது! பத்துப் பன்னிரண்டு பேர்கள் தானே இருக்கிறீர்கள்!" என்று சொல்லிக்கொண்டே அங்கு நின்ற சிறு கூட்டத்தினரை மறுமுறை கண்ணுற்றார். 'நீங்களும் போய் வருகிறீர்களா,' என்று திருமதி குஞ்சிதம் அம்மையாரைக் கேட்டார், 'சரி, போய்வரலாம்' என்று தன் உடன்பாட்டைத் தெரிவித்தார்கள்.

'சரி, அப்பா! இங்குவா.' என்று ஒரு இளைஞரைக் கூவி அழைத்து, நீ போய் மூன்று வண்டிகள் கொண்டுவா. கேட்டதை அப்படியே கொடுத்துவிடுவதாகச் சொல்லி விடாதே 'நாலணுதான் கொடுப்பது வழக்கம். போய்வா,' என்றார்.

ஏவப்பட்டவர் சில அடித் தொலைவு சென்றதும் எங்களை ஊக்கிவந்த நண்பர், 'இந்தா அப்பா! நல்ல குதிரை வண்டியாய்ப் பார்த்துக்கொண்டுவா!' என்றார்.

அதற்குப் பெரியார் புதிய கட்டளையிட்டவரைப் பார்த்து, 'ஒற்றை மாட்டுவண்டி போதாது?' என்று தாழ்ந்த குரலில் கேட்டார். 'குதிரையானல் விரைவில் போய்வரலாம்,' என்றார் நண்பர்.

"சரி, அப்படியானல், இரண்டு வண்டி. போதாது! நெருக்கி உட்கார்ந்து கொள்ளலாமே. இந்தா அப்பா இரண்டு வண்டிகள் கொண்டுவா போதும். கிடைத்தால் பார். இல்லையானல் ஒற்றைமாட்டு வண்டிகளேனும்

கொண்டுவா. ஒற்றைமாட்டு வண்டியானால் குறைந்த வாடகைக்கு வருவான்; குதிரைவண்டிக்காரன் மிகுதியாகக் கேட்பான்,'' என்று பணித்தார்.

அதற்குள் ஒருவர் 'இன்று வெள்ளிக்கிழமையாயிற்றே. பெண்கள் மட்டும் தானே பூங்காவுக்கும் போகலாம். ஆண்களை விடமாட்டார்களே!' என்று தெரிவித்தார்.

உடனே சற்றுக் கவலையுடன் நின்ற பெரியாரின் முகம் திடுமென மலர்ந்து, 'ஓ, ஆம், ஆம்! பெண்கள் மட்டும் தான் இன்று அங்குச் செல்ல முடியும்' போன ஆளைக் கூப்பிடுங்கள்! கூப்பிடுங்கள்!' இரண்டு மூன்று குதிரை வண்டிகள் கொண்டு வந்துவிடப் போகிறார்!' என்று பரபரப்புடன் சொன்னார். போனவரை ஓடித் திருப்பி அழைத்து வந்தனர். பெண்கள்மட்டும் போவதானால் ஒரு வண்டி போதும். எத்தனைபேர் இருக்கிறார்கள் என்று சுற்று முற்றும் பார்த்தார். அங்கு இரண்டு மூன்று பெண்களுக்குமேல் இல்லை. அப்பொழுது திருமதி குஞ்சிதம் அம்மையார் 'நாங்களும் இன்று போகவில்லை,' என்று சொல்லினர். பெரியார் தன் இடக்கையைத் தன் சட்டைக்குள் எங்கோ மிக்க காப்புடன் தூங்கும் பணப்பை மேல் வைத்து பளு நீங்கியதுபோல் பெருமூச்சுவிட்ட வண்ணம், 'அப்படியானால் சரி, வண்டி ஒன்றும் வேண்டாமப்பா நீபோ!' என்று சொல்லினார்.

நாங்கள் எல்லாரும் பெரியாரின் சிக்கன முறையை எங்களுக்கு எடுத்துக் காட்டிய நண்பருக்கு நன்றி செலுத்திப் புன்முறுவலுடன் உலவச் சென்றோம்.

இப்படி அப்பெரியார் தன்னலமற்ற முறையில் பல்லாண்டுகளாக பல மைல் தொலைவு சலியாது நடந்து சென்று, சிக்கன முறையில் தன்மான இயக்கத்திற்குழைத்து வராவிடின் இயக்கம் என்னவாயிருக்கும்? இப்பொழுதும் இயக்கத்துக்காகப் பெருந்தொகை ஒதுக்கி வைத்திருப்பதாகத் தெரிகிறது. இந்நிலை எய்தியதற்குப் பெரியாரின் சீரிய சிக்கனமே காரணமன்றோ?

13. வீரச்செயல்

இராமநாதபுரம் கோட்டத்தைச் சேர்ந்த இலுப்பையூர் என்னும் ஊர் நாடார்கள் பெருத்தவூர். பாடசாலைகளின் கண்காணிப்புக்காகச் சென்றிருந்த நான் அங்கு இரண்டு மூன்று நாட்கள் தங்க நேரிட்டது.

ஒருநாள் என்னுடைய பணியாள் முனுசாமியுடன் பக்கத்தூருக்கு மிதிவண்டியில் சென்றுவிட்டு இலுப்பை யூருக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தேன். தொலைவில் வரும்பொழுதே ஊரில் ஒருவகைக் கொந்தளிப்பும், வானளாவப் புழுதியும் எழுவதைப் பார்த்து, ஏதோ திருவிழாவோ என்று நினைத்தேன்.

மிதிவண்டியை விரைவாகச் செலுத்தி ஊரருகிற் சென்றதும் ஊரில் பெருத்த கலகம் எனத் தெரிந்தது. பக்கத்துக்கு நூறு பேர்களுக்குமேல் நீண்ட பளபளப் பான சண்டைக் கத்திகளையும், வேல்களையும், தடிகளையும் சுழற்றிப் பேரொலி செய்துகொண்டு ஒருவரை ஒருவர் தாக்குதற்கு நெருங்கிவிட்டனர்!

'கலகம் நடக்கும் இடத்துக்கு நாம் போகவேண்டாம். வேறு வழியாய்ப் போய்விடுவோம் வாருங்கள்,' என்று என் பணியாள் எச்சரித்தான். நான் கேளாமல் மிதி வண்டியை மணியடித்துக்கொண்டே இரு கட்சியினருக் கிடையில் செலுத்தித் 'தொப்'பென்றுக் குதித்தேன். என்னைத் தொடர்ந்து என் வேலையாளும் வந்திறங்கினான். நான் அரைக்காற் சட்டையணிந்து, கச்சை கட்டி, செருகுக் கத்தியும் இடுப்பில் தொங்கவிட்டு, தொப்பியும் போட் டிருந்தேன். மிதிவண்டியை நிறுத்தி, எழுச்சியுற்று பெருமுழக்கஞ்செய்து இருகட்சியினரிடையேயும் மின் னொளிபோல் மாறிமாறிப் பாய்ந்து பல கத்திகளையும் வேல்களையும் பிடுங்கி யெறிந்தேன்.

நன்றாகக் குடித்து, மீசைமுறுக்கிச் சிவந்த கண்க ளுடன், பளபளப்பான பட்டாளக் கத்தியை வீசிக்கொண்டு

முன்னேறும் ஒரு வலியனின் வாளேந்திய கையினைப் பற்றினேன். அவன் என்னை உருட்டிப் பார்த்துப் பெரு மூச்செறிந்து, என் கையை உதறித் தள்ளினான். என் கை என் உடலைவிட்டுப் போய்விட்டதென்றே நினைத்தேன்! அவ்வளவு முரட்டுத்தனமாக அவன் என் கையை உதறி விட்டான். அவன் கத்திமுனை என் தடிப்புத் தோல் கச்சையிலும் குத்தியது அவ்வமயம் பணியாள் முனுசாமி புலிபோல் அந்த முரடன்மேல் பாய்ந்து அவன் இரு கை களையும் இறுகப்பிடித்து, நெருக்கமான வேல், கத்திகள் தாங்கிய கூட்டத்திடையே அவனைப் பின்தள்ளிச் சென் ருன். அப்போது முரடனிடமிருந்து கத்தி பறிக்கப்பட் டது. இம்மாதிரியே போர்க்கருவிகள் தாங்கி நின்றவர் களைத் துரத்தித்துரத்தியடித்து அக்கருவிகளைப் பிடுங்கி யெறிந்து இரண்டு அறைகளில் அவற்றைப் போட்டுப் பூட்டிவிட்டு, கூட்டத்தைக் கலைத்துவிட்டோம். கடைசி யாக இருதரப்பினரிலும் தரப்புக்கு ஐவர் என்னை வந்து இரவில் பார்க்கவேண்டுமெனப் பணித்துவிட்டு, நானும் என் பணியாளும் அவ்வூரில் நாங்கள் தங்கியுள்ள விடுதிக்கு மிதிவண்டியேறிச் சென்றுவிட்டோம்.

அக்கட்டளைக்கிணங்க இரு கட்சியினரிலும் சிலர் என்னை வந்து பார்த்தனர். கள்ளுக்கடைத் தொடர்பாக அன்று கலகம் ஏற்பட்டதெனத் தெரியவந்தது. இருதரப் பினரும் அடங்கிய நடுநிலைக்குழு ஒன்றை அன்றிரவே நிறுவினேன். அமைதி நிலவிற்று. அவ்வூர்ப் பெண்டு பிள்ளைகள் இம்மாதிரி நாங்கள் இருவரும் ஆண்மையுடன் நின்று பெருங் கலகத்தை அடக்கிப் பெருங்கொலை தவிர்த் ததற்கு எங்களை வாயாரப் புகழ்ந்தனர்.

14. கலயம் முக்காலணு!

இரவு எட்டு மணியிருக்கும். நல்ல இருட்டு. மழை தூறிக்கொண்டிருந்தது. மின்னல் இடையிடையே கண்ணைப் பறித்தது. நான் ஒற்றைமாட்டு வண்டியொன்றில் ஏறிச் சேலம் கோட்டத்தைச் சேர்ந்த சங்ககிரி நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன். போகும் வழியில் ஒரு கள்ளுக் கடை இருந்தது. அதில் பலர் கள்குடித்துக்கொண்டும் 'கொச்சை' மொழியில் பேசிக்கொண்டும் இருந்தனர். அவர்களில் சிலர் வண்டியைக் கண்டதும், 'கலயம் முக்காலணு! கலயம் முக்காலணு!' என்று குறும்புத்தனமாகக் கூவினர். வண்டியோட்டிக் கிருட்டினன், 'பாருங்கள் ஐயா! காலித்தனம் செய்கிறார்கள். வண்டியைக் கண்டு தான் இம்மாதிரி கூவுகின்றனர்,' என்று என்னிடம் முறையிட்டான். நான், 'அவர்கள் கூவினால் உனக்கென்ன! நீ என்ன கள்ளா குடிக்கப் போகிறாய்? ஓட்டு வண்டியை,' என்றேன். வண்டி விரைவாக ஓடத் தொடங்கிற்று. மலைக் காட்டிடைச் செல்லும் சாலையானதால், ஒத்தில்லாமல் உயர்வும் தாழ்வுமாக அமைந்திருந்தது. ஒரு மேட்டுப் பகுதியிலிருந்து வண்டி தாழ்வான பகுதியில் இறங்கும் பொழுது கள்ளுக்கடையிலிருந்து ஒருவன் வண்டியை நோக்கி ஓடிவந்தான். அவன் வரும் வேகத்தையும் நெருங்கி வருவதையும் பார்த்தால் வண்டியில் பாய்ந்து ஏற வருபவன்போல் தோன்றிற்று. அவன் வண்டியை நெருங்கி வந்ததும், 'சீ! எட்டிப்போ! என்ன வண்டியில் ஏறுகிறவன்போல் ஓடி வருகிறாய்?' என்று சீறினேன்.

'ஐயா! நான் வண்டியில் ஏறவில்லை. வண்டியுடன் ஓடி வருகிறேன்,' என்று சொல்லி வண்டியைப் பிடித்துக் கொண்டு ஓடிவந்தான். அவன் விழிகள் நாலா பக்கமும் சுழன்றன.

'நீ எங்கே போகிறாய்?' என்று அவனை வினவினேன்.

'சங்கரிக்குப் போறேனுங்க,' என்றான்.

'என்ன வேலையாய்ப் போகிறாய்?' என்றேன். 'பக்கத்தூர் முனிசிப்பு ஐயா அனுப்பினாரு,' என்றான்.

'உன் தோளில் தொங்குவது என்ன?' என்றேன்.

'அது தலைக்கு வைத்துக்க' என்றான்.

ஆனால் அவன் சொல்லில் எனக்கு நம்பிக்கை இல்லை. அவன் தோளில் தொங்கியது ஒரு சிறு நீண்ட கோணிப்பை. அப்பைநிறையப் பல இரும்புக் கருவிகளின் நுனிகள் வெளியில் தெரிந்தன. ஆனாலும் என்னுடைய ஐயத்தைக் காட்டாமல் 'சரி' நானும் சங்குகிரிக்குத்தான் போகிறேன். துணையாயிற்று, வா!' என்று சொன்னேன். அவனும் அதற்கிசைபவனைப்போல் வண்டியைப் பிடித்துக்கொண்டு ஓடிவந்தான்.

வண்டியின்கீழ் ஒரு விளக்குத் தொங்கிக்கொண்டிருந்தது. அவ்விளக்கின் வெளிச்சம் சற்றுத் தொலைவுவரை அடித்தது.

சாலையின் மற்றொரு மேட்டுப் பகுதியிலிருந்து வண்டி இறங்கும்பொழுது அங்கு வேறொரு மனிதன் நிற்பது தெரிந்தது. அவனிடம் வண்டியைத் தொடர்ந்து வந்தவன் துரிதமாக ஓடி., உரத்த குரலில், 'நீ எங்கேடா போறே!' என்று கேட்டான். அவ்விருவர் முகத்திலும் வெளிச்சம் நன்றாக அடித்தது. இரண்டாமவன், 'நானும் அங்கேதாண்டா வறேன்,' என்று குறும்புச் சிரிப்புடன் கூறிவிட்டு அவ்விருவருமாக விரைந்து வந்து வண்டியின் பின் இருபக்கங்களையும் பிடித்துக்கொண்டு ஓடிவரத் தலைப்பட்டனர்.

வண்டிக்காரனும் நானும் வண்டியிலிருக்க வண்டியைத் தொடர்பவர்களும் இருவர் ஆயினர். மேலும் எத்தனைபேர் வந்து சூழ்வரோ என்ன செய்யலாம் என்று நான் சிந்தனையிலிருக்கும் நேரத்தில், சாலையின் இருபுறங்களிலுமுள்ள பெரிய புளியமரங்களுக்குப் பின்னிருந்து பத்துப் பன்னிருவர் வண்டிக்குமுன் வந்து நின்றனர். 'ஒவ்வொருவரும் கறுத்த மேனியும், குறைந்த ஆடையும் உடையவராய் மொத்தமான கயிறு, தடி, பாரை முதலியன தாங்கி விளங்கினர். வண்டி முன்செல்வதற்கு வழியின்றி நின்றுவிட்டது!

உடனே என் பணியாள் (வண்டி ஓட்டி) கிருட்டினன், 'ஏனப்பா வண்டியை மறைச்சுக்கிட்டு வம்பு பண்றீங்க. வண்டியை விடுங்க போகட்டும்,' என்று மாட்டுத் தலைக்கயிற்றைக் கைநழுவவிட்டு நடுக்கக்குரலில் கூறினான்.

வந்தவர்களில் சிலர் 'ஏ! போகட்டுமே வண்டி,' என்று சொல்லி வண்டி மூக்கணையைப் பிடித்தனர். மிகுதியுள்ள வழிப்பறிகள் நான் உட்கார்ந்திருக்கும் பின்பக்கம் வந்து சூழ்ந்தனர்.

அதுவரை ஒரு வெள்ளைப்போர்வையைப் போர்த்துக்கொண்டு வண்டியில் அமைதியுடன் உட்கார்ந்திருந்த நான் போர்வையை வீசியெறிந்து, துணிமறைவில் கிடந்த என் தொப்பியைக் கையிலேந்தி, கீழே வெளிச்சத்தில் தொங்கும் வண்டிப்படியை என் கச்சையணிந்த காலால் வண்டி அதிர ஓர் உதை உதைத்து, கிருட்டினனைப் பார்த்து 'நீ ஓட்டப்பா வண்டியை! அவர்கள் வந்தால் உனக்கென்ன?' என அறைந்தேன். என் தொப்பியையும் அதற்கியைந்த பிற அணிகளையும், என் நெஞ்சுரத்தையும் அப்பொழுதே கண்ட திருடர்கள் திடுக்கிட்டுத் தலைவணங்கி, 'ஐயா! நீங்க போங்க! நாங்க நிற்கிறோம்,' எனச் சொல்லி விரைந்து இருட்டில் மறைந்துவிட்டனர்.

வண்டி சங்குகிரி நோக்கிப் பறந்துசென்றது!

15. கொலை! கொலை!

'திருச்செங்கோடு' கூற்றத்தைச் சேர்ந்த ஓர் சிற்றூருக்குச் சென்றிருந்தேன். அவ்வூர் காவேரிக் கரையிலுள்ளது. அங்கு முகமதியர் மிகுதியாய் வதிகின்றனர். நான் என் பணியாள் கண்ணனுடன் ஓர் இரவு அவ்வூர்த் துவக்கப் பள்ளியில் தங்கியிருந்தேன்.

இரவு எட்டு மணியிருக்கும். உண்டுவிட்டு நான் பாடசாலையின் உள்ளே உலவிக்கொண்டிருந்தேன். ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. என் பணியாள் கண்ணன் வெளித் தாழ்வாரத்துக்குச் சென்று ஒரு வாழையிலையைக் கழுவிக்கொண்டு திரும்பினான். கதவருகே வந்ததும், திடீரென வெளியிலிருந்து யாரோ ஒருவன் கண்ணனை உள்ளே தள்ளிக்கொண்டு தானும் நுழைந்து கதவை உட்புறம் சாத்தி அதன்மேல் சாய்ந்துகொண்டு, 'ஐயோ! கொலை! கொலை!', என்று கத்தினான்.

உள்ளே உலவிக்கொண்டிருந்த நான் உடனே விளக்கருகே இருந்த ஈரோட்டுத் தடியைப்பற்றி உள் நுழைந்தவனருகில் பாய்ந்து சென்று கழியை ஓங்கியவண்ணம், 'யாரடா நீ திருட்டுப்பயல்! உள்ளே நுழைந்து கத்துகிறாய்?' என்று முழக்கினேன்.

'ஐயோ! என்னை அடிக்காதீங்க! என்னைக் கொலை செய்ய வந்த ஒருவன் வெளியே இருக்கான். அவனைத் துரத்துங்க,' என்று கூக்குரலிட்டான்.

என் பணியாள் கண்ணன் திடுக்கிட்டு சிலைபோல் நின்றான்.

நான் அக்குறவனின் கையைப்பற்றி யிழுத்துக் கதவைத் திறக்க முயன்றேன். அவன் கதவின்மேல் இறுகச் சாய்ந்தவண்ணம் 'ஐயோ! கதவைத் திறக்காதீங்க. திறந்தால் வெளியில் உள்ளவன் என்னை உங்க முன்னாலேயே கொன்று போடுவான்!' என்று கதறினான்.

பலகணி வழியே வெளித் தாழ்வாரத்தை விளக் கெடுத்து எட்டிப் பார்த்தேன். ஒருவரும் காணப்பட வில்லை. ஆகையால், மீண்டும் கதவைத் திறந்து குறவனை வெளியில் தள்ள முயன்றேன். ஆனால், குறவன் மறுத்து 'ஐயா! உங்களுக்குப் புண்ணியமுண்டு. என்னை வெளியில் தள்ளிவிடாதீங்க! ஊர்க் கணக்குப்பிள்ளையைக் கூப்பிடுங்க. விளக்கு எடுத்து ஆட்களோடு வரச்சொல்லுங்க. அப்பத் தான் நான் கதவைத் திறப்பேன்,' என்று உறுதியுடன் கூறினான். 'நீயே கூவி அழையடா,' என்றேன்.

'நான் கூப்பிட்டால் வரமாட்டாருங்க,' என்றான்.

அதற்குள் என் வேலையாள் எப்படியாவது அந்தக் கொந்தளிப்பிலிருந்து விடுபடவெண்ணி, 'ஐயா! கணக்குப் பிள்ளை ஐயா! இங்கே வாங்களேன்! விளக்கொன்று எடுத்து வாங்க! நாலைந்து பேரை அழைத்து வாங்க! இங்கே யாரோ குறவன் புகுந்துகொண்டு வெளியே போகமாட்டேன் என்கிறான்,' என்று பலகணிவழியே உரக்கக் கூவியழைத் தான்.

இக்கூப்பாட்டைக் கேட்டு அருகில் குடியிருந்த கணக்குப்பிள்ளை ஒரு விளக்குடனும், சில ஆட்களுடனும் விரைந்து வந்து, 'யாரடா உள்ளே நுழைந்தது, வாடா வெளியே,' என்று கூவினர்.

'நான்தானுங்க இருளாண்டி நயினன்; என்னைக் கொலைசெய்ய ஓடிவந்தானுங்க! அவன் வெளியில் பதுங்கி யிருக்கானா பாருங்க,' என்று குறவன் பதறினான்.

'அவன் இல்லையடா. வெளியில் வாடா,' என்று கணக்கப்பிள்ளை கூறினர்.

அதற்குப் பிறகுதான் குறவன் கதவைத்திறந்து கொண்டு வெளிப்பட்டான்.

கணக்குப்பிள்ளை அவனைப்பார்த்து, 'ஏனடா! இங்குத் தானா நுழைய இடம் பார்த்தாய்?, என்று அதட்டிக் கேட்டார்.

'ஐயா, நான் இங்கு ஓடிப் பதுங்காட்டா என்னை நயினன் கொலை செய்திருப்பானுங்க,' என்று விடையளித்தான்.

அதற்குப் பிள்ளை, 'அப்படியானால் காலையில் நீ இங்கு வந்து நயினன் உன்னைக் கொலை செய்ய வந்தான்,' என்று ஐயா முன்னிலையில் எழுதி வை. பிறகு தகுந்த நடவடிக்கை எடுப்போம்,' என்றார்.

இதில் ஏதோ சூழ்ச்சி யிருப்பதாக ஐயுற்ற நான், 'யாரும் இக்குறவனைக் கொல்ல வரவில்லை. குடித்து விட்டு உள்ளே வந்து வீண் கலகம் செய்த இக்குறவனைத்தான் ஒறுக்க வேண்டும்,' என்று உறுதியுடன் கூறினேன்.

கணக்குப்பிள்ளையும் குறவனும் ஏமாற்ற மடைந்த முகத்தினராய்த் திரும்பினர். திரும்பிச் செல்லுகையில் இந் நிகழ்ச்சியைக் கேட்டுக் கழியும் கத்தியுமாக விரைந்தோடி வந்த அவ்வூர் முகமதியர் பலர், குறவனை வளைத்துக் கொண்டு, கணக்குப்பிள்ளையின் ஆறுதல் மொழியையும் கேளாமல், நையப் புடைத்து, குறவனைக் காவலில் வைத்துக் காலையில் துரத்தி விட்டனர்.

கணக்குப்பிள்ளையும் குறவனும் நயினன் என்பவனைக் குற்றவாளியாக்கி ஒறுக்கச்செய்த சூழ்ச்சிதான், இந்நிகழ்ச்சிக்குக் காரணம் என்று நான் காலையில் சிலரை உசாவித் தெளிந்து ஆறுதலடைந்தேன்.

---

16. என்னை நெருங்கலாகாதோ?

வந்தவாசி என்பது வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கூற்றமாகும். நாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெற்றது. இடிந்த கோட்டையும் அங்குளது. அவ்வூரில் நான் பாடசாலைக் கண்காணிப்பாளனாக இருந்தபொழுது தான் எனக்குத் தமிழ்ப்பற்று முதன்முதல் உண்டான தாகச் சொல்லவேண்டும்.

எங்கும் தமிழ்க்கிளர்ச்சி எழுந்த காலம். தமிழுக்கு ஆக்கந்தேட, தமிழுக்கு ஊறுவாராது காக்க, தமிழர் வீறு கொண்டெழுந்த காலம். தமிழன் என்ற உணர்ச்சி மிக் கெழுந்த நன்னாள். திரு. மறைமலை அடிகளாரின் அரிய சில நூல்களையும், அவர் தம் அருமைப் புதல்வியாரின் நூல்களையும் நான் ஊன்றிப்படித்து உணர்வு பெற்றேன். தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் 'மலரும் மாலையும்' என்ற புத்துணர்வு எழுப்பும் பாட்டுக்களையும், புதுவைக் கவியின் கவிதைகள் முதலியனவும் நான் படித்துத்திளைத் தேன். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளி யிடும் 'செந்தமிழ்ச் செல்வி,' கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிடும் 'தமிழ்ப்பொழில்' போன்ற தூயதமிழ்த் திங்கள் வெளியீடுகளைப் படித்து அறிவைப் பெருக்க முயன்று வந்தேன். பிறரையும் ஊக்கித் தமிழ் அறிவுபெறச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றது.

என் அருமைத் தாய் இறந்த ஆண்டு இறுதிச் சடங்கு நடத்தவேண்டிய நாள் நெருங்கிற்று. தமிழை வளர்க்க வழிதேட எண்ணங் கொண்ட எனக்கு இச் சடங்கு ஓர் அருமை வாய்ப்பாகத் தோன்றிற்று. அவ்வாண்டு இறு திச் சடங்கன்று ஆரணி மதுரகவி மாணிக்கவாசகனார் அவர்களை வருவித்தேன். திரு. பாலசுந்தரநாயகரும், திரு. கோதண்டராம முதலியார் அவர்களும், வந்தவாசி நாட்டாண்மைக்கழக உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரிய ராக வேலைபார்த்து வந்தனர். இவர்களைக் கொண்டு தமிழ்க்கழகம் ஒன்று என் அன்னையின் நினைவுக்குறியா

நிறுவினேன். துவக்கவிழாச் சிறப்பாக நடந்தேறியது. பல அரிய தமிழ்ச் சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. ஒரு சிறு தமிழ் நூல்நிலையம் நன்கொடைச் சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு துவக்கப்பட்டது.

திருக்குறள் வகுப்பொன்று துவக்கினோம். வாரம் ஒரு முறை வகுப்பு நடத்தப்பட்டது. உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்கள் இருவரும் யாதும் கைம்மாறின்றிப் பாடம்சொல்லிக்கொடுத்து வந்தனர். தமிழில் அறிவு வளர வளர, குறள் வகுப்பினர் சிலர்க்கு நாடோறும் தமிழ் கற்கவேண்டும் என்ற வேட்கை உண்டாக, நாள்வகுப்புத் துவக்க வேண்டினர். எழுவரைக் கொண்டு ஒரு தமிழ் வகுப்புத் துவக்க முயன்றோம். தனி இடம் ஒன்று வேண்டியிருந்தது. வடநாங்கூரிலுள்ள பெருநிலக் கிழவரும், சிவப்பற்றும் தமிழ்ப்பற்றும் ஒருங்கமைந்த பெரியாருமாகிய திரு. அருணாசலமுதலியார் அவர்களை அணுகிக் கேட்டோம். அவர்கள் தமக்குச் சொந்தமாக வந்தவாசியிலுள்ள கட்டடம் ஒன்றன் மாடியை வாடகையின்றித் தமிழ்க்கழகத்துக்கெனக் கொடுத்துதவினர். சில சீர் திருத்தங்கள் செய்து, தெருவிலிருந்து மாடி ஏறத் தனிப்படி ஒன்றும் அமைத்துத் தந்தனர். அப்புதிய இடத்தில் தமிழ்க்கழகம் நாளுக்குநாள் வளர்ச்சியுற்று வந்தது. பிற கூற்றங்களுக்கும் இதன் புகழ் பரவத்தொடங்கிற்று. பக்கத்துக் கூற்றமாகிய சேயாற்றைச் சேர்ந்த ஊர்களிலிருந்து சில ஆசிரியர்கள் மிதிவண்டியேறி நாடோறும் பத்துமைல்கள் வந்து தமிழ்கற்றுச் செல்வாராயினர்.

துவக்கப்பள்ளி யாசிரியர்களும் வாணிப இளைஞர்களும் சற்றேறக்குறைய நாற்பதுபேர்கள் கொண்ட வகுப்புக்கு இரு புலவர்கள், புலவர்தேர்வுக்குப் பாடம் கற்பித்து வந்தனர்.

இப்படியாகக் கழகம் செவ்வனே நடந்தேறி வரும்பொழுது ஒருநாள் வந்தவாசிக்குத் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்அடிகள் தம் பரிவாரங்களுடன் வந்திருப்ப

தாகக் கேள்விப்பட்டுப் பெருமகிழ்வுற்றேன். நான் சிறுவனாக இருந்தபொழுது சில காலம் கூடலூரில் என் மாமா கூற்றவரித் தண்டலாளராக (தாசில்தார்) இருந்தார். அவர் திருப்பாதிரிப்புலியூர் திரு. ஞானியார் அடிகளைப் பற்றி மிகச் சிறப்பாகச் சொல்லக் கேட்டிருந்தேன். சிவ நெறிச் செல்வர், ஆழ்ந்த நூலறிவும், சிறந்த உலகியலறிவும், ஒழுக்கமும் உடையவர் என்றும், அவரைக்காட்டிலும் சிறந்த அறிவாளி தென்னாட்டில் யான் கண்டிலேன் என்றும் அவர்கள் சொல்வதுண்டு. அப் பெரியாரின் செந்தண்மையைப் புகழாதாரில்லை. சமயத்தைப் பற்றியும் தமிழின் சிறப்பைப் பற்றியும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணர்ச்சி ததும்ப எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர் என்றும், பெருவாரியான மாணாக்கர்களுக்குத் தமிழ் கற்பித்துள்ளார் என்றும் என் மாமா சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஆனால், அக் காலத்தில் நான் சிறுவனாயிருந்தமையால் அப் பெரியாரைக் கண்டு அளவளாவ நேரவில்லை.

அப்பேர்ப்பட்ட பெரியாரை வந்தவாசியில் பார்க்கலாம் என்ற பேரவாவினால் உந்தப்பெற்று, சில துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் சூழ, ஞானியார் அடிகளைக் காணச் சென்றேன்.

சிவந்து தளர்ந்த மேனி. கழுத்தில் சிவமணி. திருநீறு பொருந்திய நெற்றி. செந்தண்மை வீசும் ஒளிமுகம். இக் காட்சியளித்த பெரியார் நாங்கள் சென்றதும் எங்களைத் தமிழ் உள்ளங் கொண்டு வரவேற்றனர். அடியார்கள் பலர் அவரைச் சூழ்ந்திருந்தனர். நான் அப்பெரியாருக்கு நிலந்தோய் வணக்கம் செய்து எழுந்து நிற்க, என்னுடன் வந்தவர்களும் அவ்வாறு செய்தெழுந்தனர். எங்களுக்குத் திருநீறு கொடுத்து அன்புடன் அமரச்சொல்லி அளவளாவுவாராயினர்.

"நீங்கள் இவ்வூரில் நிறுவியுள்ள தமிழ்க்கழகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டேன். மிகவும் மகிழ்கிறேன்.

தமிழை வளர்க்க முன்வருபவர் குறைந்த இந்நாளில், நீங்கள் இதில் பெரு முயற்சி யெடுத்திருப்பது பாராட்டத் தக்கது. தங்களைப் பற்றி இவ்வூராரிடம் உசாவியும் அறிந்தேன். தன்னலமற்ற இச்சீரிய தொண்டாற்றும் சீரியார் யார்? அவரைக் காணவேண்டும் என்று அவாவினேன். தாங்களே வந்தது எனக்குப் பெரு மகிழ்வூட்டுகின்றது," என்று சொல்லி யருளினர்.

'நான் அடிகளைப் பற்றி என் மாமா திரு. சிதம்பர முதலியார் கூடலூரில் சற்றேறக்குறைய முப்பதாண்டுகளுக்கு முன் கூற்றவரித் தண்டலாளராக இருந்த காலத்தில் கூறக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவர்கள் தங்களைப்பற்றி மிகச் சிறப்பாகச் சொல்லுவார்கள். ஆனால் அப்பொழுது நான் சிறுவனாயிருந்தமையின் அடிகளைக் கண்டு அளவளாவும் பேறுபெற்றேனில்லை. இப்பொழுது அப்பேறு பெற்றது என் நல்வினையின் பயனே,' என்று கூறி மகிழ்ந்தேன்.

"அடடா சிதம்பர முதலியார் அவர்களின் மருகரா நீங்கள்! அவர்களை எனக்கு மிக நன்றாய்த் தெரியுமே! என்ன உயர் குணம் வாய்ந்தவர்கள்! மிகச் சிறந்த குடும்பத்தைச் சார்ந்தவர்களாயிற்றே! அவர்களின் மருகர் நீங்கள் என்று எனக்குத் தெரிந்தபிறகு இத் தமிழ்த் தொண்டை நீங்கள் சீரிய முறையில் ஆற்றி வருவது இயல்பே யென்று நான் தெளிகிறேன். நானும் பலபேர்களை இக் கழகத்தைப் பற்றி பல துறைகளில் உசாவிப் பார்த்தேன். ஒவ்வொருவரும் அதைப் பற்றியும் அதைத் துவக்கிய தங்களைப் பற்றியும் மிகப் புகழ்ந்தே சொல்லினர். இத் தொண்டைத் தொடர்ந்து நடத்துங்கள். நலம் உண்டு," என்றார்.

"ஆனால் புலவர் தேர்வில் பெருவாரியாக மாணாக்கர்கள் தேறின் அவர்களுக்கு அரசியலார் தட்டின்றிப் போதிய ஊதியத்துடன் வேலை கொடுப்பார்களா என்பது தான் ஐயப்பாடா யிருக்கிறது," என்று மேலும் சொல்லினர்.

"இப்பொழுது புதிய கட்டளை அரசியலார் பிறப்பித்து, நாட்டாண்மை, நகராண்மைக்கழக உயர்நிலைத் துவக்கப் பள்ளிகளிலும் தமிழ்ப்புலவர்கள் அமைக்கப் பெறலாம் என்று ஏற்படுத்தி யுள்ளார்கள். எதிர்காலத்தில் தமிழ்ப்புலவர்களுக்குப் பெருவாரியாக வேலை கிடைக்கவும் ஊதியம் பெருகவும் இடம் உண்டு என நம்புகிறேன் அதோடு, தமிழின் இனிமையை நுகர நுகர, கழகத்தில் கற்போர் எண் பெருகி வருகிறது. ஊதியத்தை மட்டும் எண்ணிக் கற்காமல், அதன் சுவையை நுகரவே பலர் முந்துகின்றனர்," என்று நான் சொல்லக் கேட்டு அப் பெரியார் பெரு மகிழ்வெய்தினர்.

இப்படியாக உரையாடி மகிழ்ந்து விடைபெற்றுச் சென்றேன்.

மறுநாள் எனக்கு வெளியூர் சென்று வர வேண்டியிருந்தது. போய்விட்டுத் திரும்பினேன். மாலை ஆறு மணி இருக்கும். ஏராளமான மக்கள், ஆணும் பெண்ணுமாகக் குழுமியிருந்தனர். வெளியிலிருந்து வருபவரை அடிகள் எளிதில் காணக்கூடிய உயர் இருக்கையில் அமர்ந்து, 'காரைக்காலம்மையார்' புராணத்தை விரித்துரைத்துக் கொண்டிருந்தார்கள். தமிழ்க்கடல் மடைதிறந்தாற்போல முத்து, பவழம் போன்ற பொருள் நிறைந்த எளிய இனிய சொற்கள் அவர்களின் முகமலர்ந்த செந்நாவிலிருந்து அலை அலையாக ஓடி, இன்புற்று அசைவற்றிருக்கும் அடியார்கள் செவிகளில் பாய்ந்த வண்ணமிருந்தன. அவ் வமயம் இவ் வரிய சொற்பொழிவைக் கேட்கக் காலங்கடந்து வந்தோமே என்ற வெட்கத்தாலும், வருத்தத்தாலும் நான் தயங்கி அடங்கி ஒடுங்கி சற்றுத் தொலைவில் ஒரு புறத்தமர்ந்தேன். இந்த மட்டில்லா மகிழ்வூற்றுப் பெருக்கிடும் அவ் வன்புக் கடல் என்னை அருள்நோக்கு நோக்கி அவ் வன்பலைகளை என்மேல் திருப்பத் தொடங்கிற்று. அவ் வெள்ளம் சீழ்க் கண்ட இன்பச் சொற்களால் என்னை அலை மோதிற்று. "என்னை நெருங்கலாகாதோ?" என்ற சொற்கள் அப் பெரியாரின் அருள் வாக்கிலிருந்து பிறந்தன. நான்

என்ன செய்வதெனச் சற்றுத் தயங்கினேன். அடிகளையே இமை கொட்டாது நோக்கியிருந்த பெருமக்கள் வியப்புற்று என்னைத் திரும்பிப் பார்த்தனர். இனியும் வாளா இருத்தல் சரியன்று எனக் கருதி மெல்ல எழுந்து அடிகளார் முன்னே சென்று சற்று அருகில் அமர்ந்தேன். பிறகே அவ் வள்ளலார் மீண்டும் சொல் வள்ளன்மையைத் துவக்குவாராயினர்.

நான் அசையாது அவரை நோக்கி அமர்ந்திருந்தேனாயினும் அவர் 'அம்மையார்' கதையை விரித்துரைத்துச் சென்றதில் அவ்வளவாக என் மனம் சென்றதாகச் சொல்ல முடியாது. அவர்கள் என்னைப் பார்த்துச் சொன்ன 'என்னை நெருங்கலாகாதோ' என்னும் சொற்கள் என் உள்ளத்தில் பலபடியாகத் தோற்றத் தொடங்கின. 'என்ன பொருளில் இச் சொற்களைக் கூறினார்கள் ?' என்று என் மனம் ஊசலாடத் தொடங்கிற்று. என் பக்கலில் வரக் கூடாதோ ? கிட்ட வந்தால் நான் சொல்வது நன்கு விளங்குமே ! என்ற வெளிப்படைப் பொருளில் சொன்னார்களா? அல்லது, அறிவீனம் என்னும் இருளில் உழலும் மகனே ! அறிவுச் சுடர் கொளுத்தும் என்னை அணுகி அறிவு ஒளி பெறலாகாதோ? என்ற உட்பொருளிற் பகர்ந்தார்களா? அன்றி 'சமயப் பற்றற்றுத் திரியும் அறிவிலியே, பற்றுப் பெற வழி காட்டுகிறேன் ; அருகில் வா' என்று எண்ணிச் சொன்னார்களா ? அல்லது 'என்னை நெருங்கின் துறக்கத்தின் சீரிய வழியைக் காட்டுவேன். என் தொலைவில் நிற்கிறாய். கிட்ட வா' என்று அருள் வாக்குப் பிறப்பித்தார்களா ?' என்றெல்லாம் பலபட எண்ணி யெண்ணி ஏக்குற்றிருந்தேன். இப்படியாக நான் மயங்கி யிருக்கத் திடுமெனச் சொற்பொழிவு நின்றது. கூட்டத்தினர் கலையத் தொடங்கினர்; அருள் வடிவுபெற்ற ஞானியார் அடிகள் பல்லக் கேறித் தாம் தங்கியுள்ள மடத்துக்குச் சென்றனர்.

இரவு எட்டுமணி இருக்கும். சொற்பொழிவாற்றிய பிறகு சற்றுக் களைப்பாறும் வேளை நாம் போய்ப் பார்க்க

லாமோ என்னவோ? என்று தமிழ்ப் புலவர் இருவரும் நானுமாகப் பேசிக்கொண்டிருந்தோம். அடிகளைப் பார்த்து, நாங்கள் நடத்தும் தமிழ்க் கழகத்துக் கேகிக் கழகமாணவர்க்கு அறிவுரை புகட்டுமாறு கேட்கவேண்டும் என்பது எங்கள் அவா. ஆனால் அடிகள் பெருஞ் சொற்பொழிவுக்குப் பிறகு வேறு இடத்துக்குப் போகவோ, பேசவோ மாட்டார்கள் என்றும் உணர்ந் தோம். 'அப் பெரியாரைப் போய் அழைத்தலே கூடாது, நாங்கள் தாம் அவரை வரவழைத்தோம். கழகத்துக்காக அவர் வரவில்லை,' என்றெல்லாம் 'காரைக்காலம்மையார்' புராணம் நடத்திவைக்க ஏற்பாடு செய்திருந்த சில வணிகர் குழாத்தினர் கூறி எங்களைத் தடைப்படுத்துவா ராயினர். இருப்பினும் எங்கள் தமிழ்ப்பற்றும் பெரியாரின் அன்புள்ளமும் எங்களை ஊக்க நாங்கள் அடிகளிடம் சென்று 'தாங்கள் நாளைக் காஞ்சிக்குச் செல்வதாக உணர்கிறோம். அடிகள் எங்கள் தமிழ்வகுப்புக்கு எழுந்தருளி அறவுரை அருளவேண்டும்,' என்று பணிவுடன் கேட்டோம். அதற்கு அவ் வருளாளர், உடனே, 'உங்கள் தமிழ்ப்பணியைப் பாராட்டும் நான் உங்கள் வேண்டுகோளுக்கு இணங்குவதில் என்ன தடை? இதோ வருகிறேன்,' என்று சொல்லிப் பல்லக் கேறி வந்தனர். தமிழ்ப்புலவர்களும், வகுப்பு மாணவர்களும் நானும் சிவிகையைச் சூழ்ந்து சென்றோம். கழகவாயிலில் பல்லக்கு நின்றது. மெதுவாக அடிகள் பல்லக்கை விட்டிறங்கி, 'எங்குள்ளது கழகம்?' என்று வினவினர். இதோ இந்த மாடிப்படி வழியாக ஏறிச் சென்றால், மாடி அறையிலுள்ள தமிழ்வகுப்புக்குக் கொண்டுசெல்லும் என்று கூறினேன். படியை ஏற இறங்கப் பார்த்தனர். தள்ளாத முதியர். பருத்த உடலினர். குறுகிய வழி. எப்படிச் செல்வது என்ற ஐயப்பாடு எழுந்தது அவர் உளத்தில். அன்பினாலும் தமிழ்த் தொண்டில் இறங்கியுள்ள மனப் பண்பினாலும் உந்தப்பட்டுத் தள்ளாடித் தள்ளாடி ஏறத் தலைப்பட்டனர். நாங்கள் பின் சென்றோம். கடைசிப் படியைத் தாண்டி அறையின் வெளிப்புறத்தை அடைந்ததும் பெருமூச்சு விட்டுக்கொண்டு, 'கழகத்தை

நல்ல இடத்தில் அமைத்திருக்கின்றீர்கள் ; இங்கு வருபவர்கள் உண்மையிலேயே ஏற்றம் அடைவார்கள்,' என்று இரு பொருள்படப் புகன்றதைக் கேட்டு நாங்கள் இன்புற்றோம்.

பிறகு கழகவகுப்பையும் மாணவரையும் பார்த்து மகிழ்ந்து, கீழிறங்கி வந்து, திறந்த வெளியில் ஒரு கூட்டத்துக்குமுன் அடிகள் அமர்ந்தனர். வடநாங்கூர் திரு. அருணாசலமுதலியார் அவர்கள் அடிகளின் பக்கத்தமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தார்கள். நான் மாணவ ஆசிரியர்களுடன் சற்றுத் தொலைவில் பேசிக்கொண்டிருந்தேன். அடிகள் என்னைப் பார்த்து, 'இப்படி வருகிறதுதானே,' என்று அருளினார்கள். நான் எழுந்து பக்கத்தே போய்ப் பணிவுடன் நின்றேன். அப்பொழுது அடிகளார் வடநாங்கூர் முதலியார் அவர்களையும் என்னையும் கண்ணுற்று, 'ஏன், நீங்கள் இருவரும் என் இரு கண்கள்போல் இரு பக்கமும் அமரக்கூடாதோ ?' என்றனர். இன்புற்று முதலியார் ஒரு பக்கமிருக்க நானும் அடிகளின் மற்றொரு பக்கலில் அமர்ந்தேன். பிறகு அடிகளார் பல அரிய அறவுரைகளைக் கழக மாணவ ஆசிரியர்களுக்கு வழங்கினார்கள்.

கூட்டம் முடிந்ததும் பல்லக்கில் ஏறப்போகும் பொழுது என்னைப் பார்த்து 'நீங்கள் இன்னும் அரைமணி கழித்து நம் இருப்பிடம் வாருங்கள். கடவுள் வழிபாடு நடத்துவோம்,' என்று மனமுவந்து அழைத்தனர். 'அப்படியே வருகிறேன்,' என்று சொல்லி அரைமணி கழித்துச் சென்றேன். அதற்குள் அடிகள் குளித்துவிட்டு, இடுப்பில் துண்டு கட்டி, நிறையத் திருநீறு அணிந்து, திரு முன் விளக்கேற்றி, என் வரவை எதிர்பார்த்து நின்றனர். என்னே! தமிழ்ப் பண்பு! உழுவல் அன்பு! அருள் மாண்பு! என்னைக் கண்டதும், 'உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்,' என்று சொல்லிக் கடவுள் வழிபாட்டைத் துவக்கி, எனக்குத் திருநீறு, தேங்காய், பழம் முதலியன அருளினர். பெற்று வணங்கி நின்றேன். அடிகள் தாம் காஞ்சிக்

குச் சென்று திரும்புங்கால், வந்தவாசி வந்தால் மறுபடியும் பார்க்கின்றேன் என்றும், காஞ்சியில் ஒரு திங்கள் தங்கப் போவதால் கூடுமானால் அங்கே என்னை வருமாறும் பணித்தார்கள். 'காஞ்சிக்கு வந்து அடிகளைப் பார்க்க முயல்வேன்,' என்று சொல்லி, வணக்கம் தெரிவித்து விடை பெற்றுத் திரும்பினேன்.

II

திரு. ஞானியார் அடிகள் மறுநாட் காலை காஞ்சிக்குச் சென்றுவிட்டார்கள். அவர்கள் அங்குச் சற்றேறக் குறைய ஒரு திங்களுக்குமேல் தங்கியிருந்து பல சொற்பொழிவுகள் நிகழ்த்திய போதிலும் அடிகளைச் சென்று மறுமுறை பார்க்கும் பேறு பெற்றேனில்லை.

அடிகள் வந்தவாசி வந்துபோன சில நாட்களுக்கெல்லாம் நான் பொன்னேரிக்கு மாற்றப்பட்டுச் சென்று விட்டேன்.

தமிழ்வகுப்பு தமிழ் வள்ளல் வடநாங்கூர் அருணசல முதலியார் அவர்களின் நன் முயற்சியாலும் அன்பு அளிப்பாலும், தமிழ்ப் புலவர்கள் திரு. பாலசுந்தரநாயகர், திரு. கோதண்டராமமுதலியார் அவர்களின் அறிவு ஊக்கத்தாலும் தொடர்ந்து நடந்து வந்தது.

பொன்னேரியில் நான் தங்கியது சில மாதங்களேயாயினும், அங்கொரு தமிழ்க்கழகம் நிறுவிப் பல சொற்பொழிவுகள் நிகழச்செய்து, தமிழ் வகுப்பொன்று அங்கே துவக்கி வைத்தேன்.

நான் பொன்னேரி சென்ற சில திங்களில் ஒரு வியத்தகு கனவு கண்டேன். அக் கனவை என் மனைவி மக்களிடம் மறுநாட்காலை விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கும் பொழுது திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகளிடமிருந்து ஒரு முடங்கல் வந்தது. அம் முடங்கலுக்குள் அவர்கள் திருநீறும் மடித்து வைத்திருந்தனர். அம் முடங்கலில் அவர்கள் என்னை வாழ்த்தி என் தமிழ்த்

தொண்டைப் பாராட்டி, 'நாங்கள் சமயத் தொண்டும் ஆற்றுவீர்களாக!' என்று அருளுரை புகன்றிருந்தார்கள். என்னே அடிகளின் அருமையும் பெருமையும்! அவர்களை நான் வந்தவாசியில் கண்டு அளவளாவியதும், அங்கு அவர்கள் 'என்னை நெருங்கலாகாதோ,' என்று சொன்னதும், நீங்கள் அமைத்த கழகத்துக்கு வருபவர்கள் உண்மையிலேயே 'ஏற்றமடைவார்கள்,' என்றுஅருள் வாக்குத் தந்ததும், வள்ளல் வடநாங்கூர் முதலியாரையும் என்னையும் 'இரு கண்களென என் இரு பக்கத்திலும் அமரக் கூடாதோ,' என்றதும், அதன்பின் கடவுள் வழிபாட்டில் என்னை ஈர்த்ததும், பிறகு கனவிலும் வியத்தகு நிலையில் என்னை ஆட்கொண்டதும், கடைசியாக அன்பு முடங்கலும் திருநீறும் அனுப்பிச் சமயத் தொண்டும் ஆற்றுமாறு பணித்ததும், இவையெல்லாம் என்னை ஒரு புது உலகத்தில் ஈர்த்துச் செல்லுவதாகவே நான் உணர்ந்தேன். இவ் வெண்ணங்களை மனத்திற்றாங்கி அடிகளுக்கு உடன் விடை முடங்கல் ஒன்று கீழ்வருமாறு வரைந்தேன்.

பொன்னேரி
1—9—41

அன்பின் உருவே!

அறிவிற் சிறியேனிடத்து அருள்சுரந்து மருள்நீக்க வந்த அறிவுச் சுடரே! தெள்ளமுதே! வணக்கம்.

அடியேன் வந்தவாசியில் அடிகளைக்கண்டு உளம் பூரித்த நாள்தொட்டு அடிகளின் முதுவடிவு எனதகக் கண்ணில் நிலைபெற்று இன்னொளி பரப்பிக் காட்சியளிக்கின்றது. அடிகளின் திருவுருவைக் கொண்ட என் மனம் சில திங்கள் கழிய, அடியார்கள் சூழ, பல்லக்கொன்றில் ஏறிச் சென்ற பெரியார் ஒருவர் திடீரெனச் சிவிகை நிறுத்திக் குண்டலமசைய எழுததாணி கொண்டு என் பக்கலேகி வாயைத் திறந்து நாவை நீட்டச் சொல்லி ஆழ என்னென்னவோ எழுதி ஆசி கூறிச் சிவிகையேறிப் போந்த காட்சிகொண்டு வரையிலா மகிழ்ச்சி யுற்றது.

இந் நிகழ்ச்சியின்றொடர்பாக அடிகள் திருநீறு மடித்து அன்புவடித்து அருளிய முடங்கல் அடியேன் பெற்றது திருவருட் செயலே போலும்!

தமிழ்க் கடலாகிய அடிகள் கருமேக வாயிலாக இடி யிடித்து, மின்னல் மின்னித் தமிழ்ப்பொழிவு செய்து தமிழ்நாட்டை வளம்பெறச் செய்யுங் காலை, இல்லிக் குடங் கொண்டு அருந்தற் கிணற்றில் அறுந்த கயிற்றுடன் வலிமையற்ற கைகளால் மொண்டு மொண்டு ஊற்றித் தமிழ்ப்புலத்தைப் பலனுறச் செய்ய முன்வரும் பேதை யேனின் தொண்டும் ஒரு தொண்டோ!

அடிகளின் அன்பும் திருநீறும் பெற்றுப் புனிதனை
அடியேன்,
இ. பாலகிருட்டினன்.

இம் முடங்கல் அனுப்பிய சின்னாட்களில் நான் ஆத்தூருக்கு மாற்றிச் சென்றேன். மீண்டுமோர் தடவை அடிகளிடமிருந்து திருநீறு வரப்பெற்று மகிழ்ந்தேன். அதன் பிறகு திரு. ஞானியார் அடிகளார் அவர்களுடைய வழிபடு கடவுளான திரு முருகக்கடவுள் எழுந்தருளி யிருக்கும் பழநியம்பதியருகிலேயே அவ் விறைவனை வணங்கி அவனடி சேர்ந்தனர் என்ற செய்தி எனக்கு எட்டிற்று.

அடிகளின் உழுவல் அன்பும், அறிவுப் பெருக்கும், சமயப்பற்றும், தமிழ்த்தொண்டும், அருள்உள்ளமும் தமிழ் நாட்டைப் பல்லாற்றானும் செம்மைப்படுத்தி வந்தன. அவர்களை யொத்த பெரியார் ஒருவரைக் காண்டலரிது! இனி அத் திருவுருவை எங்குக் காண்போம் என்று தமிழ் உலகு ஏங்கி நிற்கின்றது!

17. படுவீழ்ச்சி

இரண்டாவது உலகப் போர் நடந்து வரும்பொழுது சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த.......... பட்டி என்னும் ஊருக்குப் போர்ப் படங்காட்டும் விளம்பர இயக்கியை* எடுத்துச் சென்றிருந்தேன். என் உதவியாளர்களும் வந்திருந்தனர். பிற அறிஞர் சிலர் போர் நிலையைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்த வந்திருந்தனர். அந்த ஊர் சேலத்தில் இருந்து ஏழுகல் தொலைவிலுள்ளது.

சொற்பொழிவுகள் முடிந்தன. பிற சொற்பொழிவாளர் என்னிடம் விடைபெற்றுச் சென்றனர். நான் மட்டும 'சொற்பொழிவாளன்' எனப் பெயர் பூண்டேனு யினும் என் சொற்பொழிவை நிகழ்த்திய பிறகும் பேசும் படக்காட்சியையும் பொதுமக்கட்குக் காட்டி முடிந்த பிறகுதான் அவ் வூரைவிட்டு வெளியேற வேண்டும் ஆகையால் பெருவாரியாகக் குழுமியிருந்த மக்களிடையே தற்காலம் நடக்கும் போரின் நிலையைப் பற்றியும், "குடும்பச் சிக்கனம்" முதலிய பிற செய்திகளைப் பற்றியும் படம் மூலம் காட்டினேம்.

படக்காட்சியும் முடிந்தது. கூட்டம் கலைந்துகொண்டிருந்தது. இரவு 11 மணி இருக்கும். படக் காட்சிக் கருவிகளையெல்லாம் உதவியாளர் அடுக்கிக்கொண்டிருந்தனர். அன்றிரவு ஒரு நண்பர் மாடிவீட்டிற்குச் சென்று உண்டு உறங்குவது என ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. போகக்கூடிய வீடு மாடியுள்ளதாயிற்றே, மாடியில் நாம் போய்த் தங்கின் அங்கு என்ன தகுதிகள் இருக்குமோ, என்ன இல்லையோ! என்று எண்ணி, 'இங்கேயே சிறு நீர் கழித்துச் செல்வோம் என்று, இயக்கி நின்ற வெளியின் பின்புறமாகச் சென்றேன். ஒரே இருட்டாயிருந்தது. ஆனல் பலர் இயக்கி யருகிலுள்ள ஒரு விளக்கண்டையில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தமையால் கொஞ்சம் அப்பால் போய் வருவோம் என்று எண்ணி,

---

* Propaganda Van.

காற்சட்டை, அடியணி* முதலியன அணிந்த வண்ணம் சில அடித் தொலைவு சென்று சற்று நின்று திரும்பிப் பார்த்தேன். கூட்டத்துக்கு இவ்வளவு அண்மையில் உட்காரக் கூடாது, இன்னும் சற்றுத் தொலைவு சென்று வருவோம் என்று மேலும் செல்லலானேன். இப்படியாகச் சில அடிகள் மேலெடுத்து வைத்துச் செல்ல இருட்டில் திடீரென்று ஒரு பெரும் படுகுழியில் வீழ்ந்து விட்டேன். என் உடலின் முழுச் சுமையையும் வீழ்ந்த விரைவோடு அடிமூடி †அணிந்த வலக்காலே தாங்கினமையின், அடியணி உட்புறம் புரண்டு கொண்டு தாங்கமுடியாத வலியை உண்டுபண்ணிற்று. நான் பெருங் குழியில் வீழ்ந்தபோதிலும் இடரொலி ஒன்றும் எழுப்பாததாலும், இருட்டில் விழுந்ததாலும், நான் அப்பக்கம் வந்ததை ஒருவரும் சரியாய்ப் பார்க்கவில்லை யாதலாலும் என் படுவீழ்ச்சியை யாரும் தெரிந்துகொண்டு ஓடி வரவில்லை. என்னுடைய வலக்கால் அப்படியே உட்பக்கம் வளைந்து போயிற்று என்றே எண்ணினேன். அவ்விருள் நிறைந்த படுகுழியில் மெதுவாக உருண்டு புரண்டு எழுந்து நிற்க முயன்றேன். ஆனல் என் வலக்கால் இடந்தரவில்லை. குனிந்து மெதுவாக உள் வளைவு வளைந்திருந்த தோல்மூடியிட்டகாலை இரு கைகளாலும் இறுகப்பற்றி நேரில் நிமிர்த்து என் முழு உடற்சுமையையும் அதன்மேல் இருத்திப் பார்த்துவிட்டு, சரி எப்படியாவது இனிக் கரையேற வழி தேடுவோம் என்று எண்ணினேன். ஆனல் ஒருவரையும் உதவிக்குக் கூப்பிடாமலே மேலேற முயல்வோம் என்று மெதுவாகக் கையை உயர்த்தித் தடவிப் பார்த்தேன். என் தலைமட்டத்திற்குச் சற்று உயர்வில் ஒத்த தரை இருப்பதாகத் தெரிந்தது. அப்பகுதியைப் பற்றிச் சருக்கியும் சாய்ந்தும் புரண்டும் மேலேறிவிட்டேன். ஏறி நொண்டி, நொண்டிக் கொண்டு வெளிச்சமுள்ள ஒரு மூலையில் விசிப் பலகை யொன்றின் மேல் வந்து அமர்ந்தேன். அப்பொழுதும் நான் இன்னநிலையில் வந்து உட்கார்ந்தேன் என்பதை யாரும் உணரவில்லை. இருட் பகுதியில் நொண்டி

*† Boots.

வந்த நான் சிறு வெளிச்சமுள்ள பகுதி வந்ததும் அங்கே இடப்பட்டிருந்த ஒரு பலகையில் அமர்ந்துகொண்டதே இதற்குக் காரணமாக இருக்கவேண்டும். எனக்கோ கால் வலி பொறுக்க முடியவில்லை. காலைக் குனிந்து பார்த்தேன். கணுக்கால் விருவிருவென வீங்கியது தெரிய வந்தது. குளிர்காற்று விரைவாக அடித்துக்கொண்டிருந்ததாலும், நரம்புகள் திடீரெனத் தாக்கப்பெற்றிருந்ததாலும் உடலில் ஒரு பெரு நடுக்கம் ஏற்பட்டது. இந்நடுக்கத்தை எவ்வளவு அடக்கிப் பார்த்தும் அடக்க முடியவில்லை. என் உதவியாளர் ஒருவரை அழைத்து 'ஐயா! போய் விரைவில் தண்ணீர் கொண்டு வாரும்; கை கழுவ வேண்டும்,' என்றேன். அவர் ஓடிவந்து 'என்ன காலைப் பிடித்துக் கொண்டு முனவுகிறீர்கள்,' என்று கேட்டார். 'பள்ளத்தில் வீழ்ந்துவிட்டேன். கால் பிசகிப் போயிற்று. ஆனால் விரைவில் தண்ணீர் கொண்டு வாருங்கள், என் கையைக் கழுவவேண்டும். எதன் மேலோ கையை வைத்து விட்டேன். கெட்ட நாற்றம் பொறுக்க முடியவில்லை,' என்றேன். இதற்குள் பலர் வந்து கூடினர். ஊர்த்தலைவர், கணக்குப்பிள்ளை, இயக்கியோட்டி முதலியோரும் ஓடிவந்தனர். தண்ணீர் வந்தது. தண்ணீரைக் கண்டதும் கடவுளைக் கண்டதாகவே உணர்ச்சி பெற்றேன்! நரக உலகினின்றும் கடைத்தேற முதலுதவி செய்யும் அத்தூய நீரின் பெருமையை என்னென்று சொல்வேன். அதன் உதவி கொண்டு தூயனானேன். ஆனால் துடிப்பும் கடுப்பும் நின்றபாடில்லை. நாட்டு மருத்துவர் ஒருவர் பூச்சுமருந்து எடுத்துவந்து என் காலைக் கூர்ந்து நோக்கினார். 'சரியான அடி பட்டிருக்கிறது. செந்நீர் கட்டியிருக்கிறது. நீங்கள் உடனே சேலம் சென்று தகுந்த மருத்துவரைக் கொண்டு பார்க்க வேண்டும். காலம் தாழ்த்தல் கூடாது!' என்று சொல்லி, வீங்கின இடங்களில் பூச்சுமருந்து போட்டுக்கொண்டிருந்தார். அதற்குள் என் இயக்கியோட்டி வந்து 'சுளுக்கு விழுந்திருக்கும் அப்புறம் போங்கள்,' என்று நாட்டு மருத்துவரை அப்புறப்படுத்திவிட்டு, என் காலை நேரில் நீட்டச்சொல்லி, அதைக்

குலுக்கி இழுத்து, ஒவ்வொரு கால்விரலையும் சுளுக்கை எடுக்கச் சொடுக்கு முறித்தார். அது முரட்டுத்தனமான முறையில் செய்யப்பட்டதாக எனக்குத் தோன்றினும் சொடுக்கும்பொழுது வலியை யுண்டுபண்ணிய போதிலும், சொடுக்கு எடுத்த பிறகு சற்று உணர்வாயிருப்பதாகவே தெரிந்தது. ஆனாலும், அவ்வுணர்வு நீடித்திருக்கவில்லை. உடல் நடுக்கமும், கால் வீக்கமும் வலியும் பெருகி வந்தன. மெதுவாக உந்தியுந்திச் சென்று இயக்கியில் ஏறி உள்ளே மெத்தை தைத்துப் படுக்கைக் கேதுவாயுள்ள பகுதியில் படுத்துக்கொண்டேன். ஒவ்வொருவராக உள் வந்து இப்படிச் செய்யலாம், அப்படிச் செய்யலாம் என்று கூறிய வண்ணமிருந்தனர். ஒருவர் ஒருவகைத் தைலம் கொண்டு வந்து போட்டார். மற்றொருவர் ஒணான் கொடி இலைகளைக் கொணர்ந்து கொதிக்கும் வெந்நீரில் அவற்றைப் போட்டு, ஒவ்வொன்றாகச் சுடச்சுட எடுத்து என் காலில் வைத்துக் கட்டிவிட்டார்.

இன்றிரவே சென்று சேலம் மருத்துவர் ஒருவரிடம் காட்டின் நலம் என்று முடிவு கட்டிய நான் எல்லோரையும் விரைவில் உண்ணச் சொல்லி, நானும் கொஞ்சம் அங்குள்ளவர்களின் விடாப்பிடியால் இயக்கியில் இருந்தபடியே உண்டு, அவ்வூர்த்தலைவரையும் கணக்குப்பிள்ளையையும் உடன் அழைத்துக் கொண்டு இயக்கியைச் சேலம் நோக்கிச் செலுத்தச் சொன்னேன். அவ்விருவரும் ஒருமைலுக்குள் அவர்கள் குடியிருக்கும் ஊரருகே இறங்கவேண்டியவர்கள். இப்படி நாங்கள் விரைவாக வரும்பொழுது திடீரென்று இயக்கி நின்றது. உள்ளே படுத்திருந்த நான் 'என்ன செய்தி? ஏன் வண்டி நின்றது?' என்று உசாவிக்கொண்டே மெல்ல வந்துவெளியில் எட்டிப்பார்த்தேன். ஒரே கூச்சலாகக் கிடந்தது. அதட்டலும் உருட்டலுமாக இருந்தது. கணக்குப்பிள்ளையும் ஊர்த்தலைவரும் வண்டி நின்றதுமே இறங்கிச் சென்றனர். கணக்குப்பிள்ளையும் படங்காட்டுவோரும் முன் சென்று இரு நாட்டுப்புறத்தார்களை உரத்த குரலில் உசாவிக் கொண்

டிருந்தனர். எதிரே ஒரு குறுகிய பாலம் ஒன்று இருந்தது. அதன் வழியே சாலேயும் செல்கிறது. வண்டிகளும் செல்லவேண்டும். அந்தக் குறுகிய பாலத்தின் குறுக்கே ஒரு கட்டைவண்டி இரு பக்கத்துச் சக்கரங்களும் இன்றிக் கிடத்தப்பட்டிருந்தது. ஆகையால் எங்கள் இயக்கி செல்ல வழியின்றி நின்றுவிட்டது என்று உணர்ந்தேன். முதலில் யாரேனும் வழிப்பறிகள் வரும் வண்டிகளைத் தடைசெய்து கொள்ளையிட இச்சூழ்ச்சி செய்திருப்பார்களோ என்று நினைத்தேன். அதற்குள் அத்தடையை நீக்கச் சென்றவர்களின் உரத்த உரையாடலில் இருந்து அது திருடர்கள் சூறையாடச் செய்த தடையன்று என்று தெரியவந்தது. கணக்குப் பிள்ளை "உன்னை யாரடா இங்குத் தடை போடச் சென்னது. நான்தான் சற்று முன்பு இவ்வழியே உண்ணப் போய் வரும்பொழுது இங்குத் தடை போடாதே,' என்று சொல்லிப் போனேனே. ஏண்டா முட்டாள் பயலே இம்மாதிரி செய்தாய்?" என்று சினந்து கூறினர். அதற்குள் படம் காட்டுபவர் குறுக்கிட்டு, 'ஏண்டா! உன்னை இங்கு யாரடா வண்டியைப்போட்டுத் தடைசெய்யச் சொன்னது!' என்று உரத்த குரலில் அதட்டிக் கேட்டார். அதற்கு அங்கிருந்த இருவர்களில் ஒரு வண்டிக்காரன்......'யூர் ஊர்த்தலைவர்தான் போடச்சொன்ணுருங்க!' என்று கூறினன். இது என் காதிலும் விழுந்தது. இந்த விடை வந்ததும், அதுவரை மெல்லத் தயங்கித் தயங்கி எங்கள் இயக்கியை விட்டிறங்கிச் சென்றுகொண்டிருந்த......யூர்த்தலைவர், தன் பெயரை அக்காட்டாள் இழுத்துச் சந்தியில் விடக்கண்டு 'ஏண்டா! ஏண்டா!' என்று சொல்லி விரைந்தோடி, 'யாரடா உன்னை இங்குப் போடச் சொன்னது, ஏண்டா மடப்பயலே!' என்று கையையோங்கி அவனை அடிப்பவர்போல், வேறு ஒரு பக்கத்தூரின் பெயரைச்சொல்லி, 'ஏண்டா அந்த ஊர்த்தலைவரா உன்னை இங்குப் போடச்சொன்னது! ஏண்டா முட்டாள் பயலே, யார் சொன்னலும் என் எல்லைப் பக்கத்தில் என் உத்தரவில்லாமல் இங்குத் தடையொன்றும் போடக்கூடாது என்று உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்

அறிவில்லை யுனக்கு,' என்று கத்திக்கொண்டே அவனைக் கையை யோங்கியவண்ணம் துரத்திச் சென்றார். ஏதோ அவர்களுக்குள் முணுமுணுத்த ஒலி கேட்டது. இன்னது பேசினார்கள் என்பது வண்டியில் முற்பகுதியில் இருந்த எனக்குத் தெளிவாகக் காதில் விழவில்லை. முணுமுணுப்புக்குப் பிறகு ஊர்த்தலைவர் சற்று என்பக்கம் நோக்கி முன்வந்து, 'பாருங்கள், இது என்ன அடாத செயலாக விருக்கிறது. பொதுச்சாலையை இம்மாதிரி நினைத்தவர்கள் அடைக்கிறார்கள். இது என் எல்லைப்புறம். நான் இதைப் பற்றி மேலே தெரிவித்து உங்களையும் சாட்சிபோட்டு அந்த ஊர்த்தலைவர்மேல் வழக்குத் தொடுக்கிறேன்,' என்று படபடத்துக் கூறினார்.

திருடர்கள் மறிப்பு என்று முதலில் எண்ணிய நான், அதுவல்ல என்று தெளிந்ததும், என் இரக்க நிலையையும் தீவினையின் பயனையும் நினைந்து, 'இடையூறுமேல் இடையூறாக வருகின்றதே' விரைவில் சேலம் சென்று காலுக்கு மருந்து போட்டுக்கொள்ளலாம் என்று நினைத்து நள்ளிரவில் புறப்பட்டு வந்தும் இடையில் இப்படித் தடையேற்படுகிறதே, 'பட்டகாலிலே படும்; கெட்ட குடியே கெடும்,' — 'இடையூறுகள் தனிமையில் வரா,' என்றெல்லாம் பழமொழிகள் கேட்டிருக்கிறோமே. அவற்றிற்கிணங்க இத்தடை யேற்பட்டுள்ளதுபோலும், என்றெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டிருந்த எனக்கு, என்னுடன் வந்த அவ்வூர்த் தலைவரின் கூச்சலும், உறுதிமொழிகளும் ஈயத்தைக் காய்ச்சி இரு காதுகளிலும் ஒருங்கே யூற்றினாற்போலிருந்தது. எப்படியாவது விரைவில் தடைநீக்கிச் செல்லவேண்டும் என்ற ஒரேயெண்ணம் தான் என் மனத்தில் முந்திநின்றது. அவ்வமயம் இவர் 'உங்களைச் சாட்சிபோட்டு நாளைக்கே வழக்குத் தொடுக்கிறேன்' என்று சொல்லியது 'நரகவலியை' மீண்டும் நினைவூட்டி, கிணறு வெட்டப் பைசாசு கிளம்பினாற்போல, இது ஏதடா இடிமேல் இடி; இந்த நோவும் நொண்டிக்காலோடு நீதிமன்றத்துக்கு வேறு போய் நிற்கவேண்டுமா? எத்தனை நாட்களுக்குச் சென்றுவருவது? எப்படிப் போய்வருவது?

என்ற எண்ணங்கள் எல்லாம் தோன்றின. இதற்குள் என் கால் விண் விண் என்று தெறிக்கத் தொடங்கியது. நான் சினங்கொண்டு, 'மற்றவெல்லாம் பிறகு பார்த்துக்கொள்ள லாம். அந்தத் தடைவண்டியை அப்புறப்படுத்துங்கள். இயக்கி செல்லட்டும்,' என்று உரத்த குரலில் கட்டளை இட்டேன். பிறகு அவ்வண்டியின் சக்கரத்தை மாட்டிப் பக்கத்து ஒருமர வேரில் கட்டப்பட்டிருந்த மாடுகளைப் பூட்டி வழியைவிட்டு பக்கத்தில் ஓட்டினார்கள். இடையூறு நீங்கவே ஊர்த்தலைவர், கணக்குப்பிள்ளை முதலியவரிடம் விடைபெற்றுக்கொண்டு இயக்கியைச் செலுத்தி சேலம் நோக்கிச் சென்றோம். வரும்பொழுது படங்காட்டுபவர் 'இந்த இடைமறிப்பு நம்முடன் வந்த ஊர்த்தலைவரால்தான் ஏற்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. நான் முதலில் அவ்வண்டிக்காரனை அதட்டிக் கேட்டபோது 'இந்த ஊர்த் தலைவர்தான் குறுக்கே வண்டிபோடச் சொன்னார்,' என்று சொல்லிவிட்டான். கணக்குப்பிள்ளையையும் தனியில் கேட்டுப் பார்த்ததில் இன்று ஏதோ பக்கத்துக் கூற்றத் துக்குத் திருட்டுத்தனமாகத் 'தவசம்' கொண்டுவருவதற்கு ஒருசுமை இயக்கிசென்றிருப்பதாகத் தெரிந்து இம்மாதிரி தடைபோட்டுத் தடுக்கச் சொன்னவர் நம்முடன் இயக்கி யில் வந்த............யூர்த்தலைவராகத்தானிருக்க வேண்டு மென்றும், அம்மாதிரி தடைசெய்து கையுறை பெறுவது அவர் வழக்கமென்றும் அவர் மூலம்தான் தெரிந்துகொண் டேன்,' என்று என்னிடம் தெரிவித்தார். அவ்வூர்த் தலைவரே இம்மாதிரி தடை ஏற்படுத்தி வைத்துவிட்டு, நாங்கள் அன்றிரவே அவ்வழியே திடுமெனச் சேலம் திரும் புவோமென்று சற்றும் எதிர்பாராதிருந்தவர், பிறகு அவ ரும் எங்கள் இயக்கியுடனேயே புறப்பட்டு வரும்படி நேர்ந்ததையும், அங்கே குறுக்கிட்ட வண்டியாள் இவர் இறங்கிப் போவதற்குள் அவர் பெயரை வெளியிட்டு விட்டதையும், அதைக்கேட்டு இவர் பதைபதைத்தோடி அவனை அதட்டி யுருட்டி உண்மையை மறைக்க முயன் றதையும் எண்ணி யெண்ணிச் சிரித்துப் பேசிக்கொண்டு வந்தோம். அந்த உரையாடலினால் என் கால்வலி சற்றுக் குறைந்ததுபோற் றோன்றிற்று.

பிறகு இரவு ஒரு மணிக்கு என் குடும்ப மருத்துவ நண்பர் 'சிங்கு' அவர்கள் வீட்டு வாயிலில் வண்டியை நிறுத்தி, அவரைப் பலதடவைகள் கூப்பிட்டு எழுப்பினோம். அவர் இயக்கிக்குள்ளிருந்த என்னை வந்து பார்த்தார். என் காலில் ஒணுன்கொடி போட்டுக் கட்டப்பட்டிருந்த கட்டை அவிழ்க்கச் சொன்னார். இது யார் கட்டினது? வேறு யார் மருத்துவம் செய்தது? என்ன செய்தார்கள்? என்றும், எப்படி இவ்வீக்கம் ஏற்பட்டதென்றும் கேட்டுத் தெரிந்து, என் காலைத்தொட்டும், பிடித்தும் பார்த்துவிட்டு, முகத்தில் கவலைக்குறி தோன்றியவராய், 'சரி, இன்றிரவு மேலுக்குத் தடவ ஒரு மருந்து எழுதித் தருகிறேன். அதைக் கடையில் பெற்று, காலின்மேல் பஞ்சுபோட்டு, அதன்மேல் நான் எழுதிக்கொடுத்திருக்கும் மருந்தை பஞ்சு காயாமலே இருந்து வரும்படி, ஒரு மணிக்கொருதரம் இரவெல்லாம் ஊற்றிவாருங்கள். காலையில் ஒளிப்படம்* பிடித்துப் பார்த்து ஏதாவது எலும்பு முறிந்திருக்கிறதா அல்லது எலும்பு இடம்மாறி இருக்கிறதா என்று தெரிந்துதான் மேலே மருத்துவம் செய்யவேண்டும். படம்பிடித்து வந்தால் தேவையாகில் 'பாரிசுச்சாந்து†' கொண்டு காலைக் கட்டிப்போடுகிறேன்' என்று சொன்னார். 'இது என்ன ஒளிப்படம் வேறு பிடிக்கவேண்டுமா? உள்ளே எலும்பு முறிந்திருந்தால் என்செய்வது? இவ்வளவு நேரத்துக்குமேல் எங்குச்சென்று மருந்து வாங்குவது' என்ற எண்ணங்களெல்லாம் என் மனத்தெழுந்தன. நான் 'சிங்கு' அவர்களைப் பார்த்து, இந்த 'ஈய மருந்து நீரை'‡ இந்நேரத்தில் எங்கு வாங்கலாம்? கடைகள் அடைத்திருப்பார்களே என்று கவலையுடன் கேட்க, அவர் 'மருந்துக் கடைகள் இரவு முழுவதும் திறந்து வைத்திருக்கவேண்டும். மருந்து வாங்கலாம் போங்கள்,' என்று சொன்னார். இது வரை இச்செய்தி எனக்குத் தெரியாதே என்று நினைத்துக் கொண்டு, மருத்துவரிடம் வணக்கம் கூறி விடைபெற்று மருந்துக்கடையில் மருந்து வாங்கினோம். இரவில் அதிலும்

---

* X-Rays. † Plaster of Paris. ‡ Lead-lotion.

நள்ளிரவில் வாங்கும் மருந்துகளுக்கு இரவுக் கட்டணம் தனியாக எட்டணு வாங்குவதாக சீட்டைப் பார்த்துத் தெரிந்துகொண்டேன்.

மருந்துவாங்கி இயக்கியை நிறுத்தவேண்டிய இடத்தில் நிறுத்திவிட்டு குதிரைவண்டி பிடித்து இரவு ஒரு மணிக்குமேல் வீடுவந்து சேர்ந்தோம்.

விடிந்ததும் பெரிய மருத்துவசாலைக்குச் சென்று ஒளிப்படம் எடுத்துக்கொண்டேன். மறுநாள் வந்து முடிவு தெரிந்துகொள்ளச் சொல்லிவிட்டனர். அடுத்தநாள் சென்றதும், ஒரு உதவி மருத்துவர் என்னிடம் வந்து 'உங்கள் கணுக்காலுச்கு அருகில் ஒரு சிறு எலும்பு முறிந்திருக்கிறது. மூன்று நான்கு வாரங்கள் செல்லலாம் ஆற. பெரிய மருத்துவரைப் போய்ப் பாருங்கள். முடிவு சொல்லுவார்,' என்றனர். 'அவர் என்ன சொல்லப்போகிருரோ' என்று கவன்று அவரிடம் சென்றேன். அவர் என்னைப் பார்த்தவுடன், 'மருத்துவம் செய்து முடிக்க மூன்று வாரங்கள் செல்லலாம். நீங்கள் மருத்துவசாலையிலேயே தங்கியிருந்து பார்த்துக்கொள்கிறீர்களா?' என்று கேட்டார். பெரிய மருத்துவசாலைகளில் இளந்தாதிகளின் கண்காணிப்பும் உதவிகளும் மிகச் சிறந்தனவென்றும், அவர்களின் தூய உடையும், மலர்ந்த முகமும் எழிலும் அன்புமே நோயாளிகளை மகிழச்செய்து நோயை விரைவில் போக்கும் என்றும், இவ்வளவு எளிதில் நம் நோய் நம்மை விட்டு நீங்கியதே என்று ஏங்கியதாகவும்கூட இரண்டொரு இளைஞர் என்னிடம் சொல்லி வாயூறிப் போனார்கள். இதெல்லாம் எனக்கு அவ்வமயம் நினைவுக்கு வந்து மனதை அலைத்தனவாயினும், 'வேண்டாம், நான் என் வீட்டிலிருந்தே வந்துபோய் மருத்துவம் செய்துகொள்ளுகிறேன்,' என்று விடைபகர்ந்தேன்.

அவர் 'அப்படியாயின் சரி. அறுவைச்சாலைக்குச் செல்லுங்கள். இதோ வருகிறேன்,' என்று தெரிவித்தார்.

அப்படியே நான் அங்குச் சென்று காத்திருந்தேன். 'ஏன் நம்மை இங்குவரச் சொன்னர். காலில் அறுவை யிட்டுப் பார்த்து எலும்பைப் பொருத்தவோ, ஒடிந்த எலும்புத்துண்டை வெளியெடுக்கவோ நேரிடுமோ, என் றெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டு என் கவலையை வெளிக் காட்டாது என்னுடன் வந்திருந்த என் சிறு மகன் இராம கிருட்டினனுடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது பெரிய மருத்துவர் அங்கு வந்து, உதவி மருத்துவர் ஒரு வரைக் கூப்பிட்டு, அவர் காலுக்குப் 'பாரிசுச் சாந்திட்டு அனுப்புங்கள்,' என்றார். 'சரி அறுவையில்லை,' என்று மகிழ்ந்து எழுந்து சென்று உதவி மருத்துவரைக்கொண்டு பாரிசுச் சாந்தைக் கட்டிக்கொண்டேன். மூன்று அல்லது நான்கு வாரங்கள் கழித்து மீண்டும் கொண்டு வந்து காட்டுங்கள். நடக்கக்கூடாது. 'இந்தச் சாந்துப் பூச்சு உதிராமலும், கட்டு அவிழாமலும் பார்த்துக்கொள் ளுங்கள்,' என்று சொல்லி என்னை வீட்டுக்கனுப்பி விட்டார். மெதுவாக வண்டி ஒன்றில் ஏறி வீடுவந்து சேர்ந்தேன்.

பிறகு என் ஊன வாழ்வைத் தொடங்கினேன். தலை நகரில் இருக்கும் நாட்களில், காலை மாலை சற்றுத் தொலைவில் உள்ள ஏரிக்குச் சென்று கருவைத் தோப்பில் பல் குச்சிகள் வெட்டுவதும், அங்கு மேயும் ஆடு மாடுகளையும் இடையர் களையும் கூட்டம் கூட்டமாகவும் தனித்தும் பறந்து செல்லும் புள்ளினங்களையும், தொலைவில் மலையைத் தழுவிநிற்கும் முகில் கூட்டங்களையும், ஒளி வீசி எழும் பகலவனையும், அவன் மறையும்எழிலையும் பார்த்துப் பார்த்து மனம் பூரித்து வரும் வழக்கம் கொண்ட எனக்கு, காலில் ஒரு வெண்மண் கூட்டை, பெருவிலங்கு போல் ஒற்றைக்காலில் மாட்டி வீட்டுக்குள்ளேயே இருத்தி வீட்டுக்குள்ளும் வலக்கால் கீழே படியாமல் நடக்க விட்டு வைத்தது பெரும் தொல்லையாய் இருந்தது. நான் பல திங்களுக்கு முன் வாங்கிவைத்திருந்த இரு அழுத்த மான மூங்கில் கைத்தடிகளின் இணையற்ற பலன் இப்

பொழுதுதான் தெரியவந்தது. அவற்றின் உதவி கொண்டே நான் வீட்டுக்குள் நடக்கத் தலைப்பட்டேன். கழியூன்றி நடப்பவர்களையும், கழியைத் தாங்கிச்செல்லும் முதியோரையும்பற்றிச் சிந்திக்கலானேன். வீட்டு வாயிலில் யாரேனும் கழியூன்றியோ அல்லது முடமாகவோ பிச்சைக்கு வருவராயின் உடனே அவர்களிடம் எனக்கு இரக்கம் உண்டாகத் தொடங்கி, 'அரிசி போடுங்கள், சோறிடுங்கள், காக்க வைக்காதீர்கள்,' என்று சொல்லி என் நிலையையும் ஒப்பிட்டுக் கண்கலங்குவேன்.

---

18. எண்ண அலைகள்

பலபடியாக எண்ணங்கள் வந்து என்னைச் சூழ்ந்த வண்ணமிருந்தன. என் இருக்கையை என்னிடம் உள்ள சிறு நூல் நிலையத்தருகே அமைத்துக்கொண்டேன். அதிலுள்ள நூல்கள் புதிய பொருளை எனக்குத் தெரிவிப்பன போல் தோன்றின. ஒவ்வொரு நூலாக எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். அப்படி நான் படிக்கத் தொடங்கிய நூல்கள் சிறப்பாகத் தமிழ்நூல்களே. அவற்றைப் படிக்கப்படிக்க வேறொரு நினைவு எனக்குண்டாயிற்று.

நாம் நாட்டுப் *போர்முனையில் சொற்பொழிவாளனாக† இருந்து வருகிறோம். நாம் இருப்பதும் 'போர்முனை' என்ற பெயரையும் 'போர் அலுவல்' என்ற உயர்நிலையும் கொண்ட வேலை தானே. நாட்டைக் காக்கச் சென்று எத்துணை மக்கள் தங்கள் உயிரையிழந்தும், கால்களையோ, கைகளையோ, கண்களையோ, பிற உறுப்புக்களையோ இழந்தும் காயம் பட்டும் வருகின்றனர். நாமும் ஒருவகைப் போர்முனையில் வேலை செய்து வருவதால் யாதானும் ஒரு காயமோ ஊனமோ பெறுவது இயல்புதானே. போருக்குச் சென்று வடுப்பெற்ற வீரர்களைத் தமிழ் உலகு போற்றுவது வழக்கமன்றோ? நான் மாறாத ஊனம் அடையினும் என்? அதுவும் நமக்கு ஒரு பெருமையைத் தானே கொடுக்கும் என்றெல்லாம் எண்ணமிட்டேன்!

இவ்வெண்ணம் செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவிய ஃகென்றி டுனண்ட்‡ என்பாரின் பெருமையையும், அவருக்கே வழிகாட்டியாயிருந்து மருத்துவத் தாதிமாரை§ முதன்முதலாக உலகுக்கு அமைத்துத் தந்த ¶ப்ளாரென்சு நைட்டிங்கேல் அம்மையாரின் பெருமையையும் பற்றிச் சிந்தித்து மகிழ்ந்து மனமுருகினேன். நாகரிக உயிர்க் கொல்லிகளும் உடற் கீறிகளும் சிதைத்தெறியும் போர்வீரர்களைப் போர்முனையினின்றும் விரைவில் எடுத்துவந்து மருத்துவம் செய்ய மருத்துவ இயக்கி$

---

* National War Front. † Lecturer. ‡ Henry Dunant.
§ Nurses ¶ Florence Nightingale. $ Ambulance cars.

களும், மருத்துவ வானூர்தி*களும் அமைத்து ஏராளமான தாதியரைக் கொண்டும் மருத்துவர்களைக் கொண்டும் உதவி செய்யும் இச் சங்கம் இத்தோடு நில்லாமல், சண்டையில் காணுமற்போன வீரர்களைக் கண்டுபிடிப்பதும், சிறைபிடிக்கப்பட்ட வீரர்கள இருப்பிடம் சென்று அவர்களின் தேவைகளையும் வாய்ப்புக்களையும் கண்காணித்து வருவதும், அவர்களுக்கு வாராவாரம் தின்பண்டங்களும் துணிமணிகளும் அனுப்புவதும், அவர்களின் உறவினரிடமிருந்து முடங்கல்கள் தருவித்துக் கொடுப்பதும், போர்வீரர்களின் குடும்பங்களைப் பாதுகாப்பதும், இப்படிப்பட்ட அளவிலாப் பிற உதவிகளையும் செய்துவரும் இச் சங்கத்துக்கு உலகப் பொதுமக்களின் உதவி எவ்வளவு இன்றியமையாதது என்றும் எண்ணுற்றேன். தாதிமார்களைப் பயிற்றுவித்து, முதலுதவியாளரையும், இடம் மாற உதவிபுரியும் படையினரையும் தயார்செய்து முக்கியமாகச் சண்டையின்போது செஞ்சிலுவைச் சங்கத்துக்குத் துணைநின்று தொண்டாற்றும் 'செயின்ட் ஜான் ஆம்புலன்சு' சங்கத்தைப்பற்றியும் நினையாதிருக்க முடியவில்லை.

என் காலில் போடப்பட்ட பாரிசுச் சாந்தைப் பார்க்கும்பொழுதெல்லாம் எனக்கு ஓர் எண்ணம் எழுந்தது. பாரிசை நோக்கி இரண்டாம் போர் முனையாளர் நார்மண்டியில் இறங்கிச் செல்லுகிறுர்கள். இன்னும் செர்மானியரால் அடிமையாக்கப்பட்ட பாரிசை யடையவில்லை. அவர்களுக்குமுன் வீரமுழக்கம் செய்து அப் பாரிசை யடைந்து வெற்றிபெற்று அதற்கடையாளமாக வீரக்கழல்போன்று ஒரு சின்னத்தையும் நம் வலக்காலில் அணிந்துகொண்டு விட்டோமே என்ற எண்ணம் எழுந்தது. என்னே என் காலின் விரைவு! இரண்டாம் படையினரைக் காட்டிலும் அல்லவா விரைந்துசென்று இக் கால் பாரிசைப் பிடித்து விட்டது!—பாரிசுச் சாந்தைப்பற்றி நிற்கிறது—வெற்றிகொண்டோம் என்ற பெருமிதம் கொள்கிறது—வரப்

* Ambulance Planes.

போகும் பெரு வெற்றிக்கு இது அறிகுறி போலும் என்று எண்ணி மகிழ்ந்தேன்.

வீட்டுக்குள் ஈரத்தில் நடக்கப் பாரிசுச் சாந்துப் பூச்சுக்குமேல் வேறு அடியணி வேண்டியிருந்தது. என்ன செய்வது என்று சிந்தித்துக்கொண்டிருந்தேன். செருப்பு ஒன்று வீட்டில் போட்டு நடக்கலாமா என்றால், சாந்துப் பூச்சுக் காலை—யானைக் காலைப்போல—ஐராவதம் என்ற வெள்ளையானைக் காலைப்போல் பருத்துள்ளகாலை—எந்தச் செருப்பில் நுழைப்பினும் கொள்ளவில்லை! ஒரு காலுக்குச் சில வாரங்களுக்காக இந்தத் தோல் அருந்தலான காலத்தில் தனிச்செருப்பு செய்து போடுவதா, என்று ஏங்கினேன்.

தாய்மடியிலிருந்து கொஞ்சிப் பால்குடிக்கும் குழந்தையின் முழு உரிமையும் பூரிப்பும் இல்லாது, அறையில் அடைபட்டு, கால் கட்டுண்டு, பெட்டிப் பால் ஊட்டப் படும் குழவிபோல், கண்ணாடியால் அடைக்கப்பட்ட ஒரே பலகணி வழியே இயற்கையன்னையைப் பார்க்க முயன்றேன். கொல்லைப்புறத்தில் ஒரு தனிப் பனை என் கண்ணுக்குத் தென்பட்டது. அதன் சிகரம் கண்ணாடி வழியே நன்றாகத் தெரிந்தது. அதைப் பார்த்ததும் எனக்கு ஒரு பழங்கதை நினைவுக்கு வந்தது:—

மூன்று திருடர்கள் ஒரு குறிகாரன்* வீட்டுக்குத் திருடச்சென்றனர். ஒருவன் கன்னம் வைத்துக்கொண்டிருந்தான். இரண்டாமவன் பக்கத்தில் துணை நின்றான். மூன்றாமவன் சுற்றுமுற்றும் இமைகொட்டாது விழிப்பாயிருந்து யாரேனும் வருகிறார்களா என்று பார்த்த வண்ணமிருந்தான். முற்றத்து ஓரத் தாழ்வாரத்தில் படுத்திருந்த குறியாளனை அவன் மனைவி தட்டி யெழுப்பி 'வீடு கன்னம் வைக்கப்படுகிறது! என்ன செய்வது?' என்று பதறினாள். குறியாளன் விளக்கை ஏற்றச் சொல்லி எழுந்து படுக்கையிலமர்ந்தபடியே விளக்கொளியில் சுற்றுமுற்றும் நோக்கினான். வளை தோண்டிக்கொண்டிருந்த எலி ஒன்றைப்

* கோள்நூலான், காலக்கணிதன், குறிசொல்வோன்.

பார்த்தான். உடனே 'எலி வளைதோண்டக் கண்டேன்!' என்று உரத்த குரலில் கூறினான். உடனே 'ஐயோ! நான் கன்னம் வைப்பதையல்லவோ குறியாளன் தெரிந்து கொண்டு பாடுகிறான், என் செய்வது? சற்றுக் கூர்ந்து கேட்போம்' என்று கன்னமிடுவதை நிறுத்திச் செவி மடுத்து நின்றான்.

'என்ன இப்படிப் பாராமுகமாகப் பாடிக்கொண்டிருக்கிறீர்களே! உள்ளே வந்து விட்டால் என்ன செய்வது?' என்று பரபரத்தாள் அவன் மனைவி. படுக்கையில் அமர்ந்தபடியே முற்றவெளி வழியாகவும் கூரைக்கு மேலும் நோக்கினான். கொல்லைப்புறத்தில் இருந்த ஒற்றைப் பனைமரம்தான் அவனுக்குத் தென்பட்டது. உடனே 'ஒற்றைப் பனைமரம் நிற்கக் கண்டேன்,' என்று இரண்டாம் அடியாகத் தான் கண்ட காட்சியை விளக்கினான். 'ஐயோ, தடியன்போல் உனக்குத் துணைசெய்ய நிற்கும் என்னையும் அவன் கண்டுகொண்டல்லவா இப்படிப் பாடுகிறான், என் செய்வது. இன்று நமக்குக் கேடுதான்,' என்று நடுங்கி நின்றான் இரண்டாவது கள்ளன். 'சற்று இரு. மூன்றாமவனைப் பற்றி ஏதேனும் பாடுகிறானா என்று பார்ப்போம். அப்படி அவனைப் பற்றியும் பாடுவானாகில் நம் களவைக் கண்டே இப்படிப் பாடினான் என்று தெளிந்து நாம் ஓட்டம் பிடித்துவிடுவோம்,' என்று கன்னமிட்டு நின்றவன் கூற, அம் மூவரும் துடிதுடித்து அடுத்து என்ன அடி வரப்போகிறது என்று கேட்டு நின்றனர்.

இதற்குள் மனைவி, 'அட இழவே! எப்பொழுது பார்த்தாலும் இந்தப் பாட்டும் குட்டிச் சுவரும்தானா? இருந்தாலும் இம்மாதிரி ஒன்றையும் கருத்துக்கொள்ளாது இருக்கும் வீட்டினரை நான் பார்த்ததில்லை,' என்று முணுமுணுத்தாள்.

அப்பொழுது படுக்கையாளன் இன்னும் கூர்ந்து தனித்து நிற்கும் பனையை நோக்கினான். அதில் ஒரு ஆந்தை உருட்டி விழித்தவண்ணம் உட்கார்ந்திருந்தது.

அதைப் பார்த்ததும் மூன்றும் அடியாக, 'அதிலொரு ஆந்தை விழிக்கக் கண்டேன்,' என்று அவன் பாடினான். பாடினானோ, இல்லையோ, உடனே வெளியிலிருந்த மூன்றும வன், 'என்னையும் கண்டுகொண்டான். நான் பரக்கப்பரக்க அங்கு மிங்கும் பார்த்து நிற்பதைத்தான் இப்படிப் பாடி விட்டான். ஓடு! ஓடு! இனி ஆள் சேர்த்து நம்மைப் பிடிக் கத் தலைப்பட்டு விடுவான். வாருங்கள்! வாருங்கள்,' என்று கூறி. ஓட்டம் பிடிக்கத் தலைப்பட்டான். மற்றிருவரும் அவனைப் பின் தொடர்ந்தோடினர். ஓடின ஓசைகேட்ட பிறகுதான் குறியாளன் விளக்கேந்தி கொல்லைப்புறம் சென்று கதவைத் திறந்து, கன்னமிட்ட பகுதியையும் ஆட்களின் காலடிகளையும் கண்டு, களித்து, 'பார்த்தனையா, என் குறி தவறுமா ? வந்தவர்கள் மூவர். ஒருவன் கன்ன மிட்டான். மற்றொருவன் நின்றான். மூன்றுமவன் ஆள் பார்த்து நின்றான். இதைத் தெரிந்து நான் குறிப் பாகப்பாட அவர்கள் ஓடிவிட்டனர். என் குறிக்குக் குறை சொல்வார் யாவர் ?' என்று பெருமிதத்துடன் கூறினான். அவன் மனைவி உளம் பூரித்து, விடிந்ததும் தன் கணவ னின் கோள்நூல் அறிவைப் பற்றி ஊராருக்குச் சொல்ல, அவனிடம் குறிகேட்க வருவோர் தொகை மிகுதிப் பட்டது!

---

19. மடலேறல்

இக் கதையை நான் நினைவுப்படுத்தி நிற்க, பனைமட்டையின் மேல் ஒரு காகம் வந்து உட்கார்ந்து, 'கா! கா!' எனக் கத்திற்று. "'நான் ஆந்தையல்ல, காகம்', என்று அறிவுறுத்தவா நீ இப்படி உன் தொண்டையைத் திறக்கிறாய்? நீ செருக்குற்று இம்மாதிரியே கத்தி, உன் வாயில் இருந்த வடையை நரிக்குப் பறிகொடுத்தது எனக்குத் தெரியாதா? போதும் போதும் உன் கடுங்குரல் நிறுத்து," என்று என் மனதுக்குள்ளேயே முணுமுணுத்தேன். அப்பொழுது 'சல சல தொப்' பென ஒரு ஒலி பிறந்தது. அது என்னவாக இருக்கலாம் என்று உட்கார்ந்தபடியே சிந்தித்துக்கொண்டிருந்தேன். "'காக்காய் உட்காரப் பனம்பழம் விழ" என்று சொல்வார்களே அதுமாதிரி ஏதேனும் விழுந்து விட்டதா என்ன? அப்படியும் இப்பொழுது பனம்பழக் காலம் இல்லையே. அப்படியேயாயினும் நம் கொல்லைப் புறப்பனை ஆண்பனையாயிற்றே. ஆண்பனைக்குப் பழம் பழுக்கும் இயல்பேது? இவ்வாண்பனையின் குறிக் காயைக் கார்த்திகையின்போது சிறுவர் கார்த்திகைப் பை செய்து தீப்பொறி உகுத்துச் சுற்றுவாரன்றோ? ஆக இப்பொழுது வீழ்ந்ததென்ன?" என்று ஆழ்ந்திருக்க, என் வீட்டிலுள்ள 'அத்தை' கொல்லைக் கதவைத் திறந்து சென்று, எதையோ எடுத்து வந்து முற்றத்தில் 'தொப்' பென்று போட்ட ஒலி கேட்டது. மெல்ல நொண்டி நொண்டி எழுந்து போய்ப் பார்த்தேன். அது காய்ந்து தொங்கிக்கொண்டிருந்த ஒரு பனைமட்டையின் அடிப் பகுதியென உணர்ந்தேன். அதன் அடி இரு பகுதிகளாகப் பிளந்து, அகன்று இருபுறமும் வழுவழுப்பாயிருந்தது. அதைப் பார்த்தவுடன் அவ்விரு பகுதிகளையும் கத்தி கொண்டு அறுவையிட்டுச் செப்பனிட்டு, நம் இரு கால்களுக்கும், சிறப்பாக நம் ஐராவதக் காலுக்கு, பாரிசு வெற்றிச் சின்னம் அணிந்த கழற் காலுக்கு, அடியில் ஒரு நாடாபோட்டுக் கட்டிக்கொண்டால் தண்ணீரிலும் நடக்கலாம். அப்படி நடப்பதால் சாந்து நனைந்து வீண் போகாது

இ. நி.—7

என்று தோன்றிற்று. உடனே அவ்வாறு அடிப்பனை மட்டையைக் கொண்டு ஒரு மிதியடி தயாரித்து வலக்காலில் வைத்துக் கட்டி *'மடலேறலை' மேற்கொண்டேன்! 'ஆ! என்ன எளிமையும் பயனும் உளதாய் இருக்கின்றது. இயற்கை யன்னையின் அருள்தான் என்னே! காகத்தையும் பனையையும் இழித்துக் கூறுகிறார்களே! இது அடுக்குமா! அவை யிரண்டும் எனக்கு மிக இக்கட்டான நிலையில் வந்து உதவினவே! அவற்றின் பெருமைதான் என்னே! அவற்றுக்கு யான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? பொதுவாக மக்கள் உங்கள் இருவரையும் இழிவாகவே நினைக்கிறார்கள் என்று இருவரும் சேர்ந்து நின்று எனக்கு உதவிசெய்து உங்கள் அருமையை உலகறிய யெடுத்துரைக்கச் செய்தீர்கள். வேம்பை நாடிச் சென்றால் என்ன? பிணத்தைக் கோதினால் என்ன? மக்களுட் பலர் முடைநாற்றம் நாறும் முள்ளங்கியைப் பறித்துக் கறி செய்யவில்லையா? செத்த பன்றி, மாடுகளின் சதையை யவித்துத் தின்னவில்லையா? நாகர்கள் மக்களைச் சுட்டுத் தின்னவில்லையா? நீயாயினும் இறந்துபட்ட உடலை அது அழுகி மக்களுக்கு ஊறு செய்யாவண்ணம் தின்றுதவுகிறாய். சில பெரியார்கள் தங்கள் உயிர் நீங்கிய பின் 'உடலைக் காகம் கழுகுகளுக்கு இரையாய்ப் போடுங்கள்,' என்று சொல்லி, தங்கள் உடலையும் பிற உயிர்களுக்குக் கொடுத்து நற்பயன் தேட நீ உதவுகின்றனை. ஆனால் ஈரமின்றி மனிதர் உணவை பறித்துண்ணும் சழக்கர்களாய் இருந்து உலகுக்கு வீண் சுமையாய்த் திரிகின்றனரே சிலர், ஏன் பலர் என்றே சொல்லலாம். அவ்வாறு பெருங்கேடு நீ என்ன செய்துவிட்டனை? உன் இனப்பற்றைப் புகழ ஒருநாப் போதாதே! ஒரு கவளம் சோறு போட்டாலும், கவளத்தில் உள்ள பருக்கைகளின் எண்ணிக்கையுள்ள அவ்வளவு உன்னினத்தாரை எல்லாம் கூவி அழைத்துப் பகிர்ந்துண்டு மகிழ்கிறாயே! உன் இன

*மடலேறல் என்பது அகப்பொருட்டுறையில் ஒன்று. தான் காதலித்த தலைவியை யடைதல் வேண்டிப் பனை மடலா லான குதிரையைத் தலைவன் ஏறி ஊர்தல்

உயிர் ஒன்று வலிப்புற்றுக் கீழ் விழின் நீங்கள் எத்தனை பேர் கூடிக் கூவி அதை ஒருவரும் நெருங்கவொட்டாது பாதுகாக்கின்றீர்கள்! மக்களுள் அவ்வாறு பற்றைக் காணேமே! பக்கத்து வீட்டில் ஒருவருக்கு இடர்வந்துவிட்டதென்றால் அண்டை வீட்டான் இரட்டைத் தாழிட்டு உள்ளோடிப் படுத்துக்கொள்கிறனே! அப்படியிருக்க உன்னைக் குறைகூற மக்களுக்கு—மாக்களுக்கு—என்ன உரிமை இருக்கிறது?

"உன்னைத் தாங்கி நிற்கும் பனையைப் பற்றியும் மக்கள் சரிவர உணர்ந்தார்களில்லை," யென்றுதான் நான் சொல்லுவேன்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு."

என்ற பொய்யா மொழிக் குறளுக்கு, ததீசி முனிவர் தம் முதுகெலும்பையும் கொடுத்துதவியதாகக் கதைகட்டி உலகறியக் கூறுகிறார்களே! என் கண்ணெதிரே நின்று என் தேவையறிந்து காலம் நோக்கி, ஊனமாயுள்ள எனக்கு உன் உடலின் ஒரு பகுதியைச் சிபியை ஒக்கப் பிய்த்துத் தந்து உதவிய உன்னைத் ததீசியையும் சிபியையும் காட்டிலும் மிகைப்படுத்திக் கூறுது போயின் நான் நன்றி கெட்டவனுவேனன்றே?

"தினைத் துணை நன்றி செயினும் பனைத் துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்"

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

"ஆகையின் ஓ காகமே! ஓ பனையே! என் இச் சிறு நன்றியை ஏற்று என்னை உய்விப்பீர்களாக!" என்று சொல்லி என் நூல் நிலையத்தின் அருகில் சாய்வு நாற்காலியில் படுத்தபடியே என் எண்ண அலைகளுக்கு ஓர் அணை கோலினேன்.

20. முத்தமிழ்நிலையத் தோற்றம்

நாமக்கல் என்னும் ஊரில் நான் ஒருநாள் (15-8-43-ல்) செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது என் நண்பர் அப்துல்காதர் என்பவர் ஓர் இளைஞரை அழைத்துக்கொண்டு உள் நுழைந்தார். அவ்விருவரையும் நான் வரவேற்றேன். என் நண்பருடன் வந்தவர் ஏதோ தனக்குள் தாழ்ந்த குரலில் பாடிக்கொண்டு வந்ததாக எனக்குத் தெரிந்தது. வெற்றிலை அடிக்கடி போடுபவராகக் கண்டேன். 30 அகவை இருக்கலாம். உயரமானவர், மாநிறம், மெலிந்த உடலினர், தன் உடல்நலத்தைப்பற்றியோ, உடையின் செம்மையைப் பற்றியோ அவ்வளவாக அக்கரை கொண்டவராகத் தோன்றவில்லை. மனம் எங்கோ எதையோ எப்பொழுதும் நாடிச் சென்று கொண்டிருப்பதான வெளித் தோற்றம் உடையவர்.

"இவர் தான் போடிநாயகன்பட்டி திரு. மு. செல்லப்ப ரெட்டியார் என்பவர். இசைப்பயிற்சியுடையவர்; தமிழ்த் தொண்டாற்றும் தகவினர்; புதுவைக் கவி பாரதிதாசனுரிடம் மிக்க அன்புகொண்டவர்; தன்மான இயக்கத் தோழர்," என்று சொல்லி அவரை எனக்கு என் நண்பர் அறிமுகப்படுத்தினர். நான் மிக மகிழ்ந்து அவருடன் அளவளாவினேன்.

அவருக்குத் தன்மான இயக்கத்தில் உள்ள அளவிலாப் பற்றை உணர்ந்துகொண்டேன். தன்மான இயக்க முறையில் பல கலப்புத்திருமணங்கள் நடத்திவைக்கத் தாம் காரணமாயிருந்ததாகவும் குறிப்பிட்டார். எப்படி ஒரு பார்ப்பனத் தோழர் கிறித்தவ ஆசிரியை ஒருவரைக் காதலித்தார் என்றும், அப்பெண்ணும் இப்பார்ப்பன ஆசிரியரைக் காதலித்தனர் என்றும், அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புகளும் இடையூறுகளும் பல என்றும், தாம் அப் பெண்ணைத் தம் காவலில் கொணர்ந்துவைத்து, உண்மைக் காதலர் இருவர்க்கும் எப்படித் திருமணம் செய்வித்தார் என்றும் உண்மை உணர்ச்சியுடன் எடுத்துரைத்தார். தாம்

முதல் மனைவியை இழந்துவிட்டதாகவும், மறு மணம் கலப்பு மணமாகவே இருக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டுள்ள தாகவும் தெரிவித்தார். பெரியாரிடம் மட்டற்ற அன்புடையவர் என்றும், பெரியாருடைய நல்லெண்ணத்தைப் பெற்றவரென்றும் தெரியவந்தது.

தாம் ஐந்தாண்டுகள் மலையாள இசையாசிரியர் திரு. சிவசாமி ஐயர் அவர்களிடம் இசைப்பயிற்சி பெற்றதாகத் தெரிவித்தார். தன் இசையாசிரியர் மிகவும் தேர்ச்சி பெற்றவர் என்றும் அவரிடம் இன்னும் சில ஆண்டுகள் தாம் தொடர்ந்து பயின்றிருப்பின் நலமாயிருக்கும் என்றும் சொன்னார்.

சில பாட்டுக்களைப் பாடிக்காட்டுமாறு நான் வேண்ட, பாரதி தாசனார் புத்துணர்வுப் பாடல்கள் சிலவற்றையும், இசையாசிரியர் இலக்குமணப் பிள்ளையவர்களின் பாட்டுக்களில் சிலவற்றையும் உருக்கமாயும் உணர்ச்சி மிகவும் அருமையான குரலில் பாடி மகிழ்வித்தார். அவர் இசைப் பயிற்சியின் உயர்வையும் அவர் இசையிற் கொண்டுள்ள ஆர்வமும் கண்டு மகிழ்ந்தேன். அவர் என்னைப் பார்க்க உள் நுழையும்போதே அவர் ஏதோ இனிய குரலில் தனக்குள்ளே பாடிக்கொண்டு வந்ததன்மையின் பொருளைப் பின் நிகழ்ச்சிகள் தெற்றென விளக்கின.

தாம் புதுவைக்கவி பாரதிதாசனாருடன் சில காலமாக நெருங்கிப் பழகிவர வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும், அக்கவியரசுடன் இருப்பின் காலம் போவதே தெரியாதென்றும், அப்பெரியாருடன் இருக்கும் காலங்களில் இரவில் வெகுநேரம்வரை அவரைத் தூங்கவிடாது ஏதாவது கேள்விகள் கேட்டும், அவர் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க செய்திகளை விளக்கும்படியும் அவர் சுப்பிரமணிய பாரதியாருடன் கொண்ட உறவைப்பற்றி அணு அணுவாகத் தெரிவிக்குமாறும் தூண்டுவது எம் போன்றோரின் வழக்கம் என்றும், புதுவைக்கவி சலிக்காமல் குழந்தையுள்ளத்துடனும் உழுவலன்புடனும் கேட்கக் கேட்க

இனிக்கக்கூடிய நிகழ்ச்சிகளை ஓயாது சொல்லி மகிழ்விப் பார் என்றும் தெரிவித்தார்.

திரு. சுப்பிரமணிய பாரதியார் புதுவை புகுமுன்னரே 'கனகசுப்புரத்தினம்' என்ற பாரதிதாசன் அவர்கள் அரிய கவிகள் பல இயற்றியும் பொது வாழ்வில் மக்களிடையே தம் வீரப்புகழை நிலைநாட்டியும் இருந்ததாகத் தெரிவித் தார். ஒரு அமயம் தம் நண்பர் ஒருவரை அவர் எதிரி களிடம் சிக்காமல் மூன்று ஆண்டுகள் தம் அருமை விருந் தினராகக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தார் என்றும், அம்மூவாண்டுகளில் தம் வாயிற்படியில் சார்த்தி வைக்கப்பட்டிருந்த வீரவாள் ஒன்று இக்காப்புக்குச் சான்று பகன்றதென்றும் தெரிவித்தார்.

'மத குருக்கள்மாரும் கல்வியும்' என்ற மகுடங் கொண்ட நூல் ஒன்றை பாரதிதாசனுர் இயற்றியதன் காரண மாக மத குருக்கள்மாரின் வெஞ்சினத்துக்கு ஆளானதாக வும், அதைப்பற்றிக் கொஞ்சமும் மனந்தளர்ந்தாரில்லை யெனவும் செப்பினுர்.

பாரதிதாசன் அவர்கள் கவி சுப்பிரமணியபாரதி யாரைப்பற்றிக் குறிப்பிடுகையில், பாரதியார் புதுவையில் இருக்கும் காலத்தில் மிக விரிந்த மனப்போக்குடன் இருந்த தாகவும், அவர் அங்கிருக்கும்பொழுது தம் அருமை மகளை ஒரு ஆதிதிராவிடருக்கு மணம்புரிவிக்கவும் தயார் என்றுந் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

புதுவைக் கவியைப்பற்றிக் கூறும்பொழுது, அவர், (பாரதிதாசன்) 52 அகவையுடையவர் என்றும், எழிலும் வீரமும் கொண்ட உருவத்தினர் என்றும், புதுவையிலும் சிறந்த புகழ்பெற்றவர் என்றும் பகன்றுர். அவர் இப் பொழுது புதுவையில் ஒரு உயர்நிலைப்பள்ளியில் தமி ழாசிரியராக வேலைபார்த்து வருவதாகவும் தெரிவித்தார்.

இப்பொழுது ஒரு புது முயற்சியிலே தாமும் சில நண்பர்களும் ஈடுபட்டிருப்பதாயும், அம்முயற்சி கைகூடின்

தமிழ்நாடு சிறப்புறும் என்றும் தெரிவித்தார். அந்நன் முயற்சி யாதெனெ நான் வினவ அவர் கீழ்வருமாறு விடை பகன்றார்.

முத்தமிழைத் தமிழ் நாட்டில் சீரிய முறையில் வளமையுறச் செய்ய முத்தமிழ்நிலையம் ஒன்று செட்டி நாட்டைச் சார்ந்த கானாடு காத்தான் என்னும் ஊரில் நிறுவ முயன்று வருவதாயும், சற்றேறக்குறைய 50 உறுப்பினர் கொண்ட ஒரு நிதியாளர் குழுவை அமைக்கப்போவதாயும், ஒவ்வொரு உறுப்பினரும் 200 ரூபா விழுக்காடு, மொத்தத்தில் 10,000 ரூபா சேர்த்து முதல் வைத்து நிலையப் பணிகளைத் தொடங்கப் போவதாயும், தன்னலமற்ற சீரிய முறையில் தமிழ்ப்பணியாற்றும் தகைமையாளரையே குழுவின் உறுப்பினராகச் சேர்க்கப்போவதாயும் தாமும் அக்குழுவில் இடம்பெறப்போவதாயும் கூறினர்.

முத்தமிழ்நிலைய வாயிலாக, பாரதிதாசனாரின் பழைய நூல்களையும், இனிப் புனையப்போகும் பாட்டு, கதை, நாடகம் முதலியனவற்றையும் கண்கவர் வனப்புவாய்ந்த முறையில் நூல்வடிவில் அவ்வப்போது, அச்சிட்டுத் தமிழுலகில் பரப்பப் போவதாயும் கூறினர். இந்நிலையம் போதிய செல்வத்துடன் சீரிய முறையில் அமையின் பாரதிதாசனார் தமிழாசிரியர் வேலையினின்றும் நீங்கி, முத்தமிழ்நிலையப் பணியில் ஈடுபட்டுத் தமிழ்நாடு எங்கணும் சுற்றத் தயார் என்று சொல்லியுள்ளார் என்றும் தெரிவித்தார். நிலையம் அமைந்து தகுந்த முறையில் நூல்களை வெளியிட் முன்வரின் தாம் தேவையாயின் திங்களுக்கு இரு நூல்களை எழுதியுதவவும் முடியும் என்று வீரவுரை பகன்றார் எனவும் கூறினர்.

முத்தமிழ்நிலையத்தின் மூலம் தமிழ்நூல்கள் வெளியிடுவதோடு தேர்ந்த இசையாசிரியர் ஒருவரைக் கொண்டு எழிலுறு இளநங்கை ஒருத்தியை இசையில் கைதேர்ந்தவளாகச்செய்து தமிழுலகெலாம் இசையமுது பெருக்கெடுத்தோடச் செய்யவேண்டும் என்றும், நடிப்புப் பயிற்சி

யளித்து, நாடகங்கள் பல நடிக்கவும் ஏற்பாடு செய்வது இன்றியமையாதது என்றும் பாரதிதாசனுர் தெரிவித்த தாகச் சொன்னார். இம்முயற்சியின் பயனுகை முத்தமிழ் நிலையம் போதிய நிதி திரட்டவும் அந்நிதியைத் தமிழ்ப் பெருக்குக்கே பயன்படுத்தவும் கூடும் என்றும் கூறினார்.

முத்தமிழ்நிலையத்துக்குத் தகுந்த இசையாசிரியர் ஒருவரை அமைக்க முயற்சி நடப்பதாகவும், இதன் தொடர்பாக மலையாளம் திரு. சிவசாமி ஐயரைப்பற்றி மேலும் கூறுவாராயினர். "அவ்வாசிரியர் தற்பொழுது கோவையிலிருந்து சிலர்க்கு இசைப்பயிற்சியளித்து வருகிறார். அவரிடம் பயின்ற மாணுக்கர் பலர் நல்ல பெயர் பெற்று விளங்குகின்றனர். அவருடைய ஒரே புதல்வி இசையில் கைதேர்ந்தவர். அப்பெண்மணி வீணை வாசிப்ப தில் இணையற்று விளங்குகிறார். அவ்விசைச்செல்வி திரை நடிப்பு நடிக்க உட்படின் 10,000 வெண்பெருங்காசுகள் வழங்குவதாகச் சில திரைப்பட முதலாளிகள் கேட்டு வருகின்றனர். ஆனல், அப்பெண்மணி அதற்கு இன்னும் உடன்படவில்லை.

"அவ்வருமைச் செல்வியின் மணுளரும் அவர் குடும் பத்தினரும் இம்மங்கையை வரிசைகள் பல கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தியும் வரிசைகள் அவ்வளவுக் குச் செய்ய இயலாததால் அம்மங்கையைப் புறக்கணித்துத் தந்தையகத்திலேயே விட்டு வைத்திருக்கின்றனர். என்ன சொல்லியும் அவர்கள் கேளாராய் அப்பெண்ணின் வாழ்க் கையைக் குலையச்செய்து வருகின்றனர். இம்மாதிரியான தம் சமூகக்கொடுமைகளையும் தம் சமூகத்தினரின் இழிதகு செயல்களையும் அப்பெண்மணியின் தந்தை வெறுத்து அச்சமூகத்தினருடன் மிகுதியாக உறவு கொண்டாடுவ தில்லை," எனவும் தெரிவித்தார்.

"அவர் குடும்பத்தைத் தாங்க மாதம் ஒன்றுக்குக் குறைந்தது 50 அல்லது 60 ரூபா கொடுத்தால் போதும். அவர் நான் போய்க்கூப்பிடின் கட்டாயம் வருவார். அதுவும்

புதிதாகத் தோற்றுவிக்கும் முத்தமிழ்நிலையத்தின் முக்கிய நோக்கங்களை அவர் கொள்வாராகில் கண்டிப்பாய் உடன் படுவார். ஆனால், துவக்கத்திலேயே திங்கள் ஒன்றுக்கு 50 அல்லது 60 ரூபா அவருக்கு ஊதியம் கொடுக்க நிலைய நிதி இடந்தருமா என்ற ஐயப்பாட்டினால் தான் தயங்கிக் கொண்டிருக்கின்றேன்,'' என்றும் கூறினார். 'நீங்கள் என்னுடனேயே இருங்கள்,' என்று கவி கூறியதற்குத் தாம் கவிபுனையும் வன்மை இல்லாததுபற்றி வருத்தம் தெரிவித்தபொழுது, இரண்டு மாதங்கள் 'என்னுடன்கூட இருப்பின் கவி பாடும்படி செய்துவிடுகிறேன்,' என்று கவி தம்மிடம் கூறியதாகவும் கூறினார்.

கானாடுகாத்தானில் இம்முத்தமிழ்நிலைய அமைப் புக்கு வை. சு. மஞ்சுளாபாய்—சண்முகம்—இருவரும் அரும்பாடுபட்டு வருவதாயும், இதற்கென இன்பமாளிகை என்ற பெயருடன் ஒரு இல்லம் அமைத்து அதில் அவர்கள் இருந்து தொண்டாற்றி வருவதாயும், திரு. மஞ்சுளாபாய் அம்மையார் தமிழ்ப்பணியில் ஈடுபட்டுள்ள சீர்மையையும், அவர்கள் விருந்தோம்பும் சிறப்பினையும் நண்பர் விளக்கி மகிழ்வித்தார்.

தமிழ்மொழி ஆக்கத்தொடர்பாக நான் சில எண்ணங் களை என் புது நண்பருக்குத் தெரிவித்தேன்.

i. புதுவைக்கவியின் விரிவான வாழ்க்கைவரலாறு ஒன்று விரைவில் தமிழில் வெளிவரவேண்டும்.

ii. புதுவைக்கவியின் வரலாறும், கவிதைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடல்வேண்டும்

iii. ஆங்கிலத்தில் கவியின்வரலாற்றை எழுதவும் அவருடைய தமிழ்ப்பாட்டுக்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் நானே முயலுவேன் என்றும் தெரிவித் தேன்.

நான் சொன்னவற்றை மகிழ்வுடன் ஏற்று, கவியின் வாழ்க்கைவரலாற்றுக் குறிப்புக்களைத் தமிழில் தாமே

தொகுத்துத் தருவதாயும், என்னைக் கவியவர்களின் சில தமிழ்ப்பாட்டுக்களை மொழிபெயர்த்தனுப்புமாறும், அவற்றை வெளியிட்டபின் பிற பாட்டுக்களையும் மொழி பெயர்க்க உடன்பாடு வாங்கி அனுப்புவதாயும் தெரிவித்தார்.

இப்படியாக நாங்கள் அளவளாவியிருந்து பிறகு பிரிந்தோம்............

தமிழ்ப்பாக்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் தவிர மற்றை முயற்சிகள் படிப்படியாகக் கைகூடி வருவதாகத் தெரிகிறது முத்தமிழ்நிலையம் நிறுவப்பட்டு விட்டது. கவியின் சில நூல்கள் புதிய கண்கவர் வனப்பு வாய்ந்த முறையில் வெளிவந்துவிட்டன. இசையரங்கும் ஏற்பாடாகி, இசை, நடிப்புக்கள் முதலியன நடைபெற்று வருகின்றன. மொழி பெயர்ப்புத் தொண்டையும் விரைவில் துவக்கவேண்டும் என்ற அவாவுடன்தான் நானிருந்து வருகிறேன்!*

---

* இப்பொழுது சில என்னால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

21. புதுவைக் கவியைக் காணல்

4-1-45-ல் நாமக்கல்லுக்குச் சென்றிருந்தேன். அக் கூற்றத்தைச் சேர்ந்த போடிநாயகன்பட்டி திரு. செல்லப்ப ரெட்டியாரைப் போய்ப் பார்த்து அளவளாவி வரவேண்டு மென்று என் நண்பர் காதருக்குத் தெரிவித்து அதற்காக ஒருநாளும் குறிப்பிட்டேன்.

மறுநாட்காலை நான் சிற்றுண்டிக்காகத் தெருவில் நடந்து செல்ல, எதிர்பாராத வகையாய் செல்லப்பர் மலர்ந்த முகத்துடன் 'வாருங்கள்! எப்பொழுது வந்தீர்கள்! நாம்போய்ச் சிற்றுண்டி உண்டுவருவோமே,' என்று உழு வல் அன்புடன் என்னை அழைத்தார். என் நண்பர் காத ரும் நானும் தங்களைக் கண்டுவரத் தங்கள் ஊருக்கே வருவ தெனத் திட்டம் போட்டிருந்தோம்; தாங்களே எதிர் பாராத வகையில் இங்குத் தோன்றிவிட்டீர்கள். மிக மகிழ்ச்சி!' என்று சொல்லி, சிற்றுண்டி உண்டு என் தங்க லுக்கு வந்து சேர்ந்தோம். நான் நினைவுமலர் என்று மகுடஞ்சூட்டி எழுதியுள்ள சில பகுதிகளை அவரிடம் காட்டினேன். அவர் படித்து மகிழ்ந்தார். தம் பழைய இசையாசிரியர் திரு. சிவசாமி ஐயர் நாமக்கல் வந்துள்ள தாகவும், அவர் கோவைக்குத் திரும்பிப்போவதாகவும் தெரிவித்தார். ஆனால் அவரைப் பார்த்துவரும் பேறு எனக்குக் கிட்டவில்லை.

பிறகு புதுவைக் கவியரசு பாரதிதாசனார் புதிதாக இயற்றியுள்ள 'அழகின் சிரிப்பு' போன்ற நூல்களில் இருந்து சில பாக்களைத் தம் இனிய குரலில் பாடிக் களிப் பூட்டினார். புதுவைக்கவியின் 'இன்ப இரவு' என்னும் தனிச்சிறப்பு வாய்ந்த நாடகத்தைச் சேலம், நாமக்கல் முதலிய இடங்களில் நடத்தி மக்களிடை வியப்பூட்டி யதைப்பற்றி யெடுத்துரைத்தார். மேலும் பல அருமையான நூல்கள் பாரதிதாசனார் எழுதி வருவதாயும், அவை விரைவில் வெளிவரும் என்றும் கூறினார்.

நான் வேறுவேலையாக வெளியில் போகவேண்டியிருந்ததால் விடைபெற்றுச் சென்றேன். திரும்பவும் மாலையில் சந்திப்பதாகச் சொல்லி அவரும் சென்றார்.

நடுப்பகல் வேளை. நான் உண்டுகொண்டிருந்தேன். அவ்வமயம் என் நண்பர் ஒருவர் வந்து, 'பாரதிதாசன் வந்திருக்கிறார். குடும்பத்துடன் வந்துள்ளார். உணவு நேரம். நான் உங்களைப்பற்றிச் சொன்னேன். உங்களைக் கண்டு அளவளாவ விரும்புகிறார். இன்னும் இரண்டுமணி நேரம் தான் நாமக்கல்லில் தங்கி இருப்பார். அதற்குள் நீங்கள் வந்து பார்க்கலாம். உண்டு வருகிறீர்களா?' என்று கேட்டார்.

தனிப்பெருங் கவி பாரதிதாசனாரைக் காணவேண்டும் என்று பல்லாண்டுகளாக அவாவுற்றிருந்த எனக்கு, எதிர்பாராத வகையில் திடீரென இப்பேறு கிட்டுவதுபற்றி அளவிலா மகிழ்ச்சி கொண்டேன். 'முன்னே சென்று அறிவியுங்கள்; இதோ வந்துவிட்டேன்,' என்று சொல்லி, உணவைத் துரிதத்தில் முடித்துக்கொண்டு அவரைக் காண என் நண்பர் காதரையும் அழைத்துக்கொண்டு அவர் தங்கியிருந்த இயக்கி நிலையத்துக்குச் சென்றேன்.

அங்கே எண்ணெய், நாள்தாள் முதலியன விற்பனை செய்யும் ஒரு குறுகிய கடையில் உட்புறத்தில் ஒரு இள நண்பருடன் உரையாடிக்கொண்டிருந்தார் கவிஞர். நான் அவரை அணுகி அஞ்சலி செய்தேன். அவர் முகமலர்ந்து கைகூப்பி வரவேற்றார். என் நண்பர் செல்லப்பர் பக்கத்திலிருந்து என்னை அவருக்கு அறிமுகப்படுத்தினார்.

நாங்கள் ஆங்கிருந்து அரசியற் செய்திகள், நூல் வெளியீடு, காகித அருந்தல், தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பு முதலியவற்றைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

முகப்பொலிவும், வீரத் தோற்றமும் உடையவர் கவிஞர். கண்ணாடி போட்டிருந்தார். வெட்டிவிட்ட சுருட்டைத் தலைமயிர், பரந்த எடுப்பான முகமும் நெற்றி,

விரிந்த புருவங்கள், சற்று கனத்த உடல், சிவப்பு நிறம், குழந்தையுள்ளம். ஒரு பனியனும் மேல் அங்கியும் போட்டிருந்தார்.

தாம் தம் குடும்பத்துடன் தம் மருமகன் ஊராகிய வேலூருக்குத் திடீரெனப் போகவேண்டி வந்தமையின் நாமக்கல் வந்ததாகவும், அதனால் நாமக்கல் நண்பர்களுக்கு முன்னுடியே அறிவிக்க முடியாமற் போயிற்றென்றும் தெரிவித்தார்.

இயக்கி வருவதற்கு நேரம் இருக்கிறது என்று தெரிந்தவுடன், அவரை அவர் குடும்பத்துடன் நான் தங்கியுள்ள இடத்துக்கு 'ஏன் அழைத்துச் செல்லலாகாது?' என்ற எண்ணம் உண்டாயிற்று. அதை அவரிடம் தெரிவித்தேன். உடனே சற்றும் தடையின்றி அந்த எரிக்கும் வெயிலில் தம் குடும்பத்துடன் என் வேண்டுகோளின்படி நான் தங்கியுள்ள இடத்துக்கு நடந்துவந்தார். அங்கு மேலும் பல செய்திகளைப்பற்றிப் பேசினேம். நூல்களில் தாள், அச்சு, அட்டை முதலியன எப்படியிருக்கவேண்டும் என்று விவாதித்தோம். நூல்கள் நல்ல வழுவழுப்பான உயர்ந்த காகிதத்தில், நல்ல அச்சில், கண்கவர் வனப்பு வாய்ந்த கட்டடத்துடன் வெளிவரவேண்டும் என்றும், அவற்றை வனப்பில் மிஞ்சும் வெளியீடுகள் வேறு இருக்கக் கூடாது என்றும் உணர்ச்சியுடன் கூறினர் கவிஞர். பிறகு மட்டத்தாள் குறைந்தவிலைத் தமிழ்வெளியீடுகளைப் பற்றிப் பேசும்பொழுது குழந்தை உள்ளத்துடன் சிரித்துக் கொண்டு, ஒருவகை இரக்கப் பார்வையோடு கைகளை அசைத்து, அவ்வெளியீடுகளைத் துணியால் மூடிக் கட்கத்தில் வைத்து நூல்விற்பனைக்கு எடுத்துச் செல்லவேண்டியிருக்கிறது என்றும் அவற்றை 'இக்கின்பாதம்'* நூல் விற்பனை அலமாரியில், மற்ற கண்கவர் வனப்பு வாய்ந்த ஆங்கில நூல்களுடன் அடுக்கி வைக்க வெட்கமாயிருக்கிற தென்றும் நூல்விற்பனை செய்யும் நண்பர் ஒருவர் தம்மிடம் கூறியதாகவும் தெரிவித்தார்.

---

* Higginbotham.

கவிஞரின் நூல்களை நல்ல விளம்பரத்துடன் விற்பனை செய்யப் பல இடங்களில் நல்ல நூல்விற்பனைக் கடைகள் தோன்றவேண்டும் என்று நான் கூறியதற்கு, அவர் 'நம் நூல்களை யெல்லாம் நல்ல பதிப்புகளாக வெளியிட்டு, போதிய நூல்கள் வெளி வந்ததும் அந்நூல்களை அமைக்க அழகுவாய்ந்த நூல்தாங்கிகள்* தயாரித்து, விற்பனை செய்பவர் ஒவ்வொருவருக்கும் அனுப்பிவைக்கவேண்டும் என்றும், நம் நூல்களைச் சேர்ந்தாற்போல் கோவையாக வாங்குவோர்க்கு அச்சுவடிகளை நூல்தாங்கியுடன் விற்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும், இப்பொழுதும் ஒவ்வொரு நூலும் வெளியானவுடன் பல சில்லறை வணிகர்கள் நாற்பது, ஐம்பது, நூறு என நூல்களின் படிகள் தேவையென்று எழுதிப் பெற்று வருகிறார்கள் என்றும், சில மாதங்களுக்கு முன் வெளியான தம் நூல்களின் படிகள் இப்பொழுது கிடைக்கவில்லையென்று நூல் வெளியீட்டாளரே தெரிவித்ததாகவும் அறிவித்தார். அது கேட்டு நான் உவப்படைந்தேன்.

'தங்களுடைய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க முயன்று வருகிறேன்,' என்று நான் தெரிவித்த போது, 'ஆம் செய்யவேண்டும், விரைவில் செய்தல் நலம். ஒரு நண்பர் ஒரு சிறு நூல் ஒன்றை மொழிபெயர்ப்பதாகச் சொல்லிப் பல மாதங்கள் ஆகியும் இன்னும் பாதிகூட முடிக்கவில்லை என்றும், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தால்தான் பிறமொழி வழங்கும் அயல்நாடுகளிலும் பரவ இடமுண்டென்றும், மொழிபெயர்ப்பு ஆக ஆக அனுப்பிவைத்தால், மிகச் சிறந்த முறையில் வெளியிடலாம் என்றும் தம் உள்ளக்கருத்தை வெளியிட்டார்.

இப்படியாக நாங்கள் உரையாடிக்கொண்டிருந்த பொழுது, இயக்கியில் அன்று மிகத் தொலைவுவந்த களைப்பும் கண் அயர்வும் அவருக்குத் தோன்ற, அதைக் கண்ட நான், 'சற்று உறங்கி யெழுங்கள், களைப்புத் தீரும்,' என்று சொல்லி, இரு உயர் எழுது பலகைகளைக் காட்டி அதில்

---

* Book—cases.

படுத்துக்கொள்கிறீர்களா? என்று கேட்க, 'வேண்டாம் இந்த ஒற்றை விசிப்பலகையே போதும்,' என்று சொல்லி, ஒரு தலையணையைமட்டும், தலைக்கு வைத்துப் படுத்துக் கொண்டு, மேலும் சற்று நேரம் எங்கள் பேச்சில் கலந்து கொண்டு, பிறகு சற்று உறக்கத்தில் ஆழ்ந்தார்.

அவர் நித்திரையில் ஆழ்ந்திருக்கும்பொழுது சிந்தனை அலைகள் பல வந்து என்னை ஆழ்த்தின. அவைகளிற் சில கீழ் வருவன.

நாமக்கல் இயக்கிநிலையத்தில் ஒரு சிறு கடையில் அவர் 'குப்பையில் மிளிரும் மாணிக்கமேபோல்' அமர்ந்திருந்ததும், இயக்கிவர நேரம் இருக்கிறது, நாம் வேறு இடம் போய்ச் சற்று இளைப்பாறி வரலாம் என்று அழைத்ததும், அட்டியின்றித் தம் குடும்பத்தவருடன் வெயிலில் நடந்துவந்து, சற்றும் வேறுபாடின்றி எங்களுடன் தங்கி அளவளாவியதும், அவர் மனைவி, மைந்தர், இரு பெண்கள் இவர்களின் எளிய உடையும், அன்பும், அடக்கமும் என் கண் முன் நின்று காட்சியளித்தன.

பிறகு, பல்லாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகள் என் அகக்கண்முன் தோன்றின. நான் 1921-ல் கும்பகோணம் கல்லூரியில் படித்தபொழுது எனக்கு தமிழ்ப்பற்று சிறிதளவேனும் இருந்ததென்று சொல்ல முடியாது. ஏதோ கல்லூரியில் படித்துத்தேறி அரசாங்கத்தில் உயர்வேலையில் அமரவேண்டும் என்றும், ஆங்கிலமொழியில் புலமையும், புகழும் பெறவேண்டும் என்றும், அவாவுற்றிருந்தேன் என்றுமட்டும் தான் சொல்லக்கூடும்.

அவ்வாறிருக்கையில் ஓர் நாள் கல்லூரி மாணவரிடையில் ஓர் பரபரப்பு ஏற்பட்டது. 'இன்று மாலை கும்பகோணத்துக்குப் பாரதியார் வரப்போகிறார். நான் போகப் போகிறேன். நீ வருகிறாயா? நீ வருகிறாயா?' என்ற பேச்சு எழுந்தது. தமிழ்ப் பற்றோ, நாட்டுப் பற்றோ வேரூன்றாத எனக்கு, ஆங்கிலப் புலமை, அரசாங்க அலுவல் முதலிய

வற்றைப் பற்றிக் கனவு கண்டு வந்த எனக்கு, பாரதியார் வரவு ஒரு அருமை வாய்ப்பாகத் தோன்றவில்லை. ஆங்கிலக் கவிதையுலகில் உலவுவதில் பெருமகிழ்ச்சி எனக்கு இருந்ததனால், ஒரு தமிழ்க்கவியைப் பார்த்து வர வேண்டும் என்ற எண்ணம் இருந்தபோதிலும், அரசாங்கக் கல்லூரியில் படித்து வருவதால் அரசியல் கவியாகிய பாரதியாரின் சொற்பொழிவைக் கேட்கப் போகலாமோ என்னவோ என்ற ஐயத்தைச் சிலர் எழுப்பியதால், நான் அவரைப் பார்க்க, அவர் பேச்சைக் கேட்கப் போகாதிருந்து விட்டேன்! பல மாணவர்கள் சென்று, பாரதியாரின் சொற்பெருக்கிலும், கவிதா வெள்ளத்திலும், நாட்டுவிடுதலை அலைகளிலும் மூழ்கி, புத்துயிர் பெற்றுத் திரும்பினர். பல நாட்கள்வரை அவர்களிடையே பாரதியார் பேச்சே பேச்சாக விருந்தது. என் தவற்றை யுணர்ந்தேன்; ஆனால் ஒரு வழியில் ஆறுதல் கொண்டேன். மற்ரோர் தடவை வருவாராகில் அக்கவியைக் கண்டிப்பாகக் காண்போம், கேட்போம் என்றிருந்தேன்.

ஆனால் அந்தோ! அவ் வெண்ணம் பாழாயிற்று. சில மாதங்களுக்கெல்லாம் உலகக் கவி பாரதியார் உயிர் நீத்தார் என்ற திடுக்கிடும் செய்தி வெளியாயிற்று! அரிய வாய்ப்பு ஏற்பட்ட காலை அதைப் பயன்படுத்திக் கொள்ளாது போனேனே என்று வருந்தினேன்; வருந்துகிறேன்.

இதைப் போன்று மற்றொரு நிகழ்ச்சி. கவி இரவீந்திரரின் கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள், சிறு கதைகள் முதலியவற்றை ஆங்கில மொழிபெயர்ப்புகள் மூலம் படித்து மகிழ்ந்த எனக்கு போல்பூரில் அவர் நிறுவியுள்ள நிம்மதி நிலயத்தை*ப்பற்றிக் கேட்டும் படித்தும் உளம் பூரித்த எனக்கு, அவர் பாடசாலையைப்பற்றி எடுத்துரைப்பது வழக்கமாயிருந்தது. அவருடைய பாடசாலைக்குச் சென்று அவருடன் அளவளாவி அங்குத் தங்கிப் பயிற்சி பெற்று வந்து அப்பாடசாலையைப் போன்று தென்னாட்டில் ஒன்று நிறுவ வேண்டுமென்றும், அப்படி நிறுவும்

* Shantiniketan

வரை தென்னாட்டிலிருந்து பல இளம் மாணவர்களையும் மாணவிகளையும் போல்பூர் பாடசாலைக்கு அனுப்பிப் பயிற்சி பெறச் செய்ய வேண்டும் என்றும் செட்டிநாட்டில் (திருப்பத்தூர் கூற்றத்தில்) சொற்பொழிவுகள் பல நிகழ்த்தியதன் விளைவாகச் சில செட்டிமார் ஒருநாள் என்னை யணுகி, 'நீங்கள் இப்பொழுது பார்த்துவரும் கல்வித் துணை ஆய்வாளர் பதவியை விட்டு விலகிவிடுங்கள். நாங்கள் உங்களிடம் மூந்நூறுஆயிரம்ரூபா ஒப்படைக்கின்றோம். அந்நிதியைக் கொண்டு தென்னாட்டில் தாகூர் கல்வி நிலையத்தைப் போன்று ஒன்று துவக்கி தலைமை தாங்கி நடத்துங்கள். வேண்டுமாயின் எங்களில் சிலரை ஒரு குழுவாக அமைத்து ஆய்வுரை கூற ஏற்பாடு செய்யுங்கள். ஆனால் அம்மாதிரி ஒரு குழு அமைத்துத்தான் ஆக வேண்டும் என்று கட்டாயமில்லை. உங்களிடம் எங்களுக்கு முழு நம்பிக்கையுண்டு. நீங்களே தனித்து நடத்தினும் சரி. செட்டிநாட்டில்தான் அந்நிலையத்தை அமைக்க வேண்டும் என்பதும் இல்லை. உங்கள் தஞ்சையைச் சேர்ந்த காவிரிப் பூம்பட்டினம் எங்கள் தொல் நகரம். இப்பொழுதும் ஆண்டுதோறும் நாங்கள் அங்குத் திருவிழா நடத்தி வருகின்றோம். அங்கு அந்நிலையத்தைத் துவக்கினும் எங்களுக்கு ஒப்புதலே,' என்று தெரிவித்தார்கள்.

திடீரென அரசாங்க வேலையை விட்டு விலகி, வேறு ஒரு பெரிய பொறுப்பை ஏற்குமுன் உலக அறிவிற் சிறந்த என் மாமா அவர்களைக் கலந்து ஒரு முடிவிற்கு வருவது நலம் எனத் தோன்றவே, அவரைக் கலந்தேன். அம்மாதிரி புதிய பெரிய பொறுப்பை ஏற்பதற்கு இன்னும் பல்லாண்டுகள் போகவேண்டும் என்றும் அரசாங்க அலுவலை விட்டு விலகுவது அவ்வளவு நலமன்று என்றும் அவர் தெரிவித்ததால், அதற்கிணங்கச் செட்டியார் நண்பர்களுக்குத் தெரிவித்தேன்.

ஆனல் கவி தாகூரையும் அவர் கல்லூரியையும் பார்த்துவர வேண்டும் என்ற அவா மேலிட்டு வந்தது. ஓர் அமயம் கவி தாகூர் சென்னைக்குத் தம் மாணவ நடிகர்

களுடன் வந்திருப்பதாகச் செய்தித்தாள் மூலம் அறிந்த நான் அவரைச் சென்று பார்த்து வரவேண்டும் என்று முயன்றும் பயனில்லாது போயிற்று. அதற்குப் பிறகு கவியைப் பார்க்கும் பேறு கிட்டாமலே போய்விட்டது.

இம்மாதிரி இரு பெரும் உலகக் கவிகளைப் பார்க்கும் பேறு இல்லாது போகவே, பாரதியாரின் நெருங்கிய தோழரும் பாரதியின் கவிதா இனத்தைச்சேர்ந்தவருமாகிய புதுவைக் கவியரசு பாரதிதாசனுரைக் கண்டு அளவளாவும் வாய்ப்பு கிட்டியது என் நற்காலமே என்று எல்லாம் நினைத்து மகிழ்ந்து கொண்டும் இடையிடையில் என் நண்பர் செல்லப்பர், கறுப்பண்ணன் முதலியோருடன் உரையாடிக்கொண்டிருந்தேன்.

அப்பொழுது இயக்கி வரும் நேரம் கிட்டிவிட்டதெனத் தெரியவே, கவியை எழுப்பிச் சிற்றுண்டி உண்பித்து இயக்கியில் அவரையும் அவர் குடும்பத்தினரையும் ஏற்றிவிட்டு வந்தோம்.

12-1-45ல் வேலூர் சென்றிருந்தேன். பாரதிதாசன் அவர்கள் தமிழ்த் திருநாளாகிய பொங்கலுக்கு அவர் மருமகன் ஊராகிய அவ்வூருக்கு வரப்போவதாக என்னிடம் அவர் முன்னதாகவே தெரிவித்திருந்ததால், வந்திருக்கிறாரா என்று பார்த்துவரச் செய்தேன். அவர் அன்று வரவில்லையெனத் தெரிந்தது. மறுநாட்காலை தனித்தமிழ்த் தொண்டராய புலவர் பொன்னம்பலனுருடனும், அவ்வூர் உயர்நிலைப்பள்ளித் தலைவர், திரு. ஆறுமுகனுருடனும் உரையாடிக்கொண்டிருந்தேன். எங்களுடன் அவ்வூர்ச் செல்வந்தர் ஒருவரும் இருந்தார். அப்பொழுது ஒரு நண்பரை அனுப்பிக் கவி வந்துவிட்டாரா என்று தெரிந்துவரச் செய்தேன். சற்று முன்தான் கவி வந்துள்ளார் என்று அறிந்தோம். உடனே எங்களுடன் இருந்த செல்வர், 'அப்படியானல் போய் அவரை அழைத்து வாருங்கள்,' என்றார். நான் குறுக்கிட்டு 'அது மரியாதையன்று. நாமே அவர் தங்கலுக்குச் சென்று பார்த்து வருவோம். வாருங்கள்,' என்று சொல்லி, திரு. பொன்னம்பலனுரும்

நானும் கவி தங்கியுள்ள அவர் மருமகனர் வீட்டுக்குச் சென்றோம்.

ஒரு சிறிய வீடு. குறுகிய உள் தாழ்வாரத்தில் தம் மருமகனருடனும், சில நண்பர்களுடனும் கவி உரையாடிக் கொண்டிருந்தார். உள் நுழைந்ததும், திரு. பொன்னம்பலனர் அவர்கள் கவிக்கு என்னைக் காட்டி, 'இவர்களைத் தெரியுமன்றோ?' என்று கேட்க, 'ஓ தெரியுமே. வாருங்கள் - உட்காருங்கள்' என்று முகமலர்ந்து வரவேற்றார். அமர்ந்து அளவளாவினோம். பல செய்திகளைப்பற்றி உரையாடினோம். அவற்றில் ஒன்று கீழ்வருமாறு:— தமிழில் பிறமொழிக்கலப்பைப் பற்றிப் பேச்செழுந்தபோது கவி உரைத்ததாவது: "நான் எழுதத் துவக்கிய காலத்தில் எளிய நடையில் எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் வழக்கத்திலுள்ள பிறமொழிச்சொற்களையும் சேர்த்து எழுதி வந்தேன். அப்படி எழுதுவதனுல் தவறில்லை என்று எண்ணியிருந்தேன்.

"நாளடைவில் தனித்தமிழ் உணர்ச்சி தமிழரிடை ஓங்கி யெழுந்தது. பிற இளம் புலவர்களிடமிருந்து எனக்கு நாடோறும் சராசரி ஐந்து முடங்கல்களேனும் வருவது இதுவரை வழக்கமாயிருந்து வருகிறது. அம் முடங்கல்களுடன் அவர்கள் தங்கள் செய்யுட்களையோ, கட்டுரைகளையோ அனுப்பி, என் திருத்தத்தை அல்லது மதிப்புரையை நாடுவார்கள். அவற்றை நான் பார்வையிட்டு அனுப்புவது வழக்கம்.

"செய்யுள் இயற்றுவதே கடினம். அதிலும் இலக்கணப் பிழையின்றி எழுதுவது அதனினும் கடினம். ஆக பிறமொழிக் கலப்பின்றியும் எழுதவேண்டும் என்று இளம்புலவர்களை வற்புறுத்தினல் செய்யுள் இயற்றுவதையே நிறுத்திவிடக்கூடிய நிலை ஏற்பட்டுவிடின் என் செய்வது," என்று சிந்தித்து வந்தேன்.

"ஆனல் நாளடைவில் எனக்குத் திருத்தத்திற்கோ மதிப்புரைக்கோ தங்கள் கவிதைகள், கட்டுரைகள் முதலி

யன அனுப்பி வைக்கும் இளம் எழுத்தாளர்கள் என்னை 'என்ன, உங்கள் கவிதைகளில் இன்னும் பிறமொழி விரவி வரக் காண்கின்றோமே! இப்படி நீங்களே இனியும் செய்து வரலாமா?' என்ற கேள்வி போடத் தொடங்கி விட்ட னர்!

"அவர்களின் தூய தமிழ்நடையும் புத்துயிர்க் கேள்வியும் என்னை எழுப்பிவிட்டன! சிந்தனையில் ஆழ்ந் தேன். தூய தமிழில் எழுதப்பட்ட பாக்களையும் பிற மொழிக்கலப்புக் கவிதைகளையும் பிறரைப் படிக்கச் சொல்லிக் கேட்டேன். ஒரு புதுமையைக் காணலுற் றேன். தனித்தமிழ்க்கவிதைகளைப் பிறர் படித்துக் கேட்கும்பொழுது அவை இனிமை ஊட்டி உண்மை உணர்ச்சியை எழுப்புகின்றன. கவிதை வேறு, அதைப் படிப்பவர் வேறு, கேட்பவர் வேறு, என்றநிலை படிப்படி யாக மறைந்து மூன்றும் ஒன்று, எல்லாம் ஒன்றே என்ற ஒப்பற்ற நிலை ஏற்படுகிறது!

ஆனால் பிறமொழி விரவிவரும் கவிதைகளைப் படித் துக் கேட்கும்பொழுது அவ்வளவு இனிமையும், இயற்கை யுணர்ச்சியும், ஒருமைப் பாடும் எழவில்லை. கவிதை வேறு, படிப்பவர் (பாடுபவர்) வேறு, கேட்பவர் வேறு என்ற பிரிந்தநிலை மாறவில்லை. ஏதோ ஒலியெழுந்து பொருள் மட்டும் விளங்குகிறது.

இப் பேருண்மையை நான் உணர்ந்தபின் நானும் தனித்தமிழிலேயே பாக்களை ஆக்க முனைந்தேன்—ஆக்கி வருகின்றேன். இப்பொழுது நூறாயிரக் கணக்கில் கவிதை கள் புனைய நேரிடினும் ஒரு சொல்லேனும் பிறமொழி யின்றி இனிய எளிய முறையில் எழுதக் கூடும் என்ற துணிவு—எழுதவேண்டும் என்ற உறுதி ஏற்பட்டுவிட்டது. ஆகையினால் தமிழின் பெருமையும் இனிமையும் தனித் தமிழில்தான் காண இடமுண்டு," என்று தெளிவுறுத்தி னார். பிறகு நாங்கள் விடைபெற்றுக்கொள்ளும்பொழுது 'நாமெல்லாம் இவ்வூரில் ஒன்றுகூடி யிருப்பதால் என்

நீங்களும் பொங்கற்புதுநாளுக்கு இங்கே தங்கி எங்களுடன் இருந்து கொண்டாடிவிட்டு ஊர் திரும்பக்கூடாது,' என்று என்னை அன்புடன் கவி கேட்டார். நான் அவருடைய உழுவலன்புக்கு நன்றி தெரிவித்து, இப்படிப் பட்ட வாய்ப்பை இழக்க மனம் இல்லை யென்றும், ஆனால் அலுவல்மேல் உடனே சேலம் திரும்பவேண்டி இருக்கிறது என்றும் அறிவித்து விடைபெற்றுச் சென்றேன்.

பிறகு அன்று மாலை 3 மணியிருக்கும். நான் இயக்கி ஏறப் போகுமுன் மீண்டும் ஒரு முறை கவியரசரிடம் விடைபெற்றுப் போவோம் என்று அவர் தங்கியுள்ள அவர் மருகர் வீட்டை யடைந்தேன். கவி தென்படவில்லை. தம் அருமைத் தந்தை வந்ததால் விருந்து முதலிய அதிகப்படி வேலைகளைச் செய்துவிட்டு, உணவு முடித்து, தந்தை உறங்கப்போன பிறகு, சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று அப்பொழுதே வீட்டுத் திறந்த வாசலில் உள்ள ஒரு சிறு மேடையில் வந்து உட்கார்ந்த அவர் தம் அருமைப் புதல்வி ஓடோடியும் வந்து, 'வாருங்கள் ! உட்காருங்கள் !' என்று சொல்ல, நான், 'ஐயா என்ன செய்கிறார்கள்?' என்று கேட்டேன். 'அப்பா படுத்துறங்குகிறார். சற்று இப்படி உட்காருங்கள். இதோ வந்து விடுவார்,' என்று தமிழ் அன்பு மிளிரக் கூற, நான், 'காலையிலேயே அவரிடம் விடைபெற்றுக்கொண்டு விட்டேன். மீண்டும் ஒரு முறை பார்த்துப் போகலாம் என வந்தேன். அவர் தூங்குவதால் அவரை எழுப்பவேண்டாம். இன்னார் வந்துவிட்டுப் போனதாகச் சொன்னால் போதுமானது, நான் போய் வருகிறேன்,' என்று சொல்லிவிட்டு வந்தேன்.

அந்தப் பெண் கவியரசரின் மூத்த பெண்ணாகும். அப் பெண் என்றால் கவிக்கு உயிர். அது திருமணம் ஆவதற்குமுன் 'அப்பா வீட்டுக்கணக்கு வழக்குகளையும், கடிதப் போக்குவரத்துக்களையும் கவனிப்பதுண்டு,' என்று ஒரு நண்பர் கூறக் கேட்டிருக்கிறேன். அப் பெண் தன் தந்தையிடம் காட்டும் உழுவல் அன்பும் விருந்தினரிடம் காட்டும் பரிவும் அதன் இல்லறப் பண்பும் போற்றற் குரியன. அப்

பெண்ணின் பெயர் சரசுவதி. அப் பெண்ணின் கணவர் கண்ணப்பர். ஒரு சிறந்த தமிழ்ப் புலவர். தமிழ்ப்புலவர் பட்டம்பெற்றுச் சிறிது காலம் உயர்நிலைப் பள்ளியில் வேலை பார்த்தவர். இவர்களின் அருமைக் குழந்தையின்—கவியரசரின் முதற் பெயரனின்—பெயர் புகழேந்தி.

கவியின் மூத்த புதல்வர் (சரசுவதியின் தம்பி) மன்னர் மன்னன் ஆவார். இவர் சிறந்த ஓவியக்காரர். புதுவையில் உயர்படிப்பும் படித்து வருகிறார். பிற இரு பெண்களின் பெயர்கள் முறையே, வேனிலார், அழகியார். கவியரசரின் இல்லக் கிழத்தியின் பெயர் பழனியம்மா.

'நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்' என்று கவி பாரதிதாசனார் எழுதியுள்ளது, அவர் தம் குடும்பத்துக்கே பொருந்தும்!

---

22. கற்பனைக் கட்டுரை

ஒரு பருக்கையைப் பற்றிய நினைவுகள்

நண்பகல். நான் உண்டு சாய்வு நாற்காலியில் மேனோக்குடன் சாய்ந்திருந்தேன். இன்று ஏதேனும் ஒரு புதிய கட்டுரை யெழுதவேண்டும் என்று சிந்தித்த வண்ண மிருந்தேன். ஒன்றும் தோன்றவில்லை. என் மேனோக்கைக் கீழிறக்கினேன். அது என் உடல்மேல் சென்றது. ஒரு வெண்பருக்கை (சோறு) வயிற்றுப் பையுள்ள இடத்துக்கு நேர் மேலே ஒட்டிக்கிடந்ததைக் கண்ணுற்றேன். ஆ! என்ன விந்தை! சோற்றுப் பை உடலில் எங்குள்ளது என்று இப் 'பருக்கை' எவ்வாறு உணர்ந்தது. உணவுப் பை நம் உடலில் மார்பின் அடியில் இடப்புறமாகச் சாய்ந் துள்ளது என்று நாம் எப்பொழுதோ படித்தது இப் பற்றினலல்லவா நினைவுக்கு வருகிறது! அம் மறை விடத்தை இப் பருக்கை உணர்ந்ததுதான் எவ்வாறு? இச் சிறு பருக்கையை உணவுப் பையில் சிறைபிட நான் செய்த முயற்சி வீணாகச் சண்டையிட்டு வெற்றிபெற்றுச் செருக் குற்ற சேவல் கூரைமேல் ஏறி நின்று கொக்கரிப்பதைப் போல, அச் சிறையிடு பையின் மேலேயே வந்து நின்று என்னையும் என் சிறைப்பையையும் தன் வெளிறின சிறு உருவத்தால் நகைத்து ஏளனம் செய்வதுபோல் தோன் றிற்று. எனக்குச் சீற்றம் பொங்கி எழ அதைக் கடுமை யாக நோக்கினேன். அச் சீற்ற நோக்கை அது பொருட் படுத்தியதாகத் தோன்றவில்லை. அது முத்தை யொத்த புன்முறுவல் பூத்து என்னைக் கடைக் கண்ணால் நோக் கிற்று!

"நீ என்ன முத்தென நினைத்துக் கொண்டாயோ? உன் குறுநகையில் ஆழியின் செல்வத்தை யொத்த ஆழ்ந்த கருத்துக்கள் உளவோ?" என்று நான் வினவ அது நகைதது, எண்ணற்ற எண்ணங்களையும் காட்சிகளையும் என்னுள் எழுப்பி நின்றது. அவற்றுள் சில கீழ் வருவன :—

இக்காலமோ போர்க்கால அலங்கோலம் முற்றுப் பெறாத காலம். அரிசியோ பங்கீட்டில் அகப்பட்டு உரு மாறி, மணமாறி, நிறமாறி—தடுமாறி வருங்காலம். ஒரு 'மணி' அரிசியைப் பல 'மணி' செலவு செய்து பெறும் காலம். இவ்வளவு இக்கட்டில் வரும் அரிசியை—என் அரசியை யென்றே சொல்லலாம்—உடலில் உள்ள சூட்டைக்கொண்டும் உமிழ்நீரைக் கொண்டும் பக்குவப்படுத்திப் பயனுறுத்தலாம் என்றாலும் அதுவும் கூடுமாறில்லையே! உடலில் போதிய சூடுதானுளதா? இல்லையே! ஒரு அரிசியை வேகவைக்க வேண்டுமாயினும், வீட்டைக் காட்டி, சீட்டை நீட்டி, கூட்டம் நீக்கி, 'மணி'யைப் போக்கி குழாய்த் தண்ணீர்க் கொணரினும் விறகெங்கே என்கிறது கன்னெஞ் சரிசி! ஆ! விறகுக் கெங்குச் செல்வது? சிறகா வுளது காடு சென்றேனும் கொணர? இப்பொழுது விறகு என்றால் குதிரைக் கொம்பாகவன்றோ யிருக்கிறது. இதற்கென் செய்வது என்று மனம் நொந்து சூடேறி அரிசியை உருட்டி நோக்கினும் இச் சூடும் போதாது. 'விறகுக்கு வழிசெய்' என அமர்த்தலாக ஆணையிடுகிறது அரிசி!

ஊழ்வினையைக் கடிந்து, இடித்துப் புடைத்து சீட்டைக் காட்டி விறகை—கேடுற்ற விறகை—ஆ உணவை உன்னித் தாளம் போடும் நா அக் கேடுற்ற விறகின் இழி பெயரையும் சொல்ல நடுக்குற்று வறண்டு நிற்கிறது— வாங்கிவந்து பொங்கத் துவக்கினால் வீட்டில் இருப்புக் கொள்ளவில்லையே! நரகல் நாற்றமுடன் மேகக் கூட்டம் போல்—ஆனால் தண்முகில் அல்ல—கண்ணைக் கெடுக்கும் —எழுத்தை மறைக்கும்—கட்டுரையைக் குறைக்கும்—என் நீட்டும்—புகை வந்து சூழ்ந்து இடையூறு செய்கிறதே!

வள்ளுவர் காலத்தில் சோறு விறகு தண்ணீருக்கு இவ்வளவு பஞ்சம் இருந்ததில்லையே! அப்படியிருந்தும் அக்காலத்திலே திருவள்ளுவர் உண்ணும்பொழுது கீழே சிந்தும் பருக்கையை அலசியுண்ண இலையருகில் ஒரு கிளிஞ்சில், அதில் நீர், ஒரு ஊசி முதலியன வைத்திருப்பது

வழக்கம் எனப் படித்துள்ளோமே? அப்படியிருக்க இவ் இக்கட்டான காலத்தில் இப் பருக்கையை இப்படிச் சந்தி சிரிக்கவிட்டது யார்? நானா? என் மனைவியா? கிளிஞ்சில் எங்கே? நீர் எங்கே? ஊசி யெங்கே? ஏன் இவற்றையெல் லாம் என் பக்கலில் என் மனைவி வைக்கவில்லை? நான்தான் வள்ளுவர் வழக்கத்தைப் பல தடவை அவளிடம் கூறியுள் ளேனே! என்றெல்லாம் நான் எனக்குள் எண்ணி, வாதாடி வருகையில் என்மேல் அமர்த்தலாகச் சாய்ந்து கிடந்த பருக்கை மிளிரிக் குலுக்கெனச் சிரிப்பதுபோற் றோன்றிற்று.

என்ன! உன்னுடன் முத்தை ஒப்பிட்டுப் பல படி யாகப் புகழ்ந்தேன் என்ற செருக்கா உனக்கு? என்று நான் அதைச் சினந்து நோக்க, அது புன்முறுவலுடன் புதியதோர் காட்சியை என்முன் திடுமென விரித்து நின்றது!

அதைக் கண்ணுற்றேன். அது தமிழ்த் தாத்தா* நினைவு மஞ்சரியில் அன்னமும் சொன்னமும் என மகுடஞ் சூட்டிச் சித்திரித்துள்ள நிகழ்ச்சியெனக் கண்டேன்.

சேத்தூர் குறுநிலமன்னர் சிவப்பிரகாசத் திருவணு தத் துரை தம் மாளிகையில் உணவருந்துகிறார். அவரைக் காண சொக்கம்பட்டி அமைச்சரும் கவியும் ஆகிய பொன்னம்பலம் பிள்ளை வந்து சேர்கிறார். அவர் வரவைப் பணியாள் ஒருவன் 'துரை'யவர்களிடம் ஓடோடியும் சென்று அறிவிக்கின்றான். 'துரை'யவர்கள் கையை உதறி அப்படியே எழுந்து கைகழுவி விரைந்துவந்து அக மலர்ந்து, முகமலர்ந்து பிள்ளை அவர்களை வரவேற்கிறார். துரையவர்கள் எழுந்துவந்த பரபரப்பில் சரிவரக் கை கழுவாததால் வலக்கையில் ஒரு பருக்கையும், வழக்கமாக வலக்கையில் அணிந்திருக்கும் மோதிரம் இடக்கையிலும் காணப்படுகின்றன. இதைக் கண்ணுற்ற பிள்ளையவர்கள்

---

* உ. வே. சா.

துரையவர்களின் உழுவல் அன்புக்கு மகிழ்ந்து, புன்முறுவ லுடன் பாடுகிறார் :—

ஒரு கையிலே யன்ன மொருகையிலே சொன்னம்*
வருகையிலே சம்மான வார்த்தை—பெருகுபுகழ்ச்
சீமான் றிருவாழ் சிவப்பிரகாசத் திருவக்
கோமானுக் குள்ள குணம்

பாட்டுடன் காட்சி மறைந்துவிட்டதே!

எதற்காக இக் காட்சியை என் முன்கொணர்ந்து நிறுத்தினாய்? பொன்னுடன் இணைத்துப் பாடப் பெற்றால் பொன்னுக்கு ஒப்பாவையோ? ஏன் உனக்கு இந்தச் செருக்கு? என்று பருக்கையை நோக்கி நான் சீற, அது முல்லை யொத்த சிரிப்புத் தவழத் தன் அருமையை விளக்க எண்ணி மற்றொரு அறிவுக் காட்சியை என்முன் நிறுத்தி நின்றது!

என்னென்றுரைப்பேன் இக் காட்சியை! தமிழ்த் தாயின் கண்களெனக் கருதப்படும் இரு பெரும் புலவர்க ளைத்† தன்னகத் திட்டுப்பெரும் புகழ் பெற்றுள்ள புதுவை நகர். கடும் வெயில்வேளை. இராம புலவர் என்பார் சோர்வுற்று, பிரஞ்சுக்காரருக்கு அமைச்சராயும் தமிழ்ப் புலவர்களைப் புரப்போராயும் விளங்கும் அனந்தரங்கம் பிள்ளையின் மாளிகையை யணுகிக் காவலாளனை வினவு கிறார். பிள்ளையவர்கள் அறுவடைக்காக வயலுக்குச் சென்றுள்ளதாக அவன் தெரிவிக்கின்றான். புலவர் மேலும் தளர்வுற்று, வயலை யணுகுகிறார். பிள்ளையவர்கள் அறு வடை வயலில் சிந்திக்கிடக்கும் நெல் மணிகளையும் கதிர்க ளையும் பொறுக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து வியப்பும் வெறுப்பும் கொள்ளுகிறார். வெயிலின் கொடுமை பொறுக்கமுடியவில்லை. பசியினால் களைப்பு மேலிடுகிறது. வீட்டுக்குவந்து தம் களைப்பையும் வறுமையையும் போக்க வேண்டும் என்று குறிப்பாகப் பிள்ளையவர்களுக்கு அறி

* சொன்னம் - பொன். † கவி சுப்பிரமணிய பாரதியும், பாரதிதாசனும்.

வுறுத்துகிறார். பிள்ளையவர்கள் மேலும் நெல் மணிகளையும் கதிர்களையும் பரபரப்புடன் பொறுக்கி முன்னேறுகிறார். புலவர் சினக்குறி தோன்றச் சில சொற்களைச் சொல்லுகிறார். அதற்குப் பிள்ளையவர்கள் 'ஏன் பறக்கிறீர்?' என்று விடையிறுக்கின்றார். உடனே புலவர் சீற்றங் கொண்டு :—

"கொக்குப் பறக்கும்; புறா பறக்கும்;
குருவி பறக்கும்; குயில் பறக்கும்;
நக்குப் பொறுக்கி களும்பறப்பர்;
நானேன் பறப்பேன் நராதிபனே........."

என்று பாடுகிறார். பிள்ளையவர்கள் பொறுமையுடன் கரையேறிவந்து, புலவரைத் தம் இல்லத்துக்கு அழைத்துச் செல்லுகிறார். அவரை அமரச் செய்து அமுதுக்குப் பதிலாக இலை நிறையப் பொற்காசுகளைக் குவித்துவைத்து வயிறார உண்ணும் என்று கூறுகிறார். புலவர் திகைத்துத் தலை குனிந்த வண்ணம் இருக்கிறார். பிள்ளையவர்கள் புலவரைப் பார்த்து, 'ஏன் ஐயா புலவரே! நான் பொறுக்கிய நெல்மணிகள் உமது பசியைத் தணிக்க வல்லனவா, அல்லது குவித்து வைத்துள்ள இப் பொற்காசுகள் உம் பசியைப் போக்க வல்லனவா? இது தெரியாது என்னை விரைவுபடுத்தி இழித்துக் கூறினீரே! என்று இடித்துரைக்கிறார். புலவர் வெட்கி வாளா இருக்கிறார். பிறகு பிள்ளையவர்கள் புலவர்க்கு நல் விருந்தளித்து, பொற்குவியலையும் அப் புலவர்க்கே உவந்தளித்துப் பெருமைப் படுத்துகிறார் !..........

ஆ! இக்காட்சியும் மறைந்துவிட்டதே! என்ன இப்படிக் காட்சிமேல் காட்சி யளித்துக்கொண்டு வருகின்றனை! இதற்கு முடிவில்லையா? நீ எம்மாத்திரம்? நீ எவ்வளவு கால அளவு எடுத்துக் கொள்ளலாம் உன் பெருமையை விளக்க? பார் உன்னைத் தட்டி உருட்டி விடுகிறேன் என்று மேல் அமர்ந்திருக்கும் வெண்பருக்கையை நான் அம்பு நோக்கு நோக்க, அது பெருமித நகை நகைத்து, 'இதோ

பார் வெள்ளித்திரையில் மற்ருேர் வியத்தகு காட்சி! வேண்டுமானல்—ஏன் கூடுமானல் இரு கண்களையும்—அகக் கண்களையும் இறுக மூடிக்கொள் பார்க்கலாம்,' என்று கூறுவதுபோல மற்ருேர் காட்சித் திரையை விரித்து நிற்கிறது.

ஆ! இது என்ன!

"தெய்வ மணக்குஞ் செய்யுளெலாம்
சோறு மணக்கு மடங்களெலாம்"

என்று அருமையாய்ப் பாடிய தெய்வப்புலமை மீனட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் உறைந்து பெருமை பெற்றுள்ள திருவாவடுதுறை மடம்! சைவப் பெரியார் திருக்கூட்டம்! பந்திபந்தியாகச் சிவநெறிச் செல்வர்கள் அமுதுண்ண அமர்ந்துள்ளார்கள். கடைப்பந்தி யிறுதியில் வடமொழி, தென்மொழிச் செல்வர் சிவஞான அடிகளும் அமர்ந்துள் ளார். முன்பந்தியாளர் நல்லுணவு பரிமாறப்பெற்று ஆவ லுடன் உண்கிருர்கள். ஆனல் கடைப்பந்தியிலுள்ள அறி ஞர்கள் சிலர் ஒருவரையொருவர் பார்த்தவண்ணம் அவர் களுக்கு இடப்பட்ட உணவை எவ்வாறு உண்பது எனத் திகைக்கின்றனர்.

'யார் பொங்கியது இச் சோற்றை?' என்று கடை வரிசையாளரில் ஒருவர் சீற்றங்கொண்டு வினவுகிருர்,

"கொங்கன் வந்து பொங்கினன்*
கொழியரிசிச் சோற்றினை"

என விடையிறுக்கிருர் மற்ருெருவர்.

அவரை யடுத்துள்ளவர்,

"சங்கமங்கள் கூடியே
சாப்பிடத் தொடங்கின"

எனத் தொடர்ந்து பாடுகிருர்.

---

* உ. வே. சா. அவர்களின் நினைவு மஞ்சரி முதற்பகுதி.

மூன்றுமவர்,

"அங்கு மிங்கும் பார்க்கிறீர்
அமுதினிற் கண்ணில்லையே"

எனப் பாட, கடையில் அமர்ந்துள்ள சிவஞானமுனிவர்,

"எங்கள் பாவம் எங்கள் பாவம்
எங்கள் பாவம் ஈசனே"

எனப்பாடிச் செய்யுளை முடிக்கிறார்.

ஆ! காட்சி மறைகிறதே! என்ன இது! வேறுகாட்சி முளைத்தெழுகிறது.

ஆயிரக்கணக்கான மூட்டைகளைக் கள்ள அறையில் அடுக்கிவைத்துக் கும்பல் கும்பலாகப் பணமும் சில்லறையும் கொட்டிவைத்து மெல்லமெல்ல வந்து பார்த்துப் பார்த்துப் போகிறானே இவன் யார்? வெளியில் அல்லோல கல்லோலப்படுகிறது. அது என்ன? ஆ! அருமை மக்காள்! வாடி வதங்கி எலும்பும் தோலுமாகவும் கண்ணீரும் கம்பலையுமாகவும் அலையலையாக ஓலமிட்டு வந்து இந்த இரக்கமற்ற வணிகக்குன்றில் மோதிச் சிதைகின்றீர்களே! இந்த ஈரமிலா நெஞ்சினன் ஏராளமான அரிசி மூட்டைகளை அடுக்கிவைத்துக்கொண்டு 'மணி அரிசிகூட என்னிடம் இல்லை போங்கள்,' என்று வாய்கூசாது கூறி விரட்டியடிக்கின்றானே! இது என்ன முறைகேடு! பனியிலும் மழையிலும் வெயிலிலும் ஓயாது உழைத்து உங்கள் நெற்றி வியர்வை முத்துமுத்தாக நிலத்தில் விழ எழுந்த நெல்மணிகளை நிழலில் இருந்து கொள்ளைலாபம் அடிக்க மிதமிஞ்சிச் சேமித்து வைத்துக்கொண்டு நில அன்னையின் உண்மை உழைப்பாளராகிய உங்களைப் பட்டினியுடன் தெருவில் விடுத்து, பட்டுச் சாய்மானத்தில் சாய்ந்துகிடக்கின்றானே இக்கொடிய மகன், இது அடுக்குமா! ஆ! இக்கொடுமையைக் கண்டு பதறி யெழுபவர் யார்? உறுமிச் சீறுபவர் யார்?

இது என்ன காட்சி! வீர பாரதியாரின் குசேலரகம். கிழிந்த கோரைப்பாயிலிருந்து கவி துயிலெழுகிறார். அவர்

குழந்தைகள் வயிற்றைப் பிசைந்துகொண்டு அம்மாவின் கிழிந்த முன்றானையைப் பற்றியழுகின்றனர். அந்த அம்மையார் தன் அன்பரை நோக்கிக் கண்ணீர் உகுத்தவண்ணம் சிறார்களைத் தழுவிநின்று ஆறுதல் கூறுகிறார். இக் கொடிய வறுமைத் தீ கவியின் உள்ளத்தை எரிக்கின்றது. வெளியே ஏழை மக்களின் விண்மோதும் கூக்குரல். இது அவர் நெஞ்சைப் பிளக்கிறது. உருட்டி விழிக்கிறார். கண்கள் சிவந்து அனலைக் கக்குகின்றன. மீசை துடிக்கிறது. முறுக்கி எழுகிறார்.

> " தனி யொருவனுக் குணவிலை யெனில்
> சகத்தினை யழித்திடுவோம் "

என முழக்கி வாளேந்தித் துள்ளி வெளியே பாய்கிறார்.

'ஆ என்ன விந்தை! இருண்டுவிட்டதே! காட்சி மாயமாய் மறைந்துபோயிற்றே,' என்று கூறியவண்ணம் நான் கண்ணைக் கசக்கிப் புரண்டு படுத்தேன். பருக்கையெங்கே யென்று உற்றுநோக்கினேன். ஐயகோ! நான் புரண்டதனால் அது நசுக்குண்டு,

> 'பற்றற்றான் பற்றினைப் பற்றுக!'

எனக் களகளத் திறந்துபட்டது !

முற்றிற்று.